**தலைப்பு 282 – நீர்ப்பாசன திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 282 – நீர்ப்பாசன திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் நீர்ப்பாசன திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 ஆகஸ்ட் 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 நவம்பர் 10 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, இந்த நிதிக் கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீர்ப்பாசன திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக

ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவே அல்லது கூட்டாகவே தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள்

பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) கணக்காய்விற்குச் சமர்பபிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பின்வரும் கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு இணங்க முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் இணங்கியிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | இந்த அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|
| நிதியற்ற சொத்துக்களின் ஆரம்ப மீதியானது முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதியுடன் ஒத்திருக்காததன் காரணமாக மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியானது ரூபா 600,049,065 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 1.6.1(ஈ)(i) ஆதனம், பொறி மற்றும் உபகரணம் |

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பின்வரும் சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| முன்னைய ஆண்டிற்கான அறிக்கையின் பந்திக்கான தொடர்பு | அமுல்ப்படுத்தப்படாதிருந்த சிபாரிசுகள் | இந்த அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|
| 1.6.2.1(இ) நிதியற்ற சொத்துக்கள் | திணைக்களத்தின் காணிகளும் கட்டிடங்களும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். | 1.6.1(ஈ)(v) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

**(அ) வருமானப் பெறுவனவுகள்**

திணைக்களத்திற்குரிய வருமானப் பெறுவனவுகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| கல்கமுவ பயிற்சி நிறுவனத்தினால் 2020 - 2022 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட 31 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக கிடைத்த ரூபா 1,391,419 பணத்தை அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்குப் பதிலாக மூன்றாந் தரப்பினர்களுக்கு மீண்டும் கொடுப்பனவு செய்வதற்காக 6000-0-0-13-0-36-0-0 ஆம் இலக்க வைப்புக் கணக்கில் தற்காலிகமாக வைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக வருமானம் அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 6000-0-0-13-0-36-0-0 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கிற்கு கொண்டு வரப்பட்ட கல்கமுவ பயிற்சி நிறுவனத்தினால் 2020-2022 ஆண்டுகளில் நடாத்தப்பட்ட 31 பயிற்சி நிகழ்சித்திட்டங்களுக்காக கிடைத்த ரூபா 1,391,419 பணத்தில் ரூபா 971,241 பணம் தற்பொழுது அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளதுடன் மிகுதிப் பணத்தை தீர்த்து வைப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட குறிக்கோள்களுக்கு புறம்பான செயற்பாடுகளுக்காக வைப்புக் கணக்கினை பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். வருமானத்தினை சரியாக இனங்கண்டு கணக்கு வைத்தல் வேண்டும். இது தொடர்பான கணக்கீட்டு மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை மீளாய்விற்கு உட்படுத்தி தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## (ஆ) மூலதனச் செலவுகள்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான மூலதனச் செலவுகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | நிதி மற்றும் வெகுசனத் தொடர்பு அமைச்சினால் சொத்துக்கள் மற்றும் கிரயத்தை முகாமைத்துவம் செய்வதற்காக அரசாங்கத்தின் அனைத்து நிதியற்ற சொத்துக்களையும் ஆவணப்படுத்துவது சம்பந்தமாக திறைசேரி செயலாளர் வழங்கிய 2017 யூன் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியற்ற சொத்துக்களை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் செலவு விடயம் இலக்கம் 2103 (இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்), 2104 (கட்டிடங்களும் நிர்மாணங்களும்), 2105 (காணிகள் மற்றும் காணிகளை மேம்படுத்துதல்) மற்றும் 2506 (உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்) என்பவற்றின் கீழ் ரூபா 3,924,893,334 செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டில் நிதியற்ற சொத்துக்களாக ரூபா 1,622,157,943 மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2022 ஆம் ஆண்டில் மூலதன செலவுகளாக செலவு செய்யப்பட்ட ரூபா 2,302,735,391 தொடர்பாக நிதியற்ற சொத்துக்களை இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக நிதி நிலைமைக் கூற்றில் தேறிய | இந்த ரூபா 2,302,735,391 என்ற பெறுமதியில் ரூபா 2,006,672,433 பணம் தற்பொழுது அமுல்படுத்தப்பட்டுள்ள உமா ஓயா செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட செலவாகும். இச்செயற்திட்டத்திற்காக 2022 ஆம் ஆண்டிற்கு முன்னர் நீர்ப்பாசன அமைச்சின் கீழ் செலவு செய்யப்பட்டதுடன் 2022 சனவரி மாதத்திலிருந்து நிர்பாசன திணைக்களத்திற்கு நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க இச்செலவினை அமைச்சின் கீழ் மூலதனமாக்குவதா என்பது தொடர்பாக விளக்கமளிக்கப்படாததுடன் அதனால் 2022 ஆம் ஆண்டில் இப்பெறுமதி திணைக்களத்தின் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. தற்பொழுது இது தொடர்பாக நீர்ப்பாசன அமைச்சின் ஆலோசனையைப் | அனைத்து நிதியற்ற சொத்துக்களும் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து சான்றுபடுத்துவதற்கு முன்னர் அது தொடர்பாக உறுதிப்படுத்துவதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சொத்துக்கள் அப்பெறுமதியால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | பெற்று 2023 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மிகுதியான ரூபா 296,062,957 பெறுமதியானது ஆண்டில் மூலதனமாக்கப்பட்டுள்ளதுடன் நிலையான சொத்துக்களாக நீர்த்தேக்கங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | |
| (ii) | நிதியற்ற சொத்துக்கள் கூற்றில் சொத்துக்கள் குறியீட்டு இலக்கம் 6141403 இன் கீழ் நீர்த்தேக்கங்களுக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய ரூபா 645,032,909 பெறுமதியான அதிகரிப்புக்களை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | செயற்திட்டத்திற்காக ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட செலவுகள் CIGAS கணக்கீட்டு முறைமையின் கீழ் சுயமாக நிதியற்ற சொத்துக்களாக கணக்கீடு செய்தல் இடம்பெறாததனால் அச்செலவுகளை ஆரம்ப மீதிக்கு சேர்த்துக்கொள்ளல் அல்லது பரிமாற்றம் செய்தலாக கணக்கீடு செய்யப்படும். குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி ஆரம்ப மீதியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | சொத்துக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட அதிகரிப்புக்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் உறுதிப்படுத்தும் ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (iii) | சுற்றாடல் அமைச்சு, நீர் வழங்கல் அமைச்சு, நீர்பாசன அமைச்சு, விவசாயத் திணைக்களம் என்பவற்றின் மூலம் அவற்றின் செலவுத் தலைப்புக்களின் நிதி ஏற்பாட்டின் கீழ் நீர்ப்பாசன திணைக்களம் தொடர்பாக செலவு செய்யப்பட்ட ரூபா 2,030,061,729 மூலதனச் செலவினை உறுதியாக இனங்கண்டு நிதியற்ற சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏனைய திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் செலவுத் தலைப்பின் கீழ் சொத்துக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகளை மூலதனமாக்குவதற்காக அச்சொத்துக்கள் திணைக்களத்திற்கு எழுத்துமூலம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும். செலவுகள் தற்பொழுது | நீர்ப்பாசன திணைக்களத்திற்காக ஏனைய செலவுத் தலைப்புக்களிலிருந்து மேற்கொள்ளப்படுகின்ற மூலதனச் செலவுகளை இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்வற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | சட்டரீதியாக ஒப்படைக்கப்படாததனால் இச்செலவுகள் நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்யப்படவில்லை. | |

**(இ) வைப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களுக்குரிய வைப்புக்களை கொடுப்பனவு செய்தல் மற்றும் மீதிகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (i) அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டிற்கு புறம்பாக வருமானங்களை சேகரித்தல் மற்றும் செலவு செய்தல் அங்கீகரிக்கப்படாததால் விசேட சந்தர்ப்பத்தின் போது பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரச் சட்டத்தினைத் தவிர்த்து வேறு எந்த முறைமையிலும் நிதியத்தை உருவாக்க முடியாத போதிலும் நீர்ப்பாசன திணைக்களத்தினால் சிறு நீர் மின் நிலையங்களை நிர்மாணித்தல், மணல் அகற்றுதல் என்பவைகளை உள்ளடக்கிய வேறு பொருளாதார நடவடிக்கைகளுக்காக அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் மற்றும் பல்வேறு அரசாங்க நிறுவனங்களுக்கு சிபாரிசுகளை சமர்ப்பிப்பதற்காக ரூபா 10,000 வீதம் கட்டணத்தை அறவிட்டு அதனை 6000-0-0-13-0-36-0-0 ஆம் இலக்க மூன்றாம் தரப்பினர்களுக்கு மீண்டும் செலுத்துவதற்கான தற்காலிகமாக வைத்திருக்கும் வைப்புக் கணக்கில் வைப்புச் செய்து முறையான அதிகாரமின்றி செலவு செய்யப்பட்டிருந்தது. இந்த | 2020 ஒக்தோபர் 06 ஆந் திகதிய 2196/28 ஆம் இலக்க அதிவிசேட வர்தமானி அறிவித்தலின் பிரகாரம் நியமிக்கப்பட்ட சனாதிபதி செயலாற்றல் படையணி வழங்கிய “நிர்மாணக் கைத்தொழிலுக்காக பயன்படுத்துகின்ற கனியவளங்களை அகழ்தல், போக்குவரத்துச் செய்தல், மற்றும் வியாபாரம் செய்தல் என்பன தொடர்பான நடைமுறைக்கு இணங்க அனைத்து உரிய அரசாங்க நிறுவனங்களுக்கும் சிபாரிசுகளை வழங்குவதற்காக கட்டணங்கள் அறவீடு செய்யப்படும். அதற்கிணங்க நீர்ப்பாசன திணைக்களம் சிபாரிசுகளை வழங்குவதற்காக ரூபா 10,000 அறவீடு செய்யப்படும். அவ்வாறே நீர்ப்பாசன | திணைக்களம் பல்வேறு செயற்பாடுகளின் மூலம் சேகரிக்கும் வருமானத்திற்காக திறைசேரி அங்கீகாரத்தினைப் பெற்று அந்த வருமானத்தை சேகரிப்பதற்கு முறைப்படியான கட்டுப்பாட்டு முறைமையினை ஸ்தாபிக்க வேண்டியதுடன் அந்த வருமானத்தை சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். வைப்புச் செய்யப்பட வேண்டியதானது அதற்காக அங்கீகாரம் பெற்றவைகள் மாத்திரமானதுடன் அதிலுள்ள பணம் அதற்காக நிர்ணயிக்கப்பட்ட செயற்பாடுகளுக்காக மாத்திரம் செலவு செய்யப்படுதல் வேண்டும். |

| | |
|---|---|
| வைப்புக் கணக்கினுள் சிறிய நீர் மின்நிலையத்தை நிர்மாணித்தல், மணலை அகற்றுதல் என்பவைகளை உள்ளடக்கிய ஏனைய பொருளாதார நடவடிக்கைகளுக்காக கிடைத்த கட்டணங்களில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,008,171 மீதி காணப்பட்டதுடன் நி.பி 569 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் தொடர்பாக உறுதியாக இனங்காணக்கூடியவாறு கணக்குகள் வைக்கப்பட்டிருக்கவில்லை. | பணிப்பாளர் நாயகத்தினால் 2019-02-25 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் மணல் அகழ்தல் சிபாரிசுகளை வழங்குவதற்காக (வெளிக்கள பரீட்சிப்புக்களுக்காக) ரூபா 10,000 பணம் நிருவாக செலவுகளாக அறவீடு செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. திணைக்களத்தின் செலவுகளுக்காக வருடாந்த நிதி ஏற்பாடு இவ்வாறான மேலதிக சிபாரிசினை வழங்குவதற்காக ஈடுபடுத்துவதற்கு போதியளவில் இல்லாமை மற்றும் அதற்காக திணைக்களம் செலவு செய்தல் பிழையானது என்பதனால் சிபாரிசு வழங்குவதற்காக கட்டணம் அறவிடப்படுவதுடன் அக்கட்டண பணத்தை பொது வைப்புக் கணக்கில் வைத்திருந்து உரிய சிபாரிசுகளை வழங்கும் போது மேற்கொள்ளப்படும் செலவுகளை மீளளிப்புச் செய்வதற்கு ஈடுபடுத்தப்படும். ரூபா 6,008,171 பணம் மணல் அனுமதிப்பத்திரக் கட்டணத்திற்காக சிபாரிசினை வழங்குவதற்காக 6000-0-0-13-36-0-0 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கின் கீழ் பேணப்பட்டு வரும் ஒரு வைப்பாகும். |

| | | | |
|---|---|---|---|
| | | உரிய வைப்பினை விடுவிக்கும் போது அச்சிடும் படிவம் நிதிப்பிரமாணம் 206 இன் பிரகாரம் இரண்டு உத்தியோகத்தர்களினால் சான்றுபடுத்தி கொடுப்பனவு மேற்கொள்ளப்படும். | |
| (ii) | மூன்றாந் தரப்பினர்களுக்கு மீண்டும் கொடுப்பனவு செய்வதற்கான 6000-0-0-13-0-36-0-0 ஆம் இலக்க தற்காலிகமாக வைத்திருக்கப்படும் வைப்புக் கணக்கின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 192,455,677 ஆக இருந்ததுடன் அதில் சில வைப்புக்கள் உரிய செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தாது 2016 ஆம் ஆண்டிலிருந்து வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறு வைக்கப்பட்ட வைப்புக்களுக்கு மத்தியில் ரூபா 500,000 இற்கு மேற்பட்ட பெறுமதியுடனான 48 வைப்புக்களின் மொத்தம் ரூபா 167,757,978 ஆகும். | மூன்றாந் தரப்பினர்களுக்கு மீண்டும் கொடுப்பனவு செய்வதற்கான 6000-0-0-13-0-36-0-0 ஆம் இலக்க தற்காலிகமாக வைத்திருக்கப்படும் வைப்புக் கணக்கின் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 2016 ஆம் ஆண்டு தொடர்பாக ரூபா 32,179.96 வைப்பு பணம் காணப்பட்டதுடன் அப்பணம் தற்பொழுது அரசாங்கத்தின் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது.<br><br>மேலும் ரூபா 500,000 இற்கு மேற்படட்ட பெறுமதியுடனான 48 வைப்புக்களின் ரூபா 167,757,978 மீதியில் தற்பொழுது ரூபா 67,145,258.68 தொகை தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. | திணைக்களத்திற்கு பல்வேறு செயற்பாடுகளுக்காக கிடைத்த பணம் பொது வைப்புக் கணக்கில் நீண்ட காலமாக வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருக்க வேண்டியதுடன் அப்பணம் உரிய செயற்பாடுகளுக்காக தாமதமின்றி பயன்படுத்துதல் வேண்டும். |

**(ஈ) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்**

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (i) | 2022 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறான நிதியற்ற சொத்துக்களின் ஆரம்ப மீதியின் மொத்த தொகையை ரூபா 98,669,997,608 ஆக | மீதிகளின் வித்தியாசங்கள் தொடர்பாக ஆண்டின் இறுதியில் திறைசேரியிடம் | நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது முன்னைய ஆண்டின் இறுதி மீதியை ஒப்பீட்டு ரீதியாக |

| | | | |
|---|---|---|---|
| | பதிவுசெய்யும் போது 09 சொத்துக் கணக்குகளின் மொத்தப் பெறுமதி ரூபா 600,435,665 குறைத்தும் 02 சொத்துக் கணக்குகளின் மொத்தப் பெறுமதி ரூபா 386,600 ஆல் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தது. 2021 நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த மீதி ரூபா 99,270,046,673 ஆக இருந்ததனால் நிதியற்ற சொத்துக்களின் முன்னைய ஆண்டு இறுதி மீதிக்கு நேரொத்ததாக மீளாய்வாண்டின் ஆரம்ப மீதி ரூபா 600,049,065 குறைத்து காட்டப்பட்டிருந்தது. | விசாரிக்கையில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திணைக்கள ஏடுகளையும் திறைசேரி ஏடுகளையும் சமப்படுத்துதல் போதுமானது என அறிவுறுத்தல் கிடைத்துள்ளதுடன் அதற்கிணங்க 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திணைக்கள ஏடுகளின் சொத்துக்களின் மீதியும் திணைக்கள பேரேட்டுக் கணக்குகளின் சொத்துக்கள் மீதியும் சமப்படுவதுடன் அந்த மீதியானது திறைசேரி கணக்கு மீதிகளுடனும் சமப்படுகின்றது. | பரீட்சித்து சரியான தகவல்களை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதி மற்றும் வெகுசனத் தொடர்பு அமைச்சினால் சொத்துக்கள் மற்றும் கிரய முகாமைத்துவத்ததிற்காக அரசாங்கத்தின் அனைத்து நிதியற்ற சொத்துக்களையும் ஆவணப்படுத்துதல் சம்பந்தமாக திறைசேரி செயலாளர் வழங்கிய 2017 யூன் 28 ஆந் திகதி 01/2017 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியற்ற சொத்துக்கள் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியற்ற சொத்துக்கள் கூற்றில் குறியீட்டு இலக்கம் 6141403 இன் கீழ் குளங்கள், நீர்த்தேக்கங்களின் பெறுமதியாக நீர்ப்பாசன திணைக்களத்தின் மூலம் அமுல்ப்படுத்தப்படுகின்ற 46 செயற்திட்டங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 73,242,085,249 மொத்த கிரயம் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அப்பெறுமதியில் உள்ளடக்கப்பட்ட கட்டிடங்கள், போக்குவரத்து உபகரணங்கள் ஏனைய இயந்திரங்களும் உபகரணங்களும் மற்றும் | தற்பொழுது மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து செலவுகளும் உரிய செயற்திட்டத்தின் கீழ் செயற்திட்ட செலவாக மூலதனமாக்கப்படுவதுடன் செயற்திட்டம் முடிவடைந்ததன் பின்னர் அதன் செலவுகள் தனித்தனியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்படுகின்றது. | ஒவ்வொரு செயற்திட்டத்தின் கீழ் சுவீகரிக்கப்படுகின்ற சொத்துக்களை தனித்தனியாக இனங்காணக்கூடிய வகையில் பட்டோலைகளைத் தயாரித்து நிதியற்ற சொத்துக்களை தனித்தனியாக இனங்கண்டு கணக்கு வைத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஏனைய நிதியற்ற சொத்துக்களும் தனித்தனியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (iii) | நிதியற்ற சொத்துக்கள் கூற்றில் குறியீட்டு இலக்கம் 61121 இன் கீழ் போக்குவரத்து உபகரணங்கள் ரூபா 4,379,010,064 தொகை மற்றும் குறியீட்டு இலக்கம் 61122 இன் கீழ் ஏனைய இயந்திரங்களும் உபகரணங்களும் ரூபா 1,054,019,558 தொகையான பெறுமதிகள் கணக்கீடு செய்யப்பட்டிருந்தும் அப்பெறுமதிகளை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | இப்பெறுமதி தயாரிக்கப்பட்டதானது திணைக்களத்தின் அனைத்து வலய அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தின் அனைத்து வாகனங்கள் கமத்தொழில் உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், கணனி உபகரணங்கள், தொடர்பாடல் உபகரணங்கள் ஆகிய அனைத்து நிலையான சொத்துக்களின் பெறுமதியாகும். அந்த உபகரணங்களுக்குரிய அனைத்து தகவல்களும் மற்றும் பெறுமதிகளும் உரிய CIGAS கணனி மென்பொருளின் கீழ் தயாரிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை மின் அஞ்சலுக்கு இதனுடன் சமர்ப்பிப்பேன். | ஒவ்வொரு செயற்திட்டத்தின் கீழ் சுவீகரிக்கப்படுகின்ற சொத்துக்களை தனித்தனியாக இனங்காணக்கூடிய வகையில் பட்டோலைகளைத் தயாரித்து நிதியற்ற சொத்துக்களைத் தனித்தனியாக இனங்கண்டு கணக்கு வைத்தல் வேண்டும். கணக்காய்விற்காக தேவையான சொத்துக்களை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (iv) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியற்ற சொத்துக்கள் கூற்றில் குறியீட்டு இலக்கம் 6111 இன் கீழ் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 2,592,069,648 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. திணைக்களத்தின் சொத்துக்கள் முகாமைத்துவ பிரிவின் மூலம் 2562 கட்டிடங்களின் ஒரு பதிவேடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் கட்டிடங்களின் பெறுமதி காட்டப்பட்டிருக்காததுடன் அதன் காரணமாக அப்பெறுமதியின் சரியான தன்மை உறுதிப்படுத்தப்படவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். கட்டிடங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்வதற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. கணிப்பீடு கிடைத்ததன் பின்னர் சரியான பெறுமதியை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கணக்கீடு செய்யப்படுகின்ற நிதியற்ற சொத்துக்களின் மீதியை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் ஒவ்வொரு சொத்தின் பெறுமதியையும் காட்டும் வகையில் பட்டோலை தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (v) | திணைக்களத்தின் வலய பணிப்பாளர் அலுவலகங்களில் மற்றும் பிராந்திய பொறியிலாளர் அலுவலகங்களில் 4735 ஏக்கர் | ஏற்றுக்கொள்கிறேன். சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நீர்ப்பாசன திணைக்களத்தின் அனைத்து காணிகள் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | 123 பேச்சர்ஸ் காணி மற்றும் பண்டாரவளை, காலி, கண்டி, பொலன்னறுவை, மொனராகல, ஹம்பாந்தோட்டை நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகங்களில் அமைந்துள்ள 392 கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | கட்டிடங்களை சரியாக இனங்கண்டு அவற்றின் பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (vi) | மணல் பாதுகாப்பு செயற்திட்டத்தின் மூலம் நீர் விஞ்ஞான மற்றும் இடர் முகாமைத்துவ பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த 106 சுயமாக செயற்படுகின்ற நீர்அளவீட்டு உபகரணம் மற்றும் மழை அளவீட்டு உபகரணம் திணைக்களத்தின நிதிக்கூற்றுக்களில் நிதியற்ற சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள சுயமாக செயற்படும் நீர் அளவீட்டு மற்றும் மழை அளவீட்டு உபகரணங்கள் நிதிக்கூற்றுக்களில் நிதியற்ற சொத்துக்களின் கீழ் கண்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டு நிதி முகாமைத்துவம்

திணைக்களத்தின் கட்டுநிதியை திட்டமிடுதல், கட்டுநிதியை வேண்டுதல், மற்றும் கட்டுநிதியை பயன்படுத்துதல் சம்பந்தமாக வெளிப்படுத்தப்பட்ட அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திணைக்களம் திட்டமிட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக திட்டமிடப்பட்ட மொத்த கட்டுநிதி தேவைப்பாடாகிய ரூபா 19,341,901,000 தொகை திணைக்களத்தினால் திறைசேரியிடம் வேண்டிக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் கிடைத்திருந்த மொத்த நிதி ஏற்பாடு ரூபா 10,538,704,000 அதாவது வேண்டிக்கொள்ளப்பட்ட கட்டுநிதியில் 54.4 சதவீதம் மாத்திரமாக இருந்ததனால் ரூபா 8,803,197,000 தொகையான நிதி | ஏற்றுக்கொள்கிறேன். நாட்டில் காணப்பட்ட சீரற்ற பொருளாதார நிலைமையின் அடிப்படையில் விண்ணப்பித்த கட்டுநிதி அனைத்தும் கிடைக்கவில்லை. அந்த நிலைமை இந்த ஆண்டிலும் காணப்பட்டது. | கட்டுநிதியை திட்டமிடும் போது நடைமுறை நிலைமையை கவனித்துப் பார்த்து முரண்பாட்டினை குறைக்கும் வகையில் முன்னறிந்து கொள்ளப்படுதல் வேண்டும். |

ஏற்பாட்டினை பயன்படுத்த முடியாதிருந்தது.

## 2.2 செலவு முகாமைத்துவம்

வருடாந்த பாதீட்டினை தயாரித்தல் நிதி ஏற்பாட்டினை மாற்றுதல், குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் நிதி ஏற்பாட்டினைப் பெற்றுக்கொள்ளல் பயன்படுத்துதல் மற்றும் சேமிப்புக்கள் சம்பந்தமாக வெளிப்படுத்தப்பட்ட அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது தேவைப்பாட்டினை இனங்கண்டு கொள்ளாது நிதியை ஒதுக்கீடு செய்தல், திட்டமிட்டவாறு வேலைகளை மேற்கொள்ளாமை ஆகிய காரணங்களால் மீளாய்வாண்டில் ரூபா 940,000,000 நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்ட செயற்திட்டத்தின் 05 செலவு விடயங்களிலிருந்து ரூபா 283,000,000 தொகை ஏனைய செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. இந்த வகையில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு முழுமையாகப் பயன்படுத்தப்படாது 30 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவானவை ஏனைய செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்ததனால் திட்டமிட்ட அபிவிருத்தி செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | நிர்மாணப் பொருட்களை வழங்குவதிலுள்ள சிக்கல், எரிபொருட்களைப் பெற்றுக்கொள்வதிலுள்ள சிக்கல்களைப் போல காலரீதியாக பாதீட்டு ஏற்பாட்டினை வழங்குவதன் காரணமாக சில செயற்திட்டங்களின் செயல் முன்னேற்றத்தினை எதிர்பார்த்தவாறு அடைந்து கொள்ள முடியாதிருந்தது. | பாதீட்டினைத் தயாரிக்கும் போது தேவைப்பாட்டினை இனங்கண்டு முடியுமான அளவிற்கு முரண்பாட்டினை குறைக்கும் வகையில் செலவுகளை மதிப்பீடு செய்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பாதீட்டின் மூலம் காணிகளையும் | கட்டுநிதி கிடைக்காமையின் அடிப்படையில் | பாதீட்டினைத் தயாரிக்கும் போது தேவைப்பாட்டினை |

| | | |
|---|---|---|
| கட்டிடங்களையும் மேம்படுத்துதல் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் செலவு விடயங்களின் கீழ் ஒவ்வொரு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி எற்பாடு போதியதாக இல்லாததனால் ஏனைய 03 செலவு விடயங்களின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டிலிருந்து ரூபா 90,000,000 மாற்றப்பட்டிருந்தது. | செயற்திட்டங்களின் செலவுகளை மேற்கொள்ள முடியாதிருந்தது. | இனங்கண்டு முடியுமான அளவிற்கு முரண்களை குறைக்கும் வகையில் செலவுகளை மதிப்பீடு செய்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.3. பொறுப்புக்களை மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 02 (ஈ) பந்தியின் பிரகாரம் நிதி ஆண்டு தொடர்பான கொடுப்பனவுகள் அந்த நிதி ஆண்டின் போதே விடுவிக்கப்பட வேண்டியதுடன் எந்த ஒரு பொறுப்பும் அடுத்து வரும் ஆண்டில் தீர்த்துவைக்கும் குறிக்கோளுடன் முன்கொண்டு செல்லாதிருக்க வேண்டுமென வழங்கப்பட்டிருந்த அறிவுறுத்தல்களுக்கு முரணாக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 செலவு விடயங்கள் தொடர்பாக ரூபா 129,908,705 தொகையான பெறுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | ஒதக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டு எல்லைக்குள் பொறுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் போதியளவு கட்டுநிதி இல்லாமையால் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அப்பெறுப்புக்களைத் தீர்த்துவைக்க முடியாதிருந்தது. | அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நிதி ஆண்டிற்கான கொடுப்பனவுகள் அந்த நிதி ஆண்டின் போது தீர்த்துவைக்கப்பட வேண்டியதுடன் எந்தவொரு பொறுப்பும் அடுத்துவரும் ஆண்டில் தீர்த்துவைக்கும் குறிக்கோளுடன் முன்கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்காதிருக்க வேண்டும். அவ்வாறு செய்தல் அத்தியவசியமானதாக இருக்குமாயின் திறைசேரியின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரசாங்க | நிதிப்பிரமாணம் 94.2 இன் கீழ் கடப்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை. | 255/2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கைக்கு இணங்க |

| | | | |
|---|---|---|---|
| | கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் பதிவேடு பேணப்படாதிருந்ததுடன் பொறுப்புக்கள் தொடர்பான தகவல்களை மாத்திரம் சமர்ப்பித்து கடப்பாடுகள் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | எவ்வாறாயினும் இது தொடர்பாக கவனம் செலுத்தி மீண்டும் வலய அலுவலகங்களுக்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | பொறுப்புக்களையும் கடப்பாடுகளையும் தனித்தனியாக இனங்கண்டு ஆவணப்படுத்தி கணக்குகளின் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். |
| (இ) | யான் ஓயா நீர்த்தேக்கத்தினை நிர்மாணிக்கும் செயற்திட்டம் தொடர்பாக 1,355,907 கியூப் மண் மற்றும் 16,571 மணலுக்காக அரசிறையாக ரூபா 38,044,762 தொகை நிலுவையாகக் காணப்பட்டது என புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகத்தினால் நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்திற்கு 2018 ஆகஸ்ட் மாதம் தெரியப்படுத்தப்பட்டது. உரிய நிலுவைப் பணம் நிதிக்கூற்றுக்களில் ஒரு பாறுப்பு அல்லது கடப்பாடாக காட்டப்பட்டிருக்கவில்லை. | யான் ஓயா நிர்த்தேக்க செயற்திட்டத்தின் கீழ் புவிச்சரித்தரவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகத்திற்கு அரசிறையை கொடுப்பனவு செய்வது சம்பந்தமாக இறுதி முடிவு மேற்கொள்ளப்படாதிருந்தது டன் இது சம்பந்தமாக கலந்துரையாடல் நடாத்தப்பட்டது. எனவே பிவிச்சரித்திரவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகத்திற்கு செலுத்த வேண்டிய அரசிறை ஒரு பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்படவில்லை. | உரிய அனைத்து பொறுப்புக்களையும் கடப்பாடுகளையும் இனங்கண்டு ஆவணப்படுத்தி கணக்குகளின் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். |

**2.4 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளவேண்டிய சான்றுபடுத்தல்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தர் விடயங்கள் சம்பந்தமாக சான்றுபடுத்த வேண்டியிருந்தும் அதற்கிணங்க சான்றுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (i) | திணைக்களம் நிதிக் கட்டுப்பாட்டிற்காக வினைத்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையைதயாரித்து பேணி வருகின்றது என பிரதான கணக்கீட்ட உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் வினைத்திறனுக்காக காலத்துக்கு காலம் மீளாய்வினை எழுத்துமூலம் | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சான்படுத்த வேண்டியதுடன் அந்த முறைமையின் வினைத்திறன் தொடர்பாக காலத்துக்கு காலம் மீளாய்வு செய்து அதற்கிணங்க முறைமையை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் எனவும் அந்த மீளாய்வினை எழுத்துமூலம் செய்து அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமரப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது என்பதற்கான வெளிப்படுத்தல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | மேற்கொண்டு அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டும் என ஏற்றுக்கொள்கிறேன். திணைக்களத்தினுள் உள்ளகக் கட்டுப்பாட்டு முறையின் மீளாய்வினை வாராந்தம் நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் நடாத்தப்படுகின்ற சிரேஷ்ட உத்தியோகத்தர் கூட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன் அந்த கூட்டத்தின் கலந்துரையாடல் குறிப்புக்கள் பிரிவுத் தலைவர்களுக்கு வழங்கப்படுகின்றது. அந்த கலந்துரையாடல் குறிப்புக்களின் பொழிப்பினை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | |
| (ii) | கணக்காய்வார் தலைமை அதிபதிக்குத் தேவைப்படும் வகையில் நிர்ணயிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் அனைத்து கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் பதில் வழங்குதல் இடம்பெறுகின்றது என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் சான்றுபடுத்த வேண்டிய போதிலும் அறிக்கையின் 3.13 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்கப்படவில்லை.. | திணைக்களத்தின் 14 வலய அலுவலகங்கள், மற்றும் 52 பிராந்திய அலுவலகங்களும் இன்னும் பல தாபன பிரிவுகளும் காணப்படுவதனால் கணக்காய்வு ஐய வினாக்களுக்காக பதில் வழங்கும் போது நாடு முழுவதும் செயற்படுகின்ற அனைத்து அலுவலகங்களிலிருந்தும் தகவல்களை கோரவேண்டி ஏற்படல் இந்த தாமதத்திற்கு காரணமாகும். எதிர்காலத்தில் பதிலை மிகவும் துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அனைத்து கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் பதில் வழங்குதல் இடம்பெறுகின்றது என சான்றுபடுத்துதல் வேண்டும். |

## 2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| அவதானிப்புக்கள் | | | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு** | **இணக்கமின்மைகள்** | | |
| (அ) | 1983 இன் 23 ஆம் இலக்க நீர்ப்பாசன (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு | நீர்ப்பாசன தண்டப்பண நிதியம் பேணப்பட்டிருக்கவில்லை. | நீர்ப்பாசன கட்டளைச் சட்டத்தின் கீழ் காட்டப்பட்டுள்ள தவறுகள் மற்றும் நட்டங்கள் சம்பந்தமாக அறிவிடப்படுகின்ற பணம் பொதுவைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு உரிய நட்டங்களை ஈடுசெய்வதற்காக செலவு செய்து மிகுதிப் பணம் மற்றும் அரசிறைகள் அரசாங்கத்தின் வருமானத்திற்கு செலவுவைத்தல் இடம்பெற்று வருகின்றது. | நீர்ப்பாசன திருத்திய அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் நீர்ப்பாசன தண்டப் பண நிதியத்தை பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை** | | | |
| (i) | XXIV ஆம் அத்தியாயத்தின் 4.4 மற்றும் 4.5 ஆம் பிரிவுகள் | கடனைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்களுக்கு மத்தியில் மரணடைந்த 19 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 2,266,323 தொகை, ஓய்வுபெற்ற 92 ஊழியர்களிடமிருந்து | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மரணமடைந்த 19 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டி இருந்த ரூபா 2,266,323.63 தொகையில் 04 நபர்களுக்கான ரூபா 426,124 தொகை 2023-06-30 ஆந் | தாபன விதிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மீளச் செலுத்தாத கடனை பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களிடமிருந்து அறவிட வேண்டும். கடனை அறவீடு செய்வதற்கு |

அறவிட வேண்டிய ரூபா 9,412,408 தொகை மற்றும் வேலையிலிருந்து நீக்கப்பட்ட, சேவையை கைவிட்டுச் சென்ற மற்றும் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட 36 உத்தியோகத்தர்களிட மிருந்து அறவிட வேண்டிய ரூபா 3,693,751 தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த மீதிகளில் மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய ரூபா 2,846,837 கடன் மீதியும் ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 1,705,310 கடன் மீதியும் காணப்பட்டன.

திகதியளவில் அறவீடு செய்யப்பட்டிருந்ததுடன் இன்னும் அறவீடு செய்ய வேண்டிய பணம் ரூபா 1,840,199 ஆகும்.
2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓய்வுபெற்ற 92 உத்தியோகத்தர்களிட மிருந்து அறவிட வேண்டி இருந்த ரூபா 9,412,407.87 தொகையில் 17 நபர்களுக்கான ரூபா 1,234,507 தொகை 2023 யூன் 30 ஆந் திகதியளவில் அறவிடப்பட்டிருந்ததுடன் இன்னும் அறவிட வேண்டிய ரூபா 8,177,900.87 மீதியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

2023 யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறான கடன் மீதி அறவிடப்பட்டுள்ள 21 நபர்ளில் 16 நபர்களின் நிலுவைக் கடன் மீதி மாதாந்த தவணைப் பணமாக அறவிடப்படுகின்றது. மேற்கூறிய கடன் மீதியில் உள்ளடங்கியுள்ள மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய கடன் மீதியான ரூபா 2,846,837.47 தொகையில் ரூபா 223,358 தொகை 2023-06-30 ஆந் திகதியளவில் அறவிடப்பட்டிருந்ததுடன் இன்னும் ரூபா 2,623,479.47 அறவிட வேண்டியுள்ளது. கடன் மீதியில் உள்ளடங்கியுளள மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய

நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| | | | இன்னும் அறவிட வேண்டிய ரூபா 1,626,545.48 மீதியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (ii) | XIX ஆம் அத்தியாயத்தின் 5.2.1 மற்றும் 5.3.1 ஆம் பிரிவுகள் | திணைக்களத்தின் 14 வலயங்களில் அமைந்துள்ள உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருக்கும் உத்தியோகத்தர்களிடமிருந்து தாபன விதிக் கோவையின் பிரகாரம் உத்தியோகபூர்வ இல்லங்களுக்கான வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | இதற்குப் பின்னர் வீட்டு வாடகைகளை அறவீடு செய்யும் போது தாபன விதிக்கோவையின் பிரகாரம் சரியான நடவடிக்கையை பின்பற்றுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருக்கும் உத்தியோகத்தர்களிடமிருந்து தாபன விதிக்கோவையிலுள்ள பணிப்புரைகளுக்கு இணங்க உத்தியோகபூர்வ இல்ல வாடகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(இ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | | | |
| (i) | நி.பி 104-109 | 1979 இலிருந்து 2012 வரையான காலத்தில் இடம்பெற்ற ரூபா 18,191,201 தொகையான 30 நட்டங்கள் மற்றும் சேதங்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 104 இலிருந்து 109 வரையான பிரமாணங்களுக்கு இணங்க நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேட்டில் இன்னும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்ற நட்டங்கள் சம்பந்தப்பட்ட 22 சம்பவங்கள் உள்ளன. | ந.பி 104 இலிருந்து 109 வரையான பிரமாணங்களுக்கு இணங்க நட்டங்கள் மற்றும் சேதங்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நி.பி 756 | நீர்பாசன பொறியியலாளர் அலுவலகங்களில் செயற்பாடு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்கும் நிர்மாணக் கைத்தொழிலுக்குமாக வழங்கப்பட்டு பொறியியல் உதவியாளர்களின் பொறுப்பில் உள்ள | வருடாந்தம் களஞ்சிய பொருட்களின் மீளாய்வினை நடாத்தும் போது நடவடிக்கை எடுக்க வேண்டிய முறைமை தொடர்பாக காணப்படுகின்ற சுற்றறிக்கைகளை நாளதுவரையாக்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை | பொறியியல் உதவியாளர்களின் பொறுப்பில் உள்ள பொருட்கள். நி.பி 756 இன் பிரகாரம் பொருள் மீளாய்விற்கு உட்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | பொருட்கள் வருடாந்த பொருள் மீளாய்வின் மூலம் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. | எடுப்பேன். | |
| **(ஈ)** | **பெறுகை வழிகாட்டிக் கோவையின்** | | | | |
| | (i) | வழிகாட்டி 3.4 | ஹிரியால பிராந்திய நீர்ப்பாசன பொறியிலாளர் அலுவலகத்தினால் விலை தரப்படுத்தல் முறைமையை (Shopping) பயன்படுத்தி எந்தகல அணைக்கட்டினை நிர்மாணிப்பதற்கு ரூபா 05 மில்லியனுக்கு மேற்பட்ட கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டது. | ஏற்றுக்கொள்கிறேன். பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கியுள்ளேன். | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் கொள்வனவு செய்யப்படுதல் வேண்டும். |
| | (ii) | வழிகாட்டி 8.9.1 | ரூபா 500,000 இனை மிகைத்த பொருள் ஒப்பந்தத்திற்காக முறையான ஒப்பந்த உடன்படிக்கை எழுதி கையொப்பமிடப்பட வேண்டிய போதிலும் ஹிரியால நீர்ப்பாசன பொறியிலாளர் அலுவலகத்தின் மூலம் அமுல்ப்படுத்தப்பட்ட கொள்வனவுகள் முறையான ஒப்பந்த உடன்படிக்கையில் கையொப்பமிடப்படாது அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன. | ஏற்றுக்கொள்கிறேன். சரியான பெறுகை முறைமையினைப் பின்பற்றி சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களை சரிசெய்து நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் ரூபா 500,000 இனை மிகைத்த பொருள் கொள்வனவு ஒப்பந்தத்திற்காக முறையான ஒப்பந்த உடன்படிக்கை எழுதி கையொப்பமிடப்படுதல் வேண்டும். |
| (உ) | 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் 1.1.6 ஆம் பந்தி | | ஏனைய திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதி 02 மாதங்களுக்குள் தீர்த்துவைக்கப்பட வில்லையாயின் மூன்றாம் மாதத்திற்குள் உரிய இடமாற்றம் | ஏனைய திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்களுக்கு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 537,530 கடன் மீதியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கையில் குறிப்பிட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்து நிலுவைக் கடன் மீதியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மேற்கொண்ட திணைக்களத்தின் மாதாந்த கணக்கு பொழிப்பின் மூலம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக ரூபா 537,530 நிலுவைக் கடன் அறவிட வேண்டியிருந்தது. | | |
| (ஊ) | 2017 யூன் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | திணைக்களத்தினால் பேணப்படுகின்ற நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான தகவல் முறைமை சரியாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை. | தொழில்நுட்ப ரீதியான செயற்பாட்டு மற்றும் கட்டுப்பாட்டு தீர்மானங்களை எடுப்பதற்குத் தேவையான தகவல்களை வழங்கும் வகையில் உலகளாவிய தரவு முறைமையானது தற்பொழுது பேணப்பட்டு வருகின்றது. அதற்காக நீர்ப்பாசன திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணைய தளத்தில் (WWW.irrigation.gov.IK) உலகளாவிய தகவல் தொழில்நுட்ப வழியினூடாக பிரவேசிக்கலாம். | 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க திணைக்களம் பேணி வருகின்ற தகவல் முறைமையினை சரியாகவும் நாளதுவரையாகவும் பேணி கொம்ப்ட் ரோலர் நாயகத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டும். |
| (எ) | 1982 இன் 23 ஆம் இலக்க நீர்ப்பாசன திணைக்கள சுற்றறிக்கையின் (அ) பந்தி | திணைக்களத்தில் பொறியில் உதவியாளரினால் மாதாந்த பொருள் அறிக்கையானது அடுத்துவரும் மாதத்தின் 05 வேலை நாட்களுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். அதற்காக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. எதிரகாலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | பொறியியல் உதவியாளர்களினால் பொருள் அறிக்கையினைப் பேணுதல் மற்றும் சமர்ப்பித்தல் சம்பந்தமான உள்ளகக் கட்டுப்பாட்டினை வலுப்படுத்துதல் வேண்டும். |

## 2.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நி.பி 385(1)(அ) இன் பிரகாரம் ரூபா 500 இற்கு அல்லது அதற்கு மேற்பட்ட பணக் கொடுப்பனவின் போது அதனை பணமாக செலுத்தாதிருக்க வேண்டிய போதிலும் அதற்கு முரணாக மற்றும் முறையான அங்கீகாரமின்றி 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 352,420,052 பெறுமதியான 1177 காசோலைகள் பிராந்தமிய நிர்ப்பாசன பொறியியலாளர்களின் பெயருக்கு வழங்கப்பட்டிருந்தது. பின்னர் பிரிவு உதவியாளர்களினால் அக்காசோலைகளின் குறுக்கு கோடுகள் இரத்துச் செய்யப்பட்டு பணமாக மாற்றப்பட்டு அங்கீகரிக்கப்படாது பணம் பெறுபவர்களுக்கு பணமாக செலுத்தப்பட்டிருந்தது. | வலய நீர்ப்பாசன பணிப்பாளர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டிருந்தது டன் சரியான மற்றும் ஒழுங்கீனங்கள் ஏற்படாத முறைமையில் அந்த நடவடிக்கையை பேணுமாறும் நிதிப்பிரமாண சுற்றறிக்கை, பெறுகை வழிகாட்டிக் கோவை மற்றும் ஏனைய சட்டவிதிகளுக்கு இணங்க கொடுப்பனவுகளை சிறப்பான நிதிக்கட்டுப்பாட்டின் மூலம் நடவடிக்கை எடுக்குமாறும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன் காசோலைகளை வழங்கும் போது அந்த அறிவுறுத்லத்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்குமாறு பிராந்திய அலுவலகங்களுக்கும் தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நி.பி 385(1)(அ) இன் பிரகாரம் பணம் பெறுபவரின் பெயரில் காசோலைகள் எழுதி குறுக்கு கோடிடப்பட்டு கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும். அதற்கு முரணாக நடவடிக்கை எடுத்துள்ள உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக ஒழுக்காற்று நடடுமுறை பின்பற்றப்படுதல் வேண்டும். பிராந்திய அலுவலகங்களில் பணக் கொடுப்பனவு சம்பந்தமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை வலுப்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | நீர்ப்பாசனத் திணைக்களத்தின் 51-9694 ஆம் இலக்க கெப் வாகனம் 2001 ஆகஸ்ட் 13 ஆந் திகதி கல்முனை பொலிஸ் அதிகாரப் பிரதேசத்திலுள்ள உதவிப் பொறியியலாளருடன் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போது கடத்திச் செல்வதற்கு உடபட்டிருந்தது. இது சம்பந்தமாக கல்முனை நீதவான் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்ட 22647/PC ஆம் இலக்க | நீர்ப்பாசன திணைக்களத்தின் 51-9694 ஆம் இலக்க கெப் வாகனம் சம்பந்தாக எடுத்த நடவடிக்கையை குறிப்பிட்டு மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தின் ஒரு பிரதியை இதனுடன் சமர்ப்பிக்கிறேன். | உரிய வாகத்தின் பிரிவினை இரத்துச் செய்யாமையின் மூலம் பதிவினை சான்றிதழினை தவறாகப் பயன்படுத்துவதற்கு இடமளித்த பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக ஒழுக்காற்று நடைமுறை பின்பற்றப்படுதல் வேண்டும். திணைக்களத்தின் பயன்பாட்டிலிருந்து நீக்கப்படுகின்ற வாகனத்தின் பதிவினை |

வழக்கின் அறிக்கையின் பிரகாரம் இச் சம்பவம் சந்தேக நபர்கள் தெரியாத குற்றமாக தீர்ப்பு அளிக்கப்பட்டிருந்ததுடன் இது சம்பந்தமாக நியமிக்கப்பட்ட விசாராரணை சபையானது இந்த நட்டம் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட ஒரு நட்டமாகக் கருதி ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு 2022 மார்ச் 31 ஆந் தகிதி சிபாரிசு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க வாகனம் கடத்திச் செல்லப்பட்டது என உறுதிப்படுத்தப்பட்ட உடன் அதற்கு வருமான அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதனை நிறுத்துமாறும் பதிவினை இரத்துச் செய்யுமாறும் மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளருக்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக உரிய வாகனத்திற்காக 2022 யூன் 29 ஆந் திகதியிலிருந்து 2023 யூன் 28 ஆந் திகதி வரை செல்லுபடியாகும் வகையில் ஒரு வருமான அனுமதிப்பத்திரமானது 2022 ஒக்தோபர் 27 ஆந் திகதி குருனாகல் பிரதேசத்தில் குடியிருக்கும் ஒரு நபருக்கு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்தது.

இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

## 2.7 வங்கி கணக்குகளின் செயற்பாடுகள்

வங்கி கணக்குகளின் செயற்பாடுகள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரீட்சிப்பின் போது வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டில் முடிவடைந்த தெதுரு ஓயா செயற்திட்டத்திற்காக இலங்கை வங்கி வாரிய பொல கிளையில் 2008 மார்ச் 03 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட 7042466 ஆம் இலக்க நடைமுறைக் கணக்கானது செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் முடிவடைந்ததன் பின்னர் முறைப்படியாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது வாரியபொல பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்தின் கொடுக்கல் வாங்கல்களுக்காக இன்றுவரை பேணப்பட்டு வந்திருந்தது. அதன் போது நி.பி 381(1) இற்கு இணங்க பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நி.பி 381(1) இற்கு இணங்க 7042466 ஆம் இலக்க கணக்கினை ஆரம்பிப்பதற்கு பொதுத் திறைசேரியின் முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது. அச்செயற்திட்டத்தின் பொது வைப்புக் கணக்கிற்குரிய நடவடிக்கைகள் மற்றும் பொறுப்புக்களை தீர்த்துவைக்கும் வரை இக்கணக்கு பேணப்பட்டுள்ளதுடன் அக்கணக்கின் பெயரை மாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | செயற்திட்ட நடவடிக்கைகள் முடிவடைந்ததன் பின்னர் உரிய வங்கி கணக்கினை முறைப்படியாக மூடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். வங்கி கணக்கினை ஆரம்பித்த நோக்கத்திற்கு புறம்பான நடவடிக்கைகளுக்காக திறைசேரியின் அங்கீகாரமின்றி அக்கணக்கினை பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்த்த பெறுபேறுகள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| **(அ) சியம்பலன்கமுவ ஓயாவிலிருந்து மஹகல்கமுவ குளம் வரை பாசன கால்வாய் நிர்மாணிக்கும் செயற்திட்டம்** | | |
| (i) நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சினால் 2011 செப்தெம்பர் 11 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட ‘‘நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சின் மூலம் அமுல்ப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட பெரிய/ மத்திய அளவிலான நீர்ப்பாசன செயற்திட்டங்கள் தொடர்பான பத்து ஆண்டுகள் திட்டம்’’ என்ற தலைப்பிலான 11/1858/508/034 ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் மேற்கூறிய செயற்திட்டமானது 2012-2014 காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டிருந்தது டன் 09 ஆண்டுகள் கடந்திருந்தும் இன்றுவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | உத்தேச மஹகல்கமுவ பாசன கால்வாயின் நிர்மாண நடவடிக்கைகள் 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2014 ஆம் ஆண்டில் முடிவுறுத்துவதற்காக ரூபா 500 மில்லியன் பணம் ஒதுக்கீடு செய்து அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் நிர்மாண வேலைகளை ஆரம்பிப்பதற்கான மதிப்பீடு 2015 ஆம் ஆண்டின் போதே அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க கால்வாயை தோண்டுதல் மற்றும் உருவாக்கல் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2020-2021 ஆம் ஆண்டுகளில் காணப்பட்ட கொரோனா தொற்றுநோய் நிலைமை, உத்தியோகத்தர்கள் அடிக்கடி இடமாற்றம் பெற்றுச் செல்லல், வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் முடிவுறுத்தப்படாது நிறுத்திவைக்கப்பட்டுள்ளதனால் செயற்திட்ட வேலைகள் தாமதமடைவதற்கு காரணமாக இருந்தது. | நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் செயற்திட்டத்தினைப் பூர்த்திசெய்வதற்காக செயல்நடவடிக்கைத் திட்டத்தினை தயாரித்து உறுதியாக பொறுப்புக்கள் ஒப்படைக்கப்படுதல் வேண்டும். ஒவ்வொரு கட்டத்தின் இறுதியிலும் எதிர்பார்த்த பெறுபேறுகளை மதிப்பீடு செய்து தாமதித்தல் சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். செயற்திட்டங்களின் நீண்டகால தாமதத்தின் மூலம் எதிர்பார்த்த பொருளாதார பிரதிபலன்கள் இழக்கப்படும் சந்தர்ப்பச் செலவினைக் கணித்து வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் வெளிப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மிகுதியாக உள்ள வேலைகளை பூரணப்படுத்துவதற்காக தொடக்கத்தில் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டினை திருத்தம் செய்யும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. | |
| (ii) | மேற்கூறிய செயற்திட்டத்தின் சாத்தியவள ஆய்வு அறிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதன் மூலம் பலுகடவலவில் 800 ஏக்கர்கள், மஹகல்கமுவவில் 400 ஏக்கர்கள், புதிய காணி 200 ஏக்கர்கள் என்பனவாக 1400 ஏக்கர்களுக்கு நீர்ப்பாசனம் வழங்குதல் குறிக்கோளாக இருந்ததுடன் அதற்காக 2014-2022 காலப்பகுதியில் ரூபா 375 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் மேற்கூறிய செலவின் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு இன்றுவரை எந்த பிரதிபலனும் கிடைத்திருக்கவில்லை. | இந்த நிர்மாணங்களை முறைப்படியாக மேற்கொள்வதற்காக தேவையான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகின்றது. முறைப்படியான அங்கீகாரத்தின் பின்னர் நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | முறையான திட்டமின்றி செய்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதன் மூலம் பொருளாதார நலன்கள் இழக்கப்படுவதற்கு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு அவர்கள் சம்பந்தமாக ஒழுக்காற்று நடைமுறை பின்பற்றப்படுதல் வேண்டும். செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகளை மிகவும் வினைதிறனாகவும் கிரயத்தினை குறைக்கும் வகையிலும் மேற்கொள்வதற்காக காலப்பகுதியினை நிர்ணயித்து திட்டமிட்டு அத்திட்டத்தின் பிரகாரம் அமுல்ப்படுத்துதல் வேண்டும். |
| (iii) | செயற்திட்டத்திற்காக சுற்றாடல் ஆய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாதிருந்ததுடன் நி.பி 35(4) மற்றும் 36 இன் பிரகாரம் தொடக்க அங்கீகாரம் மற்றும் இறுதி அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாது அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது. மேலும் நீர்ப்பாசன நீரினை வழங்குவதற்குத் தேவையான காணிகள் கணக்காய்வுத் திகதி | இந்த நிர்மாணங்களை முறைப்படியாக மேற்கொள்வதற்காக தேவையான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகின்றது. முறையான அங்கீகாரத்தின் பின்னர் நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | சுற்றாடல் ஆய்வு அறிக்கை மற்றும் நி.பி 35(4) மற்றும் 36 இன் பிரகாரம் தொடக்க மற்றும் இறுதி அங்கீகாரமின்றி செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதன் மூலம் பொறுப்பற்ற வகையில் செயற்பட்ட உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக ஒழுக்காற்று நடைமுறைகள் பின்பற்றப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வரை இனங்காணப்பட்டிருக்கவில்லை. | | |
| (iv) | இச் செயற்திட்டத்திற்காக நிபி 20 இற்கு இணங்க முழுக் கிரய மதிபீடு அங்கீகரிக்கப்படாததுடன் குருனாகல் நீர்ப்பாசன பணிப்பாளரினால் அடிக்கடி மதிப்பீட்டினை அங்கீகரித்து திட்டமின்றி செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக 14 கிலோ மீற்றர் நீளத்திற்கு இடத்திற்கு இடம் அகழ்தல் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் கால்வாய் முறைப்டியாக தயாரிக்கப்படாமையின் காரணமாக அந்த இடத்தில் நீர் ஒன்று சேர்வதன் மூலம் நோய் உருவாகுதல், போக்குவரத்திற்கு தடை ஏற்படுதல், மனிதர்கள் மற்றும் காட்டு மிருகங்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுதல் முதலிய சுற்றாடல் மற்றும் சமூக பிரச்சினைகள் பல உருவாகியிருந்தன. | -மேற்படி- | செயற்திட்டத்திற்கான மொத்த கிரய மதிப்பீடு அங்கீகரிக்கப்படாதும் முறையான திட்டமின்றியும் கால்வாய்களை முறையற்ற வகையில் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக ஒழுக்காற்று நடைமுறை பின்பற்றப்படுதல் வேண்டும். மத்திய மற்றும் பெரிய அளவிலான செயற்திட்டங்களை அமுல்ப்படுத்தும் போது ஒவ்வொரு கட்டத்தினையும் இனங்காணல் திட்டங்களை திருத்துதல் முதலிய விடயங்கள் சம்பந்தமாக உறுதியான நடைமுறை அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (v) | இச்செயற்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்த நிதி ஏற்பாட்டில் ரூபா 375 மில்லியன் அல்லது 75 சதவீதம் செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் நான்காவது கிலோ மீற்றருக்குள் காணப்பட்ட சினுத் குளம் வரை நீரினை எடுத்துச் செல்லக்கூடியவாறு பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த நிர்மாணங்களை முறைப்படியாக மேற்கொள்வதற்காக தேவையான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகின்றது. முறையான அங்கீகாரத்தின் பின்னர் நிர்மாணத்தினை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.. | பொருளாதார பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை திட்டமிடுதல் மற்றும் முகாமைத்துவம் சம்பந்தமாக நிரந்தரமான நடைமுறையை அறிமுகப்படுத்துதல் வேண்டும். |
| (vi) | இரண்டாம் கிலோ மீற்றருக்கும் மூன்றாம் கிலோ | இச்செயற்பாடும் நேரடி வேலையாட்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள | திணைக்களத்தினால் சொந்த ஊழியர்களையும் பொருட்களையும் |

மீற்றருக்குமிடையே கற்களை அகற்றுவதற்காக ரூபா 6.7 மில்லியனான ஒரு மதிப்பீடு 2020 திசெம்பர் மாதம் அங்கீகரிக்கப்பட்டிருந்த துடன் அதன் கீழ் நேரடி வேலையாள் முறைமையின் கீழ் கால்வாயில் அமைந்துள்ள கருங்கற்கள் ஒரு கியூப் ரூபா 3,276.25 இற்கு அகற்றப்பட்டது என்பதற்கதன வேலைகள் சான்றுபடுத்தப்பட்டிருந்த போதிலும் கல் அகற்றப்படாத இடங்களிலும் கல் அகற்றப்பட்டது என பிழையாக நில அளவை சமர்ப்பிக்கப்பட்டு வேலையாட்கள், இயந்திரங்கள், பொருட்கள் என்பவற்றிற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு இருந்தும் நிறைவேற்றப்பட்ட வேலைப் பகுதிகள் தொடர்பாக உறுதியாக சான்றுபடுத்தப்படாது 2+400 இலிருந்து 2+875 வரையான பகுதியில் கல்லை அகற்றுவதற்காக மீண்டும் ரூபா 20,236,000 தொகையான ஒரு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டிருந்த து.

துடன் 2+875 இற்கு அப்பால் அதற்கு அருகாமையிலுள்ள பகுதி 2+000- 2+875 இடையே கல்துளையிடும் சந்தர்ப்பத்திலேயே துளையிடுதல் இடம்பெற்றுள்ளது. எதிர்காலத்தில் நிதி ஏற்பாடு கிடைத்த உடன் முழுப்பகுதியிலும் கருங்கற்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். கால்வாயில் மண் நிரப்புதல், கருங்கற்களை அகற்றுதல், அகழ்வு மேற்கொள்ளுதல் தேவையான நிர்ணயிக்கப்பட்ட நிர்மாணங்கள் என்பவற்றிற்காக புதிய திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகின்றது. அந்த மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் மிகுதி வேலைப் பகுதிகளை முடிவுறுத்துவதற்கு எதிர் பார்க்கப்படுகின்றது.

பயன்படுத்தி நிறைவேற்றப்படுகின்ற ஒப்பந்தங்களுக்காக (Force Account) இயந்திரங்களைப் பயன்படுத்துதல், வேலையாட்களைப் பயன்படுத்துதல், மூலப்பொருட்களைப் பயன்படுத்துதல், வேலைகளின் இறுதி அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் என்பன சம்பந்தமாக புதிய நடைமுறை அறிமுகப்படுத்துதல் வேண்டும். போலியான அளவீடுகள் மற்றும் விலைப் பட்டியல்களைச் சமர்ப்பித்த உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக ஒழுக்காற்று நடைமுறை பின்பற்றப்படுதல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (vii) | சியம்பலன்கமுவ ஓயாவிலிருந்து மஹகல்கமுவ குளம் வரை நீர் வழங்கும் செயற்திட்டம் தொடர்பாக 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை காணிகளைப் பொறுப்பேற்றல் மற்றும் இழப்பீடு செலுத்துதல்களை உள்ளடக்கி இன்னும் பூர்த்தி செய்யப்பட வேண்டிய 07 நடவடிக்கைகள் காணப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் போது ரூபா 8,000,000 நிதி எற்பாடு மாத்திரம் அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இந்த நிர்மாணங்களை முறைப்படியாக மேற்கொள்வதற்காக தேவையான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருவதனால் முறையான அங்கீகரித்ததன் பின்னர் நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. | ஒவ்வொரு கட்டத்தின் முடிவின் போதும் பொருளாதார பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்ளும் வகையில் செயல்நடவடிக்கைத் திட்டத்தினை தயாரித்து வருடாந்த நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்துதல் வேண்டும். |

**(ஆ) முத்துகண்டிய நீர்த்தேக்கத்தில் மணல், சேற்றுமண் மற்றும் திரவ மண்ணை அகற்றும் செயற்திட்டம்**

முத்துகண்டி நீர்த்தேக்கத்தில் மணல், சேற்று மண் குவியல் காணப்படுகின்றது எனவும் அந்த மணல் மற்றும் சேற்று மண்ணை அகற்றி குளத்தின் நிர் கொள்ளலவினை அதிகரிக்கச் செய்யுமாறு முத்துக்கண்டிய ஒருங்கிணைந்த விவசாயிகள் அமைப்பும் ரணமயுர விவசாயிகள் அமைப்பும் கமத்தொழில் நீர்ப்பாசன மற்றும் கிராமிய பொருளாதார நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சிடம் வேண்டுகோள் விடுத்திருந்தது. உரிய வேண்டுகோள் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்ததுடன் நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தினால் அமின்ஆர ஓயாவில் மணல் மற்றும் சேற்று மண்ணை அகற்றுவதற்கு ரணமயுர விவசாயிகள் அமைப்பிற்கும் மீயெல்லா ஓயாவின் மணல் மற்றும் சேற்று மண்ணை அகற்றுவதற்கு முதுகண்டிய ஒருங்கிணைந்த விவசாயிகள் அமைப்பிற்கு வழங்குவதற்கும் அங்கீகாரம்

வழங்கப்பட்டிருந்தது.
அதற்கிணங்க மீயெல்லா ஓயா மற்றும் கியுல் ஆர பிரதேசத்தில் 13 GPS ஒருங்கிணைப்புக்களின் கீழ் மணல், சேற்று மண் மற்றும் நீர் மண் 133,400 கியூப்களை அகற்றுவதற்காக 32 நிபந்தனைகளைக் கொண்டதாக முத்துகண்டிய ஒருங்கிணைந்த விவசாயிகள் அமைப்பிற்கு ENV/575(Uva ii) ஆம் இலக்க கடிதத்தின் மூலம் 2019 பெப்ரவரி 21 ஆந் திகதி ஒப்படைக்கப்பட்டுது. அமித் ஆர ஊயாவில் 4 GPS ஒருங்கிணைப்பின் கீழ் மணல், சேற்று மண், மற்றும் நீர் மண்ணை அகற்றுவதற்காக 40 நிபந்தனைகளைக் கொண்டதாக ரணமயுரு விவசாயிகள் அமைப்பிற்கு DI/MO/W03/05/01/2021 ஆம் இலக்க 2021 ஒக்தோபர் 12 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

(i) முத்துகண்டிய ஒருங்கிணைந்த விவசாயிகள் அமைப்பு ஒப்பந்தம் வழங்கும் கடிதத்தின் நிபந்தனைகளின் பிரகாரம் ரூபா 1,000,000 தொகையான மீளச் செலுத்தும் வைப்பினை வழங்கியிருக்காததுடன் உப ஒப்பச்தக்காரரான சுவர்ணதேவி என்டபிரைஸ் நிறுவனத்தினால் 2021 மார்ச் 04 ஆந் திகதியிலிருந்து ஒரு ஆண்டு காலத்திற்காக மேற்கூறிய பெறுமதிக்கு சமரப்பித்திருந்த பிணைமுறிக் கடித்தினை திணைக்களம் பொறுப்பேற்றிருந்தது. உரிய கடிதத்தின் நிபந்தனைக்கு இணங்க மேற்பார்வைக் கட்டணமாக மாதாந்தம் ரூபா 50,000 வீதம் 15 மாத காலத்திற்காக ரூபா 1,000,000 தொகையினை பணமாக அல்லது காசோலையாக வழங்குமாறு தெரியப்படுத்தியிருந்தத ானது செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்தும் போது நீர்ப்பாசனத் தீணைக்களத்தின் வளங்களுக்கு பாதிப்புக்கள் ஏற்படுமாயின் அவற்றினை மீளத் தீர்க்கும் எதிர்பார்ப்பிலாக இருந்ததுடன் உரிய வங்கிப் பிணையின் மூலம் அவ்வாறு செய்யலாம் என உறுதிப்படுத்தி அது பொறுப்பேற்கப்பட்டுள் ளது. இதன் போது இந்த பிணைமுறிக் கடித்தினைப் பொறுப்பேற்பதன் மூலம் விவசாய அமைப்பிற்கு வழங்கப்பட்டிருந்த

நிர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கிய கட்டளைகளுக்கு முரணாக ஏனைய தரப்பினர்களுக்கு நீர்த்தேக்கத்தில் மணல் அகழ்தலுக்காக வாய்ப்பினை உருவாக்கிய உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக சட்டரீதியாக செயற்படுவதற்கு நியமன அதிகாரிக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | அறவிட வேண்டியிருந்த ரூபா 750,000 தொகை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அனுமதியை ஏனைய நிறுவனத்திற்கு ஒப்படைத்தல் அல்லது விற்பனை செய்தல் எதிர்பார்க்கப்படாததுடன் நீர்த்தேக்கத்தின் சேற்றுமண், மணல் மற்றும் திரவ மண்ணை அகற்றி கொள்ளளவினை அதிகரிக்கும் நடவடிக்கையை இலகுபடுத்துவது மாத்திரம் எதிர்பார்க்கப்பட்டது. | |
| (ii) | ரணமயுர விவசாய அமைப்பிற்கு ஒப்பந்தத்தை வழங்கும் கடித்தின் பிரகாரம் அறவிட வேண்டிய ரூபா 1,000,000 தொகையான மீளச் செலுத்தும் வைப்பினை வழங்கியிருக்காத போதிலும் குளத்தின் சேற்று மண்ணை அகற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ஒப்படைப்பு கடிதத்தின் பிரகாரம் தோண்டி எடுக்கப்பட்ட சேற்று மண் மற்றும் கழிவுப் பொருட்கள் ஒரு வாரகாலத்திற்குள் குளத்திற்கு வெளியே கொண்டுவரப்பட வேண்டிய போதிலும் தோண்டி எடுக்கப்பட்ட 1500 கியூப் அளவானவை இன்னும் குளத்திற்குள் குவித்து வைக்கப்பட்டுள்ளன. | புவிச்சரித்திரவியல் மற்றும் சுரங்கங்கள் பணியகத்தினால் வழங்கப்படுகின்ற போக்குவரத்து அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகளின் பிரகாரம் மற்றும் வீதி உடைந்திருந்ததனால் போக்குவரத்து சிக்கலின் காரணமாக அகழ்வு செய்யப்பட்ட திரவ மண்ணானது நீர் நிரப்பும் எல்லைக்கு மேல் குவிக்கப்பட்டிருந்தது. | அங்கீகரித்த கடிதத்தில் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பதற்கு அனைத்து வெளிக்கள பரீட்சிப்புக்களிலும் உறுதிப்படுத்துவதற்காக பரீட்சிப்பு பட்டியல் அறிமுகப்படுத்துதல் வேண்டும். நிபந்தனைகளை மீறிய விவசாய அமைப்புக்களை கறுப்பு பட்டியலில் சேர்த்தல் வேண்டும். |
| (iii) | உரிய 02 விவசாய அமைப்பினாலும் நீர்த்தேக்கத்தில் சேற்று மண்ணை அகற்றி நீர்த்தேக்கத்தின் நீர் கொள்ளளவினை | வழங்கப்பட்ட GPS ஒருங்கிணைப்பானது குளத்தின் நிரம்பி வழியும் மட்டத்தினுள் (FSL) அமைந்துள்ளதுடன் | அங்கீகரித்த கடித்தில் குறிப்பிட்ட நிபந்தனை களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதற்கு அனைத்து வெளிக்ள |

| | | | |
|---|---|---|---|
| | அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வேண்டிக் கொள்ளப்பட்டிருந்தும் மணல் மற்றும் சேற்று மண்ணை அகற்றுவதற்காக திணைக்களத்தினால் அனுமதி வழங்கப்பட்ட இடங்களில் அகழ்தல் மேற்கொள்ளப்பட்டு நீர்த் தேக்கத்தின் நிர் கொள்ளளலினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் நீர்த் தேக்கத்தின் பள்ளமான பகுதியில் மணல் மற்றும் மண் அகழ்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | அந்த பிரதேசத்தில் உள்ள சேற்று மண்ணை அகற்றுதல் குளத்தின் கொள்லளவினை அதிகரிப்பதற்கு தாக்கத்தினை ஏற்படுத்தும் பிரதான பிரதேசங்களாகும். அதற்கிணங்க அகழ்தல் மேற்கொள்ளப்பட்ட இடங்கள் நிரம்பி வழியும் மட்டத்தில் அமைந்துள்ளதனால் அதன் மூலம் குளத்தின் கொள்லளவு அதிகரிப்பதுடன் கணக்காய்வு பரீட்சிப்பில் அவதானிக்கப்பட்ட நாளது மணலை உலர்த்துவதற்காக பயன்படுத்தப்பட்ட குளக்கட்டின் மேல் மட்டம் உயர்வாக அமைந்துள்ள பிரதேசமாகும். | பரீட்சிப்புக்களிலும் உறுதிப்படுத்துவதற்காக பரீட்சிப்பு பட்டியல் அறிமுகப்படுத்துதல் வேண்டும். நிபந்தனைகளை மீறிய விவசாய அமைப்புக்கள் கறுப்பு பட்டியலில் சேரத்துக் கொள்ளப்படுதல் வேண்டும். |
| (iv) | உரிய 02 விவசாய அமைப்புக்களுக்கு பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கிய இணக்கப்பாட்டினை உள்ளடக்கிய கதங்களின் நிபந்தனைகளின் பிரகாரம் உரிய செயற்பாட்டினை மேற்பார்வை செய்வதற்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஒரு உத்தியோகத்தரினை ஈடுபடுத்துவதற்காக மேற்பார்வை மற்றும் நிருவாக கட்டணமாக ஒரு நாளைக்கு ரூபா 2,000 தொகை செயற்திட்ட பிரேரணையாளரினால் செலுத்துதல் வேண்டும். அவ்வாறு அறவிட வேண்டிய மேற்பார்வை மற்றும் நிருவாக கட்டணம் ரூபா 718,000 | ரூபா 2,000 வீதம் செலுத்துவதற்கு வேண்டிக்கொள்ளப்பட்டிருந்ததானது உரிய வேலைத்தளத்திற்காக அமைய அடிப்படையில் ஒரு மேற்பார்வையாளரை ஈடுபடுத்துவதற்காக என்பதுடன் இப்பணம் பெற்றுக்கொள்ளப்படாமையின் அடிப்படையில் அவ்வாறு ஒரு மேற்பார்வையாளர் ஈடுபடுத்தப்படவில்லை. | அங்கீகரித்த கடிதத்தில் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பதனை அனைத்து வெளிக்கள பரீட்சிப்பிலும் உறுதிப்படுத்துவதற்காக பரீட்சிப்பு பட்டியல் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். நிபந்தனைகளை மீறிய விவசாயிகள் அமைப்பினை கறுப்ப பட்டியலில் சேர்த்தல் வேண்டும். திணைக்களத்தினால் அறவிட வேண்டிய கட்ட ணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

தொகை திணைக்களத்தினால் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3.2 எதிர்பார்த்த பிரதிபலன்கள் பெற்றுக்கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| **(அ) யான்ஓயா நீர்த்தேக்க செயற்திட்டம்** | | |
| யான்ஓயா நீர்த்தேக்க செயற்திட்டத்தின் கீழ் பிரதான குளத்து அணைக்கட்டினை நிர்மாணித்தல், 04 தடுப்புச் சுவர்கள் நிர்மாணித்தல், 18 கிலோ மீற்றர் நீளமான இடதுகரை கால்வாயினை நிர்மாணித்தல், 12 கிலோ மீற்றர் நீளமான வலது கரை கால்வாயினை நிர்மாணித்தல் என்பன உத்தேசிக்கப்பட்டிருந்தன. அதன் கீழ் இடது கரை கால்வாயினைத் தவிர்த்து ஏனைய செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் அமெரிக்க டொலர் 176 மில்லியன் தொகையான நேரடி ஒப்பந்தமாக China CAMC Engineering Co. Ltd (CAMCE) கம்பனியுடன் 2011 நவம்பர் 03 ஆந் திகதி உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த ஒப்பந்த உடன்படிக்கையின் விடயப்பரப்பானது பிராதான அணைக்கட்டு மற்றும் 04 தடுப்புச் சுவர்களை நிர்மாணிப்பதற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படும் வகையில் மற்றும் ஒப்பந்த பெறுமதி அமெரிக்க டொலர் 150 | யான்ஓயா நிர்மாணத்திற்காக உடன்படிக்கையினை மேற்கொள்ளுதல் அமைச்சினால் அமைச்சரவை சிபாரிசுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டது. | பெரிய அளவிலான அபிவிருத்தி செயற்திட்டங்களின் ஒப்பந்த நிருவாகத்துடன் தொடர்புபட்ட விடயங்கள் கொள்கை ரீதியான விடயங்களாக கருதி செயற்படாதிருத்தல் வேண்டும். அமைச்சரவை விஞ்ஞாபனத்தை சமர்ப்பிக்கும் போது அவதானிப்புக்களில் குறிப்பிட்ட விடயங்களை உள்ளடக்கி பெரும்பாகப் பொருளாதார தாக்கம் தொடர்பான விபரமான தகவல்கள் அறிக்கையிடப்படுதல் வேண்டும். |

டிதாகையான வகையில் 2013 ஆகஸ்ட் 16 ஆந் திகதி திருத்தப்பட்டிருந்தது.
இடதுகரை கால்வாயை நிர்மாணிப்பதற்காக அமெரிக்க டாலர் 39.5 மில்லியன் தொகையான உடன்படிக்கை 2017 திசெம்பர் 12 ஆந் திகதி உரிய ஒப்பந்தக்காரருடன் கையொப்பமிடப்பட்டிருந்தது.
வலது கால்வாய் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்நாட்டு ஒப்பந்தக்காரரின் மூலம் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.
தொடக்க உடன்படிக்கையின் பிரகாரம் நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் அமைச்சானது நிதி மற்றும் திட்ட அமுலாக்கல் அமைச்சினூடாக சீன கடன் வழங்கும்
நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்த பணத்தில் 85 சதவீதம் அளவானவை கடன் பணமாகவும் ஒப்பந்த பணத்தில் 15 சதவீதம் அளவானவை இலங்கை அரசாங்கத்தினாலும் செலவு செய்வதற்கு இணங்கி கொள்ளப்பட்டிருந்ததுடன் கடன் பணத்தை பெற்றுக்கொள்வது சம்பந்தமாக சீன வங்கியுடன் நடாத்தப்பட்ட
ஒழுங்குபடுத்துதல்
கலந்துரையாடல்
வெற்றியளிக்காமையின்
காரணமாக 03
ஆண்டுகளுக்குள்
இச்செயற்திட்டமானது
உள்நாட்டு நிதிகளின் மூலம் அமுல்ப்படுத்தப்பட்டு பூர்த்தி செய்வதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 2013 ஆம் ஆண்டின் போது தொடக்க உடன்படிக்கையானது திருத்தம் செய்யப்பட்டிருந்தது. அது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள்
அவதானிக்கப்பட்டன.

(i) சீன அரசாங்கத்தினால் வழங்கப்படும் கடன் | யான் ஓயாவினை பெரிய அளவிலான நிர்மாணிப்பதற்காக அபிவிருத்தி

| | | | |
|---|---|---|---|
| | எதிர்பார்ப்பில் போட்டி விலை மனுக்கள் கோரப்படாது நேரடி ஒப்பந்த முறைமையின் கீழ் சீன ஒப்பந்தக்காரர் ஒருவரினை தெரிவுசெய்வதன் மூலம் போட்டி விலை கோருவதனால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகயிருந்த நலன்கள் கிடைத்திருக்கவில்லை. | உடன்படிக்கையினை மேற்கொள்ளலானது அமைச்சினால் அமைச்சரவை சிபாரிசுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டது. | செயற்திட்டத்தின் ஒப்பந்த நிருவாகம் சம்பந்தப்பட்ட விடயங்களானது கொள்கை ரீதியான விடயங்களாக விளக்கமளித்து செயற்படாதிருத்தல் வேண்டும். அமைச்சரவை விஞ்ஞாபனத்தை சமர்ப்பிக்கும் போது அவதானிப்புக்களில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் உள்ளடங்களான பெரும்பாக பொருளாதார தாக்கம் தொடர்பான விபரமான தகவல்கள் அறிக்கையிடப்படுதல் வேண்டும். எப்போதும் பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | வெளிநாட்டு கடன் எதிர்பார்ப்பில் EPC ஒப்பந்த உடன்படிக்கையாக அமெரிகக டொலர் மூலம் கொடுப்பனவு செய்யும் நிபந்தனை உள்ளடக்கப்பட்டிருந்த துடன் வெளிநாட்டு நிதி கிடைக்காதிருந்தும் உடன்படிக்கை நிபந்தனையில் மாற்றம் செய்யாமையின் காரணமாக நாட்டில் வெளிநாட்டு நாணய ஒதுக்கத்திற்கு பாதகமாக தாக்கமளித்திருந்தது. | யான் ஓயா நிர்மாணத்திற்காக உடன்படிக்கையை மேற்கொள்ளல் அமைச்சினால் அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு இணங்க மேற்கெள்ளப்பட்டுள்ளது . | செயற்திட்டம் சம்பந்தமாக அமைச்சரவை பத்திரத்தினை சமர்ப்பிக்கும் போது பெரும்பாக பொருளாதார தாக்கம் தொடர்பான விபரமான தகவல்கள் அறிக்கையிடப்படுதல் வேண்டும். |
| (iii) | தொடக்க திட்டத்தின் பிரகாரம் செயற்திட்டம் 2017 ஆம் ஆண்டின் போது பூர்த்திசெய்யப்பட வேண்டி காணப்பட்டிருந்தும் அமைச்சரவை அங்கீகாரத்துடன் கால எல்லையானது 2022 திசெம்பர் வரை நீடிக்கப்பட்டிருந்ததுடன் கிரய மதிப்பீடானது ரூபா 36855 மில்லியனிலிருந்து ரூபா 48,553 மில்லியன் | காணிகளை சுவீகரிப்பதிலுள்ள சிக்கலின் காரணமாக காலம் நீடிக்கப்பட்டிருந்தது. | காலநீடிப்பின் மூலம் எதிர்பார்த்த பொருளாதார பிரதிபலன்களை அடைந்து கொள்வதற்கு ஏற்படும் பாதகமான தாக்கம் சம்பந்தமாக போதிய கவனத்துடன் செயற்படுதல் வேண்டும். மேலதிக கிரயத்தினை மேற்கொள்வதற்கு முன்னர் உரிய தாமதத்தினால் ஒப்பந்தக்காரர்களுக்கு புறம்பாக இடம்பெற்றுள்ளது என உறுதிப்படுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. | | வேண்டும். செயற்திட்டத்தினை அமுல்படுத்தும் போது செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | 2021 யூலை 05 ஆந் திகதிய அமப/21/1123/317/035 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்த போதிலும் செயற்திட்டத்தை பூர்த்திசெய்வது தொடர்பாக இன்னும் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகள் தொடர்பான அறிக்கை, செயற்திட்டத்தை முடிவுறுத்தும் கணக்கு, செயற்திட்டத்தின் சொத்துக்களை ஒப்படைத்தல் என்பன முறைப்படியாக இடம்பெற்றுள்ளது என உறுதிப்படுத்துவதற்குரிய ஆவணங்கள் மற்றும் EPC ஒப்பந்தத்தின் 02 உடன்படிக்கைகள் தொடர்பாக எதிர்காலத்தில் உருவாகக்கூடிய பிணக்குகளை தீர்த்துவைத்தல் மற்றும் ஏனைய சட்டரீதியான செயற்பாட்டின் போது சேவை நாடுனரின் உரிமையை உறுதிப்படுத்துவதற்காக தேவையான ஆவணங்கள் தயாரிக்கப்படாதிருந்தும் நீர்ப்பாசன திணைக்களத்தினால் செற்திட்டம் பெறுப்பேற்கப்பட்டிருந்த | இச்செயற்திட்டம் அமைச்சின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்டு திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. | பெரிய அளவிலான செயற்திட்டங்களை முடிவுறுத்தியதன் பின்னர் பொறுப்பேற்கும் போது பின்பற்றப்பட வேண்டிய நிரந்தர நடைமுறையினைக் காட்டி அறிவுறுத்தல்கள் வழங்கப்படுதல் வேண்டும். |

து.

(v) திருகோணமலை மாவட்டத்தில் இனங்காணப்பட்ட பிரதேசங்களுக்கு குடிநீர் மற்றும் 2,287 ஹெக்டயர் விவசாயக் காணிகளில் பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்குத் தேவையான நீரினை வழங்குதல், அனுராதபுரம் மாவட்டத்தில் இனங்காணப்பட்ட பிரதேசங்களுக்கு குடிநீர், மற்றும் 5,360 ஹெக்டயர் விவசாயக் காணிகளுக்கு நீரினை வழங்குதல் வாஹல்கட, பதவிய, கோமான்கடவள, ஆகிய விவசாய பிரதேசங்களில் மிகவும் தீவிரமாகப் பரவி வரும் சிறுநீரக நோயை கட்டுப்படுத்துவதற்காக சுத்தமான குடிநீரினை வழங்கும் செயற்திட்டத்தினை ஆரம்பித்தல் இச்செயற்திட்டத்தின் பிரதான பிரதிபலன்களாக இனங்காணப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் திருகோணமலை மற்றும் அனுராதபுரம் மாவட்டங்களில் உத்தேச குடிநீர் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன் இடதுகரை மற்றும் வலதுகரை கால்வாய்களின் கீழ் புதிதாக பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்கு உத்தேசித்துள்ள காணிகள் வனபாதுகாப்பு திணைக்களத்தினால் விடுவிக்கும் நடவடிக்கையும் முடிவடைந்திருக்கவில்லை. சிறிய குளங்கள் முறைமையின் பகிர்தல்

யான்ஓயா நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதற்காக சீனா CAMCE கம்பனியுடன் 2011 நவம்பர் 03 ஆந் திகதி தலைமை வேலைகளுக்காக உடன்படிக்கை செய்த MIWRM/CONS/YANOYA/2011/01 ஆம் இலக்க அமெரிக்க டொலர் 176 மில்லியன் தொகைக்கான உடன்படிக்கையின் 4.10 ஆம் இலக்க விடயத்தின் கீழ் கட்டிட வசதிகளுக்காக அமெரிக்க டொலர் 2,913,420.00 ஒதுக்கீடு செய்யப்பட்டது. எனினும் இந்த உடன்படிக்கையானது 2013 ஆகஸ்ட் 16 ஆந் திகதி அமெரிக்க டொலர் 150 மில்லியனாக திருத்தம் செய்யப்பட்டது. போதியளவில் பிரதிபலன்கள் கிடைத்துள்ளது. தற்பொழுது பெரும் போகத்திற்காக 11550 ஏக்கர்களில் வேளாண்மை செய்யப்படுகின்றது.

எதிர்பார்த்த பொருளாதார பிரதிபலன்களை அடைந்து கொள்வது சம்பந்தமாக பகுப்பாய்வு ரீதியான அறிக்கையினைத் தயாரித்து பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டமை சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களை இனங்காண்பதற்காக பரீட்சிப்புக்களை ஆரம்பித்தல் வேண்டும். நிறைவேற்றப்படாத குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக திட்டங்களோடு புதிய வேலைத்திட்டம் அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | கால்வாய்களையும் நிர்மாணித்தலும் முடிவடைந்திருக்கவில்லை. சிறுநீரக நோயினை கட்டுப்படுத்துவதற்காக பங்களிப்பு கிடைத்துள்ளதா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை. எவ்வாறாயினும் செயற்திட்டத்தின் கீழ் தற்பொழுது பூர்த்தி செய்யப்பட்டுள்ள செயற்பாடுகளை உச்ச பொருளாதார பிரதி பலன்களை தோற்றுவிக்கும் வகையில் பயன்படுத்துவதற்கான ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு அமுல்ப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 38,349 மில்லியன் கிரயத்திற்கு போதியளவிலான பொருளாதார பிரதிபலன்கள் தேசிய பொருளாதாரத்திற்கு சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (vi) | நீர்த்தேக்கம் மற்றும் இடது கரை கால்வாயை நிர்மாணிப்பதற்காக கோமரன்கடவல, ஹொரவ்பதான, கெபிரிகொல்லாவ, பதவிய, பதவிசிரீபுர ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் அரசாங்கத்தின் 887 காணித்துண்டுகளும் தனியார் தரப்பினர்களுக்கு இழப்பீடு செலுத்தி பறிமுதல் செய்யப்பட வேண்டிய 3,919 காணித்துண்டுகளும் காணப்பட்டன. காணிகளை சுவீகரித்தல், மீளக்குடியமர்த்துதல், | காணிகளைச் சுவீகரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மதிப்பீட்டு அறிக்கை கிடைப்பதிலுள்ள தாமதத்தின் காரணமாக கொடுப்பனவு நடவடிக்கைகளும் தாமதமடைந்திருந்த போதிலும் பதிவேடுகள் பேணப்பட்டு வருகின்றன. | காணிகளைச் சுவீகரித்தல், இழப்பீடு செலுத்துதல், மீளக் குடியமர்த்துதல் சம்பந்தமான அனைத்து தகவல்களையும் உள்ளடக்கிய தகவல் முறைமை பேணப்பட வேண்டியதுடன் பதிவேடுகள் முறைப்படியாக பேணப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இழப்பீடு செலுத்துதல், ஆகிய நடவடிக்கைகளுக்காக முக்கயமான தகவல் பதிவேடு அல்லது நாளதுவரையாக்கப்பட்ட தகவல் முறைமை பேணப்பட்டிருக்காததுடன் பதிவேடு முறைப்படியாக பேணப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக காணிகளைச் சுவீகரிக்கும் நடவடிக்கை பூரணப்படுத்தப்பட்டுள்ளது எனவும் இழப்பீடு செலுத்துதல் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள வரையறைகளுக்கு இணங்க உரிய நபர்களுக்கு சரியான மதிப்பீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதுள்ளது. மேலும் செயற்திட்டத்தின் கீழ் பொறுப்பேற்கப்பட்டுள்ள காணிகளின் அளவு மற்றும் அந்த பொறுப்பேற்கப்பட்டுள்ள காணிகள் பயன்படுத்தப்பட்டுள்ள முறைமை தொடர்பாகவும் கணக்காய்வின் போது உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது. | | |
| (vii) | செயற்திட்டம் தொடர்பாக 2438 காணித் துண்டுகளுக்காக மாத்திரம் இழப்பீடு செலுத்துதல் முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன் இன்னும் 1481 காணித் துண்டுகளுக்காக இழப்பீடு செலுத்துதல் முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டு அறிக்கை கிடைப்பதிலுள்ள தாமதத்தின் காரணமாக கொடுப்பனவு நடவடிக்கை தாமதமடைந்துள்ள போதிலும் பேணப்பட்டு வருகின்றது. | காணிகளைச் சுவீகரித்தல், மீளக்குடியமர்த்துதல், இழப்பீடு செலுத்துதல் ஆகிய நடவடிக்கைகளை துரிதப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (viii) | யான் ஓயா இடதுகரை கால்வாயை நிர்மாணிப்பது சம்பந்தமாக சீனா ஒப்பந்தக்காரருடன் மேற்கொள்ளப்பட்ட EPC ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் நிறைவேற்ற வேண்டியிருந்த அமெரிக்க டொலர் 3,478,910 தொகையான செயற்பாடுகள் நிறைவேற்றப்படாதிருந்த போதிலும் அதற்காக வேலைகள் சான்றுபடுத்தப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது அதன்போது<br><br>1. மதிப்பீட்டு விடயம் இலக்கம் 3.5.5 இன் கீழ் கால்வாயினூடாக பயணம் செய்யக்கூடிய வகையில் 13 குழாய்ப் பாலங்களும் (Pipe bridge across main canal) தயாரிக்கப்பட வேண்டி இருந்த போதிலும் 11 பாலங்கள் மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அவையும் விவசாயிகள் பயணம் செய்யக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>2. 4.2 ஆம் இலக்க மதிப்பீட்டு விடயத்தின் கீழ் மனிதர்களாலும் மின்சாரத்தினாலும் | திட்டமிடல் நடவடிக்கையினை மேற்கொள்வதும் ஒப்பந்தக்காரரினால் மேற்கொள்ளப்பட்டதுடன் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் களத்திற்குப் பொருத்தமான திட்டங்கள் திருத்தப்பட்டுள்ளன. நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற சந்தர்ப்பத்தில் தேவைப்பாட்டிற்கு இணங்க வாயில் கதவுகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. மின்வலு இணைப்புக்கள் அப்பிரதேசத்தில் இல்லாததனால் மின்சார மோட்டார்கள் பொருத்தப்பட்டிருக்கவில்லை. கால்வாயின் கொள்ளளவினை ஒரே அளவிற்கு திட்டமிடும் தேவைப்பாடு இருக்கவில்லை. முறைப்படியாக பொறுப்பேற்கப்பட்டிருக்கவில்லை. செயலாற்றல் அறிக்கை ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டுள்ளது. | EPC ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தக்காரினால் பூர்த்திசெய்யப்பட வேண்டிய அனைத்து வேலைகளும் பூர்த்திசெய்யப்படாதிருந்தும் அனைத்து வேலைகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது எனவும் நிர்ணயிக்கப்பட்ட பொருள் விபரக் குறிப்பிற்கு இணங்க மற்ற நிர்மாணங்களுக்காக செயலாற்றல் சான்றிதழ் வழங்கப்பட்டு கொடுப்பனவுகளை சான்றுபடுத்திய உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக ஒழுக்காற்று நடைமுறை பின்பற்றப்படுதல் வேண்டும். |

செயற்படுத்தக் கூடிய 32 வாயில் கதவுகள் உருவாக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 15 வாயில் கதவுகள் மாத்திரம் உருவாக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் மின்சார மோட்டார்கள் செயற்படுவதற்குத் தேவையான மின்வலு வழங்கப்படாதிருந்தும் முழுத் தொகையும் செலுத்தபபட்டிருந்தது.

3. இடதுகரை கால்வாய் ஒரு வினாடிக்கு 300 கன அடி கொள்லளவினைக் கொண்டதாக தயாரிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் அதில் 7+720 கிலோ மீற்றர் வரையான பகுதி மாத்திரம் அதற்கு இணங்கியதாக தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அதிலிருந்து 18.21 கிலோ மீற்றர் வரையான பகுதி ஒரு வினாடிக்கு 150 கன அடி கொள்லளவினைக் கொண்டதாக நிர்மாணிக்கப்பட்டிருந்தமை மற்றும் 7+720 கிலோமீற்றர் பகுதியினை

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாணிப்பதற்கு உத்தேச நீர்த்தேக்கம் தயாரிக்கப்பட்டிருக்காமையின் காரணமாக தொடக்க பகுதியும் ஒரு வினாடிக்கு 300 கன அடி கொள்லளவிலான நீரினை வழங்குவதற்கு முடியாதிருந்தது. | | |
| (ix) | தொடக்க ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் கட்டிட வசதிகளுக்காக அமெரிக்க டொலர் 2,913,420 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அதன் கீழ் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்கள் தொடர்பான விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பின்னர் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. | தொடக்க திட்டத்தின் பிரகாரம் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட கட்டிடங்களை பின்னர் திருத்தம் செய்வற்காக முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது எனவும் மேற்கொள்ளப்பட்ட கிரயத்திற்குரிய அனைத்து சான்றுபடுத்தல்களையும் உள்ளடக்கிய அறிககை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (x) | வேலைதளத்திற்கு பிரவேசித்தல் மற்றும் வெளியேறுதல நடவடிக்கைகளுக்காக நீர்த்தேக்கத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தின் கீழ் அமெரிக்க டொலர் 4,672,247 தொகை மற்றும் இடது கரை கால்வாயை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தின் கீழ் அமெரிக்க டொலர் 486,358 தொகை ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஒப்பந்தக்கார் இன்றுவரை வேலைத் தளத்திலிருந்து வெளியேறியிருக்காததுடன் அதிலுள்ள தற்காலிக அலுவலக கட்டிடம், கல் அரைக்கும் இயந்திரம் மற்றும் ஏனைய | இயந்திரத்தினை அப்பபுறப்படுத்துவதற்கான சட்டரீதியான தடையினால் அப்புறப்படுத்தப்படவில்லை. | செயலாற்றல் சான்றிதழினை வழங்கிய திகதியின் பின்னர் வேலைத்தளத்திலிருந்து முறைப்படியாக வெளியேறாது பயன்படுத்தி வரும் அரசாங்கத்தின் காணி மற்றும் ஆதனங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்து குத்தகை அறவிடப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இயந்திர உபகரணங்களுக்காக ஒப்பந்தக்காரரினால் பாதுகாப்புச் சேவைகளை வழங்கி நிலம் இன்னும் பயன்படுத்தப்பட்டு வந்திருந்தது. | | |
| (xi) | இச்செயற்திட்டத்தின் கீழ் நீர்த்தேக்கத்தை நிர்மாணித்தல் மற்றும் இடது கரை கால்வாயை நிர்மாணித்தலுக்காக சீன ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை செய்து கொள்ளும் போது EPC ஒப்பந்த ஆவணம் பயன்படுத்தப்பட்டிருந்தும் அதன் நிர்மாணப் பொருட்களுக்காக அரசிறை கொடுப்பனவு சம்பந்தமான 7.8 ஆம் ஏற்பாடானது விசேட ஏற்பாட்டின் மூலம் திருத்தம் செய்யப்பட்டிருந்தது. அதன் போது மண் மற்றும் கருங்கற்களை அகழ்வதற்கான அங்கீகாரம் மற்றும் அறசிறையினைச் செலுத்துதல் தொழில் தருனரினால் (Employer) வழங்கப்பட வேண்டும் எனவும் செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்படும் கால எல்லைக்குள் மண் மற்றும் கருங்கல் கட்டணத்தை செலுத்தாது ஒப்பந்தக்காரரினால் பெற்றுக்கொள்ளக்கூடியது எனத் தெரிவித்து திருத்தப்பட்டிருந்தது. அதன் போது மேற்கூறிய 02 செயற்திட்டங்களின் நடவடிக்கைகளுக்காக ஒப்பந்தக்காரரினால் பயன்படுத்தப்பட்ட 81,905 கியூப் மணல் மற்றும் 201,784 கியூப் கருங்கற்கல் 157,234 கியூப் மண் என்பவற்றிற்காக | இது சம்பந்தமாக தற்பொழுது எடுக்க கூடிய நடவடிக்கைகள் இல்லை. | உடன்படிக்கையின் நிபந்தனைகள் மற்றும் செல்லுபடியாகும் சட்டவிதிகள் தொடர்பாக அதிக கவனத்துடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அது தொடர்பாக போதிய கவனம் செலுத்தாது உடன்படிக்கைகளை திருத்திய உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடைமுறைகள் பின்பற்றப்படுதல் வேண்டும். ஒப்பந்தக்காரரினால் பயன்படுத்தப்பட்ட மணல், கருங்கற்கள் மண் என்பன தொடர்பாக அரசாங்கத்தினால் அறவிடப்பட வேண்டிய காணியை பயன்படுத்துதல் கட்டணம் மற்றும் அரசிறையை செலுத:துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். மேலும் இவ்விடயங்கள் சம்பந்தமாக 2018 இல் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1) ஆம் பிரிவின் பிரகாரம் சட்டத்தை நிறைவேற்றும் முகவர் நிறுவனத்திற்கு முறைப்பாடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காடுகள் கட்டளைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய காணிப் பயன்பாட்டுக் கட்டணம் ரூபா 2,196 மில்லியன் மற்றும் 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கனியப் பொருள் அதிகாரச் ச்ட்டத்தின் பிரகாரம் இன்னும் அறவிட வேண்டிய ரூபா 27 மில்லியனுக்கு மேற்பட்ட அரசிறை இன்று வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (xii) | ஒப்பந்தக்காரரினால் 2018 திசெம்பர் 21 ஆந் திகதி நிர்மாண வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருந்ததுடன் 05 ஆண்டுகள் கடந்ததன் பின்னரும் அரசிறை மற்றும் காணிப் பயன்பாட்டுக் கட்டணம் செலுத்தப்படாது அகழ்வு செய்யப்பட்ட கல் மணல் மற்றும் கனியப் பொருட்களின் இருப்பு வேலைத் தளத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தது. | பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | அரசிறை மற்றும் காணிப் பயன்பாட்டுக் கட்டணத்தை செலுத்தாது அகழ்வு செய்து 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் குவித::து வைத்துள்ள கல் மற்றும் மணலை அரசாங்கத்தினால் பொறுப்பேற்பதற்கு மற்றும் நிர்ணயிக்கப்பட்ட கொடுப்பனவுகளை மேற்கொண்டு மற்றுமொரு செயற்திட்டமாக முறைப்படியாக ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கையிலுள்ள பெரிய நீர்ப்பாசன தொழில் முயற்சிகளின் பண்ணைகளின் காணிகளை மீள அபிவிருத்தி செய்வதினை ஆய்வு செய்வதற்கான முன்னோடி செயற்திட்டம் | | |
| | நீர்ப்பாசன விவசாயக் காணிகளின் வினைத்திறன் மற்றும் வளங்களைப் பயன்படுத்தும் செயற்திறனை அதிகரித்தல், விவசாய நடவடிக்கைகளை நவீனமப்படுத்தலும் இயந்திர மயப்படுத்தலும், தற்காலத்தில் முகங்கொடுக்கின்ற காலநிலை மாற்றங்களை வெற்றிகொள்ளல் மற்றும் | | |

ஜப்பானுக்கும் இலங்கைக்குமிடையே தொழில்நுட்பத்தை பரிமாற்றம் செய்வதற்காக காணிகளை ஒருங்கிணைப்பு செய்தல் தொடர்பாக ஆய்வு செய்யும் முன்னோடி செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்கு ஜப்பான் நீர்ப்பாசன மற்றும் வடிகாலமைப்பு நிறுவனத்தின் (JIID) தலைவர் மற்றும் நீர்ப்பாசன அமைச்சு செயலாளர் 2021 மார்ச் 31 ஆந் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையொப்பமிட்டிருந்தார். இச்செயற்திட்டத்திற்காக 2019 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை அரசாங்கம் ரூபா 38,024,115 தொகையும் ஜப்பான் நீர்ப்பாசன மற்றும் வடிகாலமைப்பு நிறுவனம் ஜப்பான் உதவி ரூபா 8,766,667 (USD 43,627) தொகையுமாக மொத்தமாக ரூபா 46,790,782 இனை செலவு செய்திருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (i) | இச்செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்குரிய உடன்படிக்கை 2021 மார்ச் 31 அந் திகதி கையொப்பமிடப்பட்டிருந்தும் அதற்கு முன்னர் 2018 ஆம் ஆண்டில் செயற்திட்டத்தின் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2019-2021 காலத்தில் திணைக்களத்தின் 22 உத்தியோகத்தர்கள் வெளிநாட்டு பயிற்சிக்கு பங்குபற்றியிருந்தனர். அதன் போது உத்தியோகத்தர்கள் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளுக்கு பங்களிப்பினை வழங்க வேண்டும் என உடன்படிக்கையின் மூலம் இணக்கபாட்டினை பெற்றுக்கொண்டிருக்காததுடன் பயிற்சிகள் வழங்கப்பட்ட 22 உத்தியோகத்தர்களுக்கு மத்தியில் 09 உத்தியோகத்தர்கள் ஓய்வுபெறுதல், ஏனைய | பொறியியலாளர் எம்.டபிள்யூ.பீ.டீ சில்வா அவர்கள் நீர்ப்பாசன பணிப்பாளர் அனுராதபுரத்திலிருந்து பதவியுயர்வு பெற்று தலைமை அலுவலகத்தில் சேவைக்காக சமூகமளித்தள்ளார். இச்செயற்திட்டத்தின் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான நீர்ப்பாசன முகாமைதத்துவ பிரிவில் கடமையாற்றிய ஆர்.பி.எம். திஸ்நாயக்க அவர்கள் மேற்கூறிய பயிற்சிக்காக பங்குபற்றியுள்ளதுடன் நீர்ப்பாசன முகாமைத்துவ பிரிவில் தற்பொழுது தீவிர ஆளணி பற்றாக்குறை காணப்படுகின்றது எனவும் அதற்காக அதற்குப் பொருத்தமான ஏனைய உத்தியோகத்தர்கள் | வெளிநாட்டு பயிற்சி கற்கை நெறிக்காக உத்தியோகத்தர்களை தெரிவுசெய்யும் போது செயற்திட்டத்தினை வெற்றிபெறச் செய்வதற்குத் தேவையான வரையறைகளைத் தீர்மானித்து அதற்கிணங்க உத்தியோகத்தர்கள் தெரிவுசெய்யப்படுதல் வேண்டும்.<br><br>செயற்திட்டம் முடிவடையும் வரை உரிய உத்தியோகத்ரத்கள் வழக்கமான இடமாற்ற நடைமுறைக்குப் பறம்பாக செயற்திட்டத்தில் கடமையாற்ற வேண்டும் என்ற நிபந்தனையை உள்ளடக்கி உடன்படிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். வெளிநாட்டு பயிற்சி கற்கை நெறிகளின் மூலம் பெற்றுக்கொள்ளும் அறிவினையும் பயிற்சியையும் உரிய |

நிறுவனங்களுக்கு இடமாற்றப்படுதல் மற்றும் ஏனைய கடமைகளுக்காக இணைத்துக் கொள்ளப்படுவதன் காரணமாக அவர்களிடமிருந்து முன்னோடி செயற்திட்டத்திற்காக போதியளவு பங்களிப்பு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதற்கு மத்தியில் 2019 ஆம் ஆண்டின் யூலை மாதத்தின் போதும் ஆகஸ்ட் மாத்தின் போதும் ஓய்வுபெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த இரண்டு உத்தியொகத்தர்கள் 2019 பெப்ரவரி மாத்தின் போது ஜப்பானில் பயிற்சி கற்கை நெறிக்காக பங்குபற்றியிருந்ததுடன் பயிற்சி பெற்ற சில மாதங்களின் பின்னர் மேற்கூறிய உத்தியோகத்தர்கள் ஓய்வுபெற்றிருந்தனர்.

இன்னும் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

அவ்வாறே அப்போது பிரதேச செயலாளராக செயற்பட்ட விஜேசிங்ஹ அவர்களும் பயிற்சியின் பின்னர் 07 மாதங்களுக்கு அண்மித்த காலம் காணி சம்பந்தமான நடவடிக்கைகளை நிறைவேற்றி சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். எம்.எம்.எஸ்.பீ ஹேரத் அவர்கள் வெளிநாட்டு பயிற்சிகளின் பின்னர் 03 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் இச்செயற்திட்டத்தின் அதிகாரப் பிரதேசத்தில் வதிவிட செயற்திட்ட முகாமையாளராக சேவையாற்றி சேவைத் தேவைப்பாடு மற்றும் சுகாதார ரீதியான காரணங்களின் அடிப்படையில் இடமாற்றம் பெற்றுள்ளார். பொறியியலாளர் ஆர். ஏ.ஆர். விதுரகிரிசாந்த அவர்கள் வெளிநாட்டு பயிற்சியின் பின்னர் திருமணம் செய்யும் தேவைப்பாட்டின அடிப்படையில் அதற்கு அண்மித்த சேவை நிலையத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார். சந்தியா அபேசேகர அவர்களின் சேவையானது பதவியுயர்வின் அடிப்படையில் மேலதிக மாவட்ட செயலாளராக (காணிகள்) அனுாதபுரம் மாவட்டத்தில் கடமையாற்றுவதுடன் அந்த உத்தியோகத்தர் துறையின் முன்னேற்றத்திற்கு பயன்படுத்தக்கூடிய வகையிலும் செயற்திட்ட காலம் முழுவதும் சேவையாற்றக்கூடிய வகையிலும் அதிக எண்ணிக்கையான உதத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகளை வழங்கும் வகையில் வெளிநாட்டு பயிற்சி கற்கை நெறிகளுக்காக தெரிவு செய்தல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | | இச்செயற்திட்டத்தின் செயற்பாடுகளுக்காக ஆரம்பம் தொடக்க இன்றுவரை தொடர்ச்சியாக பங்களிப்பினை வழங்கியுள்ளார். பீ.கே.லலனி சகுந்தலா அவர்கள் பதவியுயர்வின் அடிப்படையில் அப்போது வெற்றிடமாக இருந்த சேவை நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ளார். எம். டபிள்யு. இஸாரா ஒஸினஜ அவர்கள் பிரசவ விடுமுறை பெற்றுள்ளார். | |
| (ii) | செயற்திட்டத்திற்கு ரூபா 60 மில்லியனுக்கு மேற்படாத தொகையை செலவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தும் நிலத்தை தயார்படுத:துதல் மற்றும் கால்வாய்களில் ஒரு பகுதியினை மாத்திரம் தயாரிப்பதற்கு ரூபா 119.3 மில்லியன் மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சரவை அங்கீகாரத்தினை மிகைத்து ரூபா 59 மில்லியன் செலவு செய்வதற்கு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | இந்த ஆராய்ச்சி மற்றும் ஆய்வு செயற்திட்டத்தின் மூலம் தயாரிக்கப்பட்டதானது 2019 ஆம் ஆண்டில் அமுல்ப்படுத்துவதற்காக என இருந்த போதிலும் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது நிதி ஏற்பாடு வழங்கப்படவில்லை.<br><br>2021 ஆம் ஆண்டின் போது நிதி ஏற்பாடாக ரூபா 20 மில்லியன் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் அது வயல் காணிகளை தயார்படுத்துவதற்காக மாத்திரமாகும். எனினும் எதிர்பார்த்த செயற்பாடுகள் அனைத்திற்குமாக மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது.<br><br>2022 ஆம் ஆண்டிற்குள் இதன் மிகுதி வேலைகள் அனைத்தையும் முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் நாட்டில் | அமைச்சரவை தீர்மானத்தில் குறிப்பிட்ட செயற்திட்டத்தின் பெறுமதியை மிகைத்து மதிப்பீடு செய்யும் தேவைப்பாடு இருக்குமாயின் மீண்டும் அமைச்சரவையிடமிருந்து அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அங்கீகாரத்தினை மிகைத்து மதிப்பீட்டினை அங்கீகரித்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுப்பதற்காக நியமன அதிகாரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | உருவாகியிருந்த பொருளாதார சிக்கலின் காரணமாக பொருட்களின் விலை அதிகரித்ததனால் மாவட்ட விலை நிர்ணயக் குழுவிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் மதிப்பீடு திருத்தம் செய்யப்பட்டுள்ளது. | |
| (iii) | திணைக்களத்தின் நாச்சியாதீவு பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்தினால் இந்த முன்னோடி செயற்திட்டத்தின் நிலத்தை தயார்படுத்துதல் மற்றும் நிர்மாண நடவடிக்கைகள் பொறுப்பேற்று அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டிலிருந்து பல சந்தர்ப்பங்களில் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளுக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு திருத்தப்பட்டிருந்ததுடன் அதன் முதலாவது மதிப்பீட்டின் கீழ் ரூபா 22 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தும் மேற்கூறிய செயற்பாடுகளுக்காக 2022 ஆம் ஆண்டில் இன்னும் 22.6 மில்லியன் மதிப்பீட்டினை அங்கீகரித்து முதலாவது மதிப்பீட்டின் கீழ் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகளுக்காக மீண்டும் ரூபா 17.3 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | 2021 செப்தெம்பர் 30 ஆந் திகதி தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ள நில அளவைகளை திருத்தம் செய்தல் என்ற தலைப்பில் பிராந்திய செயலாளரினால் புதிய நில அளவை கட்டளைகள் வழங்கப்பட்டன. எனினும் அப்போது 2021 சிறு போகம் முடிவடைந்ததுடன் விவசாயிகளினால் கைவிடப்பட்ட போகத்தின் போது நீர்ப்பாசன திணைக்களத்தின் மூலம் வேலைகள் முடிவுறுத்தப்பட வேண்டியிருந்ததனால் துரிதமாக வேலைகள் மேற்கொள்ளப்பட்டது. அதனால் திருத்திய நில அளவைகளின் பின்னரும் இரண்டு தடவைகள் துண்டு போடுதல் திட்டம் மாற்றமடைந்ததுடன் மீண்டும் 2022 இல் வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அப்போது வரை மேற்கொள்ளப்பட்ட நில அளவைகளுக்கு இணங்க களத்தின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. 2022 இல் வேலைகள் ஆரம்பிக்கையில் 2021 ஆம் ஆண்டின் போது | செயற்திட்ட செயற்பாடுகளுக்காக உறுதியான காலப்பகுதியினைக் காட்டி பொறுப்புக்களை ஒப்படைக்கும் வகையில் செயல் நடவடிக்கைத் திட்டத்தினை தயாரித்து அதற்கிணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இதன் போது பிரதேச செயலாளரினால் எல்லைகளைக் காட்டுவதற்கு முன்னர் காணியை துண்டு போடுதல், குறுக்கு அணை கால்வாய் முறைமையை தயாரிப்பதற்கு தீர்மானம் எடுத்த மற்றும் அறிவுறுத்தல் வழங்கிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுப்பதற்கு நியமன அதிகாரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கொண்ட சில வேலைகளை மீண்டும் தனித்தனியாக மேற்கொள்ள வேண்டியிருந்தது. அதற்காக மீண்டும் செலவு செய்ய வேண்டி ஏற்பட்டது. | |
| (iv) | செயற்திட்டத்தின் கீழ் வயல்களை தயார்படுத்தும் நடவடிக்கையானது 85 சதவீதம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என செயல்முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் 2022/2023 பெரும்போகத்தில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளக் கூடிய மட்டத்திற்கு வயல்கள் தயார்படுத்தப்பட்டிருக்காததுடன் கால்வாய்களை கொங்கிரீட் இட்டு தயார்படுத்துதல், உழவு இயந்திர வழிகளை தயார்படுத்துதல் நீர் முகாமைத்துவத்திற்காக நீர் திருப்பு வழிகளை தயார்படுத்துதல் முதலிய நடவடிக்கைகளில் 03 சதவீதம் மாத்திரம் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. வயல்களுக்காக நீர் வழங்கும் FC8 மற்றும் FC9 கால்வாய்களில் 260 மீற்றர் அளவிற்கு கொங்கிரீட் சுவர்கள் மற்றும் 37 நீர் திருப்பு வழிகள் அளவில் உடைத்து அகற்றுதல் மற்றும் திட்டமிட்டவாறு கால்வாய்கள் தயாரிக்காமையின் காரணமாக அதுவரை காணப்பட்ட நீர் கட்டுப்பாட்டு நடவடிக்கையையும் நிறைவேற்றவதற்கு முடியாதிருந்தது. | ஆராய்ச்சி ஆய்வுகள் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டிருந்ததானது தற்பொழுது இருக்கும் FC08, FC09 கால்வாய்களை அகற்றி ஒரு நபருக்கு தனியான வயல் வரும் வகையில் வயல்களை தயாரிப்பதாகும். இதன் போது வயல்களை தயாரிக்கையில் பழைய FC08, FC09 கால்வாய்களை அகற்றி அதுவரை பயிர்ச் செய்கைக்கு நீரினை எடுத்துச் செல்வதற்கு முடியாத கால்வாயிற்கு பதிலாக புதிய ஒரு கால்வாய் திட்டமிடப்பட்டுள்ளது. | திட்டமிட்டவாறு புதிய கால்வாயை தயாரித்து நீரினை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை முறைப்படியாக பேணுவதற்கும் விவசாயிகளின் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை முறைப்படியாக மேற்கொள்வதற்கும் வசதிகள் வழங்கப்படுதல் வேண்டும். |
| (v) | செயற்திட்டத்தினை | 2021/22 பெரும் | செயற்திட்ட |

அமுல்ப்படுத்தும் திட்டத்திற்கு இணங்க 2021 ஆகஸ்ட் மாதத்திலிருந்து 2021 திசெம்பர் மாதம் வரையில் செயற்திட்டத்தின் அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்திசெய்யப்பட வேண்டிய போதிலும் 2022 ஆகஸ்ட் மாதம் வரை நிலத்தை தயார்படுத்துதல் காணி உறுதிகளைப் பகிர்ந்தளித்தல் முடிவடைந்திருக்கவில்லை. செயற்திட்டத்தின் தொடக்கத்தில் கால்வாய்களுக்கு முழுமையாக கொங்கிரீட் இட்டு தயாரித்தல், மத்திய கால்வாய் மற்றும் இரு பக்கத்திலும் உபகால்வாய்களுக்கு கொங்கிரீட் இட்டு தயாரித்தல், ஒவ்வொரு வயலுக்கும் உழவு .இயந்திர மதகு, நீரை திருப்பும் மடைவாய், நீர் அளவு குறிகாட்டியை தயாரித்தல், நெல்லை உலர்த்துவதற்கான இடம், களஞ்சியம், , நெல் குற்றும் ஆலை, நாற்றுக்களை நடுவதற்கும் களை பிடுங்குவதற்கும் இயந்திரங்களை வழங்குதல், 03 போகங்களின் பின்னர் விளைச்சல் ஒரு ஏக்கருக்கு 20 பூசல்களுக்கும் 30 பூசல்களுக்கும் இடைப்பட்ட அளவில் அதிகரிக்கச் செய்தல் செயற்திட்டத்தின் குறிக்கோளாகக் காட்டப்பட்டிருந்தும் அச்செயற்பாடு எதுவும் செயற்திட்டத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

போகத்தின் போது இரசாயனப் பசளை இல்லாமையால் நாட்டில் நெற்பயிர்ச் செய்கை தடைப்பட்டிருந்ததுடன் நாச்சியாதீவு செயற்திட்டத்தில் 95 சதவீதம் அளவான விவசாயிகள் பயிர்ச் செய்கையை கைவிட்டிருந்தனர். 2022 சிறு போகத்தின் போது பெரிய நீர்ப்பாசன தொழில் முயற்சியில் விவசாயிகளை பயிர்ச் செய்கைக்கு தொடர்புபடுத:துவதற்காக உத்தியோகத்தர்கள் பாரிய முயற்சி எடுக்க வேண்டி ஏற்பட்டிருந்தது.

நடவடிக்கைகளுக்காக உறுதியான காலப்பகுதியைக் காட்டி பொறுப்புக்களை ஒப்படைக்கும் வகையில் திட்டத்தினை தயாரித்து அதற்கிணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். திட்டமிட்டவாறு செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை பூர்த்திசெய்யாமையின் காரணமாக 06 போகங்களில் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளின் போது அந்த விவசாயக் குடும்பங்களுக்கு ஏற்பட்ட அழுத்தங்கள் தொடர்பான சந்தர்ப்பக் கிரயத்தினை கணிபிட்டு செயற்திட்டத்தின் இறுதியில் சமர்ப்பிக்கின்ற செயற்திட்ட அறிக்கைகளில் உள்ளடக்குவதன் மூலம் எதிர்காலத்தில் இவ்வாறான நடவடிக்கைகள் மற்றும் தாமதங்கள் இடம்பெறுவதனை தவிர்ப்பதற்கு ஒரு நடைமுறையினை உருவாக்குதல் வேண்டும்.

செயற்திட்டத்தை அமுல்ப்படுத்தும் போது நாச்சியாதீவில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட 65 ஏக்கர் வயல் காணியில் (26.3) ஹெக்டயர்) 2020 சிறுபோகம் வயல் காணியில் (26.3 ஹெக்டயர்) 2020 சிறுபோகம் மற்றும் 2020/2021 பெரும் போகத்தில் பயிர்ச் செய்கையை அர்ப்பணிப்புச் செய்வதற்கு விவசாயிகளின் இணக்கப்பாட்டினைப் பெற்றுக்கொண்டு 2021 சிறு போகத்திலிருந்து விவசாயிகளுக்கு பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கு முடியுமான வகையில் வயல்களை தயார்படுத்தி கொடுப்பதற்கு இணங்கியிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2022 ஆகஸ்ட் மாதம் வரை முன்னோடிச் செயற்திட்டத்தினை முடிவுறுத்தாமையின் காரணமாக விவசாயிகளுக்கு 2020 இலிருந்து 2023 வரை 06 போகங்களில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. அதன் மூலம் ஒரு போகத்தின் போது 104 மெட்ரிக் தொன் நெல் வீதம் 06 போகங்களின் போதும் 624 மெட்ரிக் தொன் அளவிலான நெல் விளைச்சல் தேசிய பொருளாதாரத்திற்கு இழக்கப்பட்டிருந்ததுடன் அதன் பெறுமதி அண்ணளவாக ரூபா 62 மில்லியன் அளவிலானதாகும்.

### 3.3 செயற்திட்டங்களை பூர்த்திசெய்யாது கைவிடுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பெரிய அளவிலான அபிவிருத்தி செயற்திட்டங்களை மீண்டும் தந்திரோபாயப்படுத்துதல் மற்றும் துரிதப்படுத்துதல் (RAMP) குழுவின் சிபாரிசின் அடிப்படையில் ரூபா 6,000 மில்லியன் மதிப்பீட்டின் அடிப்படையில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 159.4 மில்லியன் செலவு செய்யப்பட்ட குடாவிலச்சி நீர்த்தேக்கத்தை புனரமைப்புச் செய்யும் செயற்திட்டம் மற்றும் ரூபா 2,230 மில்லியன் மதிப்பீட்டின் அடிப்படையில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 10 மில்லியன் செலவு செய்து தெமடகல்ல குளத்தினை புனரமைப்புச் செய்யும் செயற்திட்டம் 2023 ஆம் ஆண்டிலிருந்து அமுல்ப்படுத்தாதிருப்பதற்கு திர்மானிக்கப்பட்டது. 2021 இல் ஆரம்பிக்கப்பட்ட இச்செயற்திட்டத்தினை பூர்த்தி செய்யும் சதவீதம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே 4.95 சதவீதம் மற்றும் 0.25 சதவீதமாகும். | அறிவுறுத்தல்களின் அடிப்படையில் முடிவுறுத்தப்பட்டது. | திணைக்களத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட அனைத்து செயற்திட்டங்கள் தொடர்பாகவும் மீளாய்வு செய்து முன்னுரிமையை இனங்காணுதல் வேண்டும். அத்தகவல்களானது பெரிய அளவிலான அபிவிருத்தி செயற்திட்டங்களை மீண்டும் தந்திரோபாயப்படுத்துதல் மற்றும் துரிதப்படுத்துதல் (RAMP) குழுவிற்கு சமர்ப்பித்தல் வேண்டும். அதனை அடிப்படையாக்க கொண்டு வழங்கப்படுகின்ற சிபாரிசுகளை அமுல்ப்படுத்துவதற்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | வடமாராச்சி தாம்போதியின் நீர் வளத்தினை அபிவிருத்தி செய்வதன் மூலம் யாழ்ப்பாணம் தீபகற்பகத்திலுள்ள | இது பெரிய அளவிலான ஒரு செயற்திட்டமானதுடன் குடிநீரினைப் பெற்றுக்கொள்வதற்காக திட்டமிடப்பட்டது. | கூட்டிணைந்த திட்டம், முன்னுரிமை ஆவணம், செயலாற்றல் அறிக்கை என்பவற்றினுள் இச்செயற்திட்டம் தொடர்பான தகவல்களை |

| | | | |
|---|---|---|---|
| | மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 2,000 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்தின் கீழ் செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தும் அது நிறைவேற்றப்பட்டிருக்காத துடன் 03 ஆண்டுகளுக்குப் பின்னர் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 28 மில்லியன் செலவு செய்து செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. | | உள்ளடக்கி மேற்கொள்ளப்பட்ட செலவிலிருந்து எதிர்பார்த்த பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னுரிமை வழங்கி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | தலுக்கல குளத்தின் புவிச்சரிதவியல் பரீட்சிப்பிற்காக 2022 ஆம் ஆண்டில் ரூபா 3,190,000 மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு செலவு செய்யப்பட்டிருந்தும் அக்குளத்தினை நிர்மாணிப்பது தொடர்பான தொடக்க நடவடிக்கை எதுவும் ஆரம்பிக்கப்படாது இடைநடுவில் கைவிடப்பட்டதன் காரணமாக மேற்கொள்ளப்பட்ட செலவு சிக்கனமற்ற செலவாக மாறியிருந்தது. | தலுக்கல குளத்தில் புவிச்சரிதவியல் பரீட்சிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ரூபா 3,190,000 மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு செலவு செய்யப்பட்டுள்ளது. புதிதாக ஒரு குளத்தினை நிர்மாணிக்கும் போது நில அளவை புலனாய்வு நடவடிக்கை புவிச்சரிதவியல் புலனாய்வு நடவடிக்கை என்பவற்றை மேற்கொண்டு அதற்கிணங்க உருவதாக்கல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்படும். தற்பொழுது தலுக்கல குளத்தின் உருவாக்கல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | கூட்டிணைந்த திட்டம் முன்னுரிமை ஆவணம் செயலாற்றலர் அறிக்கை என்பவற்றினுள் இச்செயற்திட்டம் தொடர்பான தகவல்களை உள்ளடக்கி மேற்கொள்ளப்பட்ட செலவிலிருந்து எதிர்பார்த்த பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னுரிமை வழங்கி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | திணைக்களத்தின் திட்டமிடல் பிரிவின் மூலம் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட்ட பெத்தியாகொடவில் அமைந்துள்ள நீர் பம்பி நிலையத்தை நிர்மாணித்தல், கெகிரியோபட மேலதிக நீர் வழிந்தோடியை நிர்மாணிததல், களணி வெள்ள பாதுகாப்பு திட்டத்தில் நிக்கவெலவில் வெள்ளம் வெளியேறும் கட்டமைப்பினை | இதில் குறிப்பிட்ட சில திட்டங்கள் ஒரே செயற்திட்டத்தின் பகுதிகள் ஆனதுடன் நிதி ஏற்பாடு இல்லாமையின் காரணமாக ஏனைய செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவில்லை. | கூட்டிணைந்த திட்டம், முன்னுரிமை ஆவணம், செயலாற்றல் அறிக்கை என்பவற்றினுள் இச்செயற்திட்டம் தொடர்பான தகவல்களை உள்ளடக்கி மேற்கொள்ளப்பட்ட செலவிலிருந்து எதிர்பார்த்த பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னுரிமை வழங்கி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாணித்தல், மையாவ குளத்தின் நீர் வழிந்தோடியை மேம்படுத்துதல், மல்வத்து ஓயாவிற்கு குறுக்காக RCC பாலத்தை நிர்மாணித்தல், எல்ல குளத்தின் நீர் வழிந்தோடியை நிர்மாணித்தல், எல்ல குளத்தின் அணைக்கட்டினை நிர்மாணித்தல், மல்வத்து ஓயாவின் நீர் வழிந்தோடியை நிர்மாணித்தல், பன்குளம் நீர்த் தேக்கத்தின் நீர் வழிந்தோடியினை நிர்மாணித்தல் ஆகிய 12 செயற்திட்டங்கள் 2023 மே 31 ஆந் திகதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன் அச்செயற்திட்டங்களுக்காக செலவிடப்பட்ட செலவுகளை இனங்காணக்கூடிய வகையில் கோவைகள் பேணப்பட்டிருக்கவில்லை. | | மேற்கொள்ளப்பட்ட கிரயம் மற்றும் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் தொடர்பாக விபரமான அறிக்கையினைத் தயாரித்து பொறுப்புக்கூற வேண்டிய அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். |
| (உ) | கிராமத்துடன் நட்புறவு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அனுராதபுரம் மாவட்டத்தில் கெபிதிகொல்லாவ பிரதேச செயலாளர் பிரிவில் பதவிய மற்றும் வாஹல்கட விவசாய தொழில்முயற்சிகளில் கால்வாய் முறைமையை மேம்படுத்துவதற்காக ரூபா 116 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டு அதில் ரூபா 31.2 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தும் செயற்திட்டத்திற்காக 2023 ஆம் ஆண்டில் நிதி எற்பாடு கிடைக்காமையின் அடிப்படையில் இடைநடுவில் நிறுத்தப்பட்டதன் காரணமாக மேற்கொள்ளப்பட்ட கிரயம் விளைவற்றதாக இருந்தது. அதன் போது விவசாய காணிக்காக நீர் வழங்கல்களை நிர்மாணிப்பதற்கு | கால்வாய் முறைமையில் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அது முறைமையின் நீண்டகாலம் நிலைத்திருப்பதற்கு உதவியாக இருக்கும். நிதி ஏற்பாடு கிடைக்காமையின் அப்படையில் நிர்மாணங்களை மேற்கொள்ள முடியாதிருந்தது. | செயற்திட்டத்தை ஆரம்பிக்கும் போது அதற்காக முறையான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் மேற்கொள்ளப்பட்ட கிரயத்திற்கு எதிர்பார்க்கப்பட்ட பிரதிபலன்கள் பொது மக்களுக்கு கிடைக்கும் வகையில் செயற்திட்ட வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். கொள்வனவு செய்த ஹியூம் குழாய்களை திட்டமிட்டவாறு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திட்டமிடப்பட்டு அதற்காக தேவையான 2,411 ஹியூம் குழாய்களை கொள்வனவு செய்து அவற்றில் 1,017 குழாய்கள் விவசாய அமைப்புக்ளுக்கு வழங்கப்பட்டிருந்தும் அதன் மூலம் எதிர்பார்த்த நீர் வழங்கல் நிர்ணயிக்கப்பட்டிருக்காதது டன் 1,395 குழாய்கள் பதவிய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்தில் விளைவற்றுக் காணப்பட்டது. | | |

**3.4 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் கீழ் அமுல்ப்டுத்தப்பட்ட 2012 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 131,239 தொகையான பஸ்னாகொட நீர்த்தேக்க செயற்திட்டம், கும்புக்கன் ஓயா நீர்த்தேக்க செயற்திட்டம், யான்ஓயா நீர்த்தேக்க செயற்திட்டம். மொராண நீர்த்தேக்க, ரேகம - கிதுல்கம நீர்த்தேக்கம் (முந்தெனிய ஆற்று வடிநில அபிவிருத்தி செயற்திட்டம்), வெல்லஸ்ஸ, நவோதய (மொனராகலை மாவட்டத்தின் துரித அபிவிருத்தி செயற்திட்டம்) உமா ஓயா தாழ்ந்த ஆற்று அபிவிருத்தி செயற்திட்டம் (அலிகொட ஆர கபடா நீர்த்தேக்கம் மற்றும் குடாஓயா கபடா நிர்த்தேக்கம்) மஹகல்கமுவ பாய்ச்சல் கால்வாய் நிர்மாணிக்கும் செயற்திட்டம் மற்றும் கொடிகமுவ செயற்திட்டத்தை அபிவிருத்தி செய்தலும் மேம்படுத்துலும் ஆகிய 09 அபிவிருத்தி செயற்திட்டங்களின் திட்டமிடப்பட்ட | நிதி ஏற்பாட்டினை வழங்குவதிலுள்ள சிக்கல் மற்றும் ஏனைய நடைமுறைக் காரணங்களினால் செயற்திட்டங்களை உரிய காலத்திற்குள் பூர்த்திசெய்ய முடியாதிரந்தது. | செயற்திட்டத்தை இன்று வரை பூர்த்தி செய்யாமை தொடர்பாக விரிவான பகுப்பாய்வினை மேற்கொண்டு அமைச்சரவைக்கு அறிக்கையிடுதல் வேண்டும். |

காலம் 02 ஆண்டுகளிலிருந்து 08 ஆண்டுகள் வரை தாமதமடைந்திருந்ததுடன் செயற்திட்டத்தின் காலத்தை நீடிப்பதற்காக பல சந்தர்ப்பங்களில் அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. தாமதத்தின் காரணமாக இச்செயற்திட்டத்தின் மூலம் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட நலன்களை திட்டமிட்டவாறு பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்ததுடன் இன்றுவரை பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) உமா ஓயா தாழ்நில ஆற்று அபிவிருத்தி செயற்திட்டம் (அலிகொடஆர சேர்த்து வைத்தல் நீர்த்தேக்கம் மற்றும் குடாஓயா சேர்த்துவைத்தல் நீர்த்தேக்கம்)**

(i) உமா ஓயா ஆற்றுபடுக்கையிலிருந்து தெற்கு வலயத்திலுள்ள கிரிந்திஓயா ஆற்றுப்படுக்கைக்கு 145 மில்லியன் கன மீற்றர் நீரினை வருடாந்தம் நிரப்புவதனை பிரதான குறிக்கோளாகக் கொண்டு நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சிற்கும் ஈரான் பராப் கம்பனிக்குமிடையே அமெரிக்க டொலர் 529.06 மில்லியன் தொகையான அதாவது ரூபா மில்லியன் தொகையான பொறியியல், பெறுகை மற்றும் நிர்மாண (EPC) ஒப்பந்த உடன்படிக்கையானது 2008 ஏப்ரல் 28 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்ய வேண்டிக் காணப்பட்ட செயற்திட்ட காலமானது 2023 யூன் 30 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 ஆந் எதிர்பார்த்தவாறு பூர்த்திசெய்ய முடியாதிருந்த போதிலும் குறிப்பிடத்தக்க அளவான செயல்முன்னேற்றம் அடைந்துகொள்ளப்பட்டுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில நாட்டில் காணப்பட்ட சூழ்நிலையின் காரணமாக முன்னேற்றம் தடைப்பட்டிருந்தது.

ஒவ்வொரு கட்டத்தின் முடிவிலும் எதிர்பார்த்த பொருளாதார நலன்களை அடைந்துகொள்ளக் கூடிய வகையில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அதற்கிணங்க செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும். நீண்டகால தாமதத்தின் மூலம் எதிர்பார்த்த பொருளாதார நலன்கள் இழக்கப்படும் சந்தர்ப்பக் கிரயத்தினைக் கணித்து வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் வெளிப்படுத்துதல் வேண்டும்.

திகதியில் உள்ளவாறு பிரதான வேலைகளில் 97.39 சதவீதம் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. இதன் கீழ் நீர்மின் நிலையத்தினை பூர்த்திசெய்தல் இறுதிக்கட்டத்தில் காணப்பட்டதுடன் 2023 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. நீர்மின் உற்பத்தியின் பின்னர் வழங்கப்படுகின்ற நீரினை கிரிந்தி ஓயா ஆற்றுப்படுக்கையில் கமத்தொழிலில் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதற்குத் திட்டங்களை தயாரித்து அமுல்ப்டுத்தும் பொறுப்பு நிர்பாசனத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தும் செயற்திட்டத்தினை பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட காலத்தினைப் போல இரு மடங்கு அதாவது 14 ஆண்டுகள் கடந்திருந்தும் உத்தேச நிர்மாணங்களில் 50 சதவீதமேனும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (ii) | உமாஓயா தாழ்ந்த் பள்ளத்தாக்கு அபிவிருத்தி நடவடிக்கைகளை ரூபா 9,352.5 மில்லியன் மொத்த கிரய மதிப்பீட்டின் கீழ் அமுல்ப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் உரிய திப்பீடு ரூபா 17,914 மில்லியனாக திருத்தம் செய்வதற்கு 2021 ஆகஸ்ட் 30 ஆந் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. அந்த அங்கீகாரத்தினை வழங்கும் போது நிதி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட அவதானிப்புக்கள் | நிர்ப்பாசன மதிப்பீடானது பெரும்பாலும் பாரிய பிரதேசங்கள் முழுவதும் பரந்துள்ள பல்வேறு புவிச்சரித்திரவியல் மாற்றங்களுடனான பிரதேசத்தில் இடம்பெறுகின்ற நிர்மாணங்களாகும். அதற்கிணங்க ஒரு கட்டிடம் அல்லது ஒரு பெருந்தெருவினை நிர்மாணித்தல் முதலிய நிர்மாணங்களைப் போல மிகவும் சரியான ஒரு மதிப்பீட்டினை தொடக்க சந்தர்ப்பத்தின் போதே தயாரித்தல் சிக்கலானதாகும். | நிதி அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சிபாரிசுகள் அமுல்ப்படுத்த வேண்டியதுடன் அதற்காக செயற்திட்டம் தொடர்பாக தாக்கமளிக்கும் அனைத்து வெளிக் காரணிகள் தொடர்பாகவும் போதியளவு கவனம் செலுத்தி தற்பொழுது அமுல்ப்படுத்தப்படுகின்ற செயற்திட்ட மதிப்பீட்டினை மீண்டும் மீளாய்வு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பாக முறையாக கவனம் செலுத்தி அதற்கிணங்க துரித நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டிருந்தது. அதாவது ‘‘நீர்ப்பாசன அமைச்சின் கீழ் அமுல்ப்படுத்துகின்ற பல பெரிய அளவிலான செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு குறுகிய காலத்தினுள் அவற்றின் விடயப் பரப்பில் எந்த மாற்றமும் இன்றி செயற்திட்ட கிரயானது நூறு மடங்கினால் அதிகரிக்கும் பாக்கினை காணக்கூடியதாக உள்ளது. மேலும் இச்செயற்திட்டங்களின் வெளிக்காரணிகள் விசேடமாக பணவீக்கம் மற்றும் நாணயமாற்று விகிதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பினை விட மதிப்பீட்டின் விகிதாசார அதகரிப்பு மிகவும் உயர்நத மட்டத்தில் காணப்படுகின்றமை இந்த நீர்ப்பாசன துறையிலுள்ள செயற்திட்டங்களில் காணக்கூடிய முன்னோடி நிகழ்ச்சியாகும். அதனால் மதிப்பீட்டு விகிதத்தினை மீண்டும் மீளாய்வு செய்தல் பொருத்தமானதாகும்’’ என்ற சிபாரிசு இதுவரை அமுல்ப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | | |
| (iii) | செயற்திட்டத்தின் மூலம் தற்பொழுது பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்ற 3500 ஏக்கர் காணிகளை உள்ளடக்கிய 15,000 ஏக்கர் காணிகளில் இரண்டு போகங்களிலும் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு நீரினை வழங்குதல் திட்டமிடப்பட்டு 14 ஆண்டுகள் கடந்திருந்தும் நீரினை வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்ட புதிய காணிகள் | தொடக்க திட்டங்கள் தொடர்பாக நீரினை வழங்கக்கூடிய மற்றும் பயிர்ச்செய்கை பண்ணக்கூடிய காணிகளை விபரமாக இனங்காணுதல் தற்பொழுத பூர்த்திசெய்யப்பட்டு நீர் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்களும் திட்டமிடப்பட்டு வருகின்றது. | நீரினை வழங்குவதற்கு உத்தேசித்துள்ள புதிய காணிகளை இனங்கண்டு செயற்திட்டத்தின் கீழ் இரண்டு போகங்களிலும் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட காணிகள் தொடர்பான ஒரு பதிவேட்டினை தயாரிப்பதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | இனங்காணப்படவோ அல்லது பதிவேடு தயாரிக்கப்படவோ இல்லை. | | எடுத்தல் வேண்டும். |
| (iv) | உமாஓயா ஆற்றுப் பள்ளதாக்கின் 145 மில்லியன் கன மீற்றர் நீரினை கிரிந்தி ஓயா ஆற்றுப்பள்ளத்தாக்கிற்கு திருப்பியதன் பின்னர் தென் மாகாணத்தின் கமத்தொழில் நடவடிக்கைகளுக்காக விடுவிப்பதற்கு சேமித்து வைக்கும் குறிக்கோளுடன் 22.5 மில்லியன் கன மீற்றர்களைக் கொண்ட புதிய குடா ஓயா நிர்த்தேக்கத்தினை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் உமா ஓயாவிலிருந்து குடா ஓயாவிற்கு நீரினை கொண்டுவரும் 30 கிலோ மீற்றர் நீளத்தைக் கொண்டதாகத் திட்டமிடப்பட்ட கால்வாயிற்கு மேலாக இருக்கும் வகையில் நீர்த்தேக்கத்தின் திட்டமானது முறையான அங்கீகாரமின்றி திருத்தப்பட்டிருந்தது. | நீர்த்தேக்கத்தினை தயார்படுத்தும் போது காணப்பட்ட தொழில்நுட்ப சிக்கலின் காரணமாக இமடம்பெற்றுள்ளது. | உமாஓயாவிலிலிருந்து வழங்கப்படுகின்ற நீரினை வைத்திருப்பதற்கு முடியாத வகையில் குடாஓயா நீர்த்தேக்கத்தின் திட்டம் முறையான அங்கீகாரமின்றி திருத்தம் செய்வது சம்பந்தமாக முறையான பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு அதற்கு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக தாபன விதிக் கோவையின் II ஆம் தொகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் கீழ் ஒழுக்காற்று நடைமுறைகள் பின்பற்றப்படுதல் வேண்டும். |
| (v) | இந்த நீர்த்தேக்கத்தினை நிர்மாணிப்பதற்குத் தேவையான 109,524 மீட்டர் கியூப் மணல் நீர்த்தேக்கத்திற்கு உட்படும் பிரதேசங்களிலிருந்து வழங்குவதனை குறிக்கோளாகக் கொண்டு தொடக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் மேலே குறிப்பிட்டவாறு நீர்த்தேக்கத்தின் திட்டத்தினை மாற்றியதன் பின்னர் இனங்காணப்பட்ட மணல் குவியல் நீர்த்தேக்கத்திற்கு வெளியேயுள்ள எல்லை என்பதாக மாறியிருந்தது. | திட்டங்களை அமுல்ப்படுத்தும் போது களத்தின் நிலைமைக்கு இணங்க தீர்மானம் எடுக்க வேண்டியிருந்தது. மணலை வழங்குவதற்கு பணம் செலவு செய்யப்பட்டதுடன் அது தூர அளவிற்கு இணங்க மாற்றமடைய வேண்டும். | செயற்திட்டத்தின் திட்டத்தினை மாற்றும் போது அதன் மூலமான தாக்கம் மதிப்பீட்டிற்கு உட்படாமையால் கனிய வளங்கள் துஸ்பிரயோகம் செய்வதற்கு வாய்ப்பளித்த உத்தியோகத்தர்கள் மற்றும் அதிக விலைக்கு மணலை கொள்வனவு செய்தமை சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்ரத்களுக்கு எதிராக |

| | | | |
|---|---|---|---|
| | அதன் போது குடாஓயா நீர்த்தேக்கத்தினை நிர்மாணிப்பதற்குத் தேவையான 01 கியூப் மணலுக்காக ரூபா 6,452 மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் ரூபா 10,100 ஆன பணத்திற்கு ஒரு வெளி வழங்குனரின் மூலம் மணலை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் உரிய வழங்குனரினால் நீர்த் தேக்க அணைக்கு 200 மீற்றருக்கு கீழே அமைந்துள்ள கட்டணம் செலுத்தப்படாது மணல் வழங்குவதற்கு திட்டமிடப்பட்ட இடத்திலிருந்து 21,286 கியூப் மணல் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 190 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | | ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (vi) | செயற்திட்டத்தின் ஒவ்வொரு செயற்பாட்டிற்காக மேற்கொள்ளப்படும் செலவு தொடர்பாக தனித்தனியாக கணக்கு வைக்கப்படாதிருந்ததுடன் வருடாந்த நிதிக்கூற்றுக்களும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. நீர்ப்பாசன திணைக்களத்தின் 2023 சனவரி மாத செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டு வரை நிர்ப்பாசன அமைச்சு செலவுத் தலைப்பின் கீழ் ரூபா 9,870.92 மில்லியன் மற்றும் 2022 ஆம் ஆண்டில் நீர்ப்பாசன திணைக்களத்தின் செலவுத் தலைப்பின் கீழ் ரூபா 2,006.67 மில்லியன் ஆக ரூபா 11,878 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் ஒவ்வொரு செயற்பாட்டின் கீழ் ஒவ்வொரு செயற்பாட்டிற்குமாக | தனித்தனியாக கணக்கு வைக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | செயற்திட்ட நடவடிக்கைகளுக்கான வருடாந்த பாதீடு பெறுகைத் திட்டம், செயல் நடவடிக்கைத் திட்டம் என்பன தயாரிக்கப்படுதல் வேண்டும். அதனை அடிப்படையாகக் கொண்டு ஒதுக்கீடு செய்து கணக்கு குறியீட்டினை அறிமுகம் செய்து கணக்கு வைத்தல் வேண்டும். இதற்கு மேலதிகமாக வருடாந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்ட கிரயத்தின் மொத்தம் ரூபா 6,567.22 மில்லியனாகும். அதற்கிணங்க செயற்திட்டத்திற்காக செலவு செய்யப்பட்ட கிரயத்தில் ரூபா 5,310 மில்லியன் செலவு செய்த செயற்பாடுகளை உறுதியாக இனங்காண்பதற்கு முடியாதிருந்தது. | | |
| (vii) | சொந்த ஊழியர்கள் மற்றும் உபகரணங்களைப் பயன்படுத்தி நிறைவேற்றப்படுகின்ற பெறுகை முறைமையின் (Force Account) கீழ் இச்செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு மதிப்பீட்டின் கீழ் பூர்த்தி செய்யப்பட்ட வேலைகள் தொடர்பாக சான்றுபடுத்துதல் மற்றும் வேலைகளின் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. பொறியியல், உதவியார்களின் நாளாந்த அளவீட்டு புத்தகத்தை அடிப்படையாகக் கொண்டு பொருட்கள், வேலையாட்கள் மற்றும் இயந்திரங்களுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | மதிப்பீட்டு பதிவேட்டினை பேணுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு மதிப்பீட்டின் கீழ் பூர்த்திசெய்யப்பட்ட வேலைகள் தொடர்பாக நில அளவீட்டு அறிக்கை மற்றும் விலைப்பட்டியல் தயாரிக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட சான்றுபடுத்தலுடன் வேலைகளின் இறுதி அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (viii) | இச்செயற்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 11877 மில்லியன் அல்லது 120 சதவீதம் செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் வலதுகரை கால்வாயின் கீழ் பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளில் 50 சதவீத்திற்கு மேற்பட்ட அளவானவை பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. | குளங்கள் மற்றும் உரிய நடவடிக்கைகளுக்காக அதிக பணம் செலவு செய்யப்பட்டதுடன் ஒவ்வொரு விடயம் சம்பந்தமாக தனித்தனியாக அல்லாது ஒட்டுமொத்தத்தினையும் கருத்தில் கொள்ளுதல் வேண்டும். | செயற்திட்டத்தின் தொடக்கத்தில் இனங்காணப்பட்ட பிரதான குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில் முன்னுரிமையை இனங்கண்டு எதிர்பார்த்த பொருளாதார நலன்களை அடைந்துகொள்ளக் கூடிய வகையில் கட்டம் கட்டமாக திட்டங்களைத் |

| | | |
|---|---|---|
| | | தயாரித்து அதற்கிணங்க செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும். |

### 3.5 பணம் விடுவிக்கப்பட்டிருந்தும் செயல் முன்னேற்றம் அடைந்துகொள்ளப்படாத செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) பெரிய அளவிலான அபிவிருத்தி செயற்திட்டங்களை மீண்டும் தந்திரோபாயப்படுத்துதல் மற்றும் துரிதப்படுத்துதல் (RAMP) குழுவின் சிபாரிசின் பிரகாரம் மொனராகலை மாவட்டத்தில் துரித நீர்ப்பாசன அபிவிருத்தி செயற்திட்டத்தின் (வெல்லஸ்ஸ நவோதய) கீழ் தெடகமுவ, மொரகொல்ல, ஊராஉல, பைலேகம ஆகிய 04 குளங்களில் தற்பொழுது காணப்படுகின்ற செயற்பாடுகளை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளக்கூடிய வகையில் நிரந்தரமாக பூர்த்திசெய்து செயற்திட்டங்களை மீளாய்வாண்டிற்குள் முடிவுறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. | | |
| (i) அதன் போது மொரகொல்ல, ஊராஉல, பைலேகம ஆகிய குளங்கள் புனரமைப்புச் செய்ய வேண்டிய முறைமை தொடர்பான முன்னுரிமைகளைத் தீர்மானிக்காது பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை மற்றும் நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டதனால் அக்குளங்களின் மூலம் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக | நிதி ஏற்பாடு மட்டுப்படுத்தப்பட்டிருந்தல் எரிபொருள் தட்டுப்பாடு நிர்மாணப் பொருட்களின் விலைகள் அதிகரித்தல் இதற்கு காரணமாக இருந்தது. | இக்குளங்களை புனரமைப்புச் செய்வதற்காக இன்றுவரை மேற்கொள்ளப்பட்ட ரூபா 141 மில்லியன் அளவான கிரயத்தில் பொருளாதார நலன்களை அடைந்து கொள்ளக்கூடிய வகையில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களை முன்னுரிமை அடிப்படையில் நிர்மாணங்களுக்காக பயன்படுத்தி முன்னுரிமைகளை |

| | | | |
|---|---|---|---|
| | நீரினை வழங்குவதற்கு கணக்காய்வுத் திகதியான 2023 மே 31 ஆந் திகதி வரை முடியாதிருந்தது. மேலும் 2023 பாதீட்டின் மூலம் நிதியை ஒதுக்கீடு செய்தல் மட்டுப்படுத்தப்பட்டதனால் இக்குளங்களை புனரமைப்புச் செய்வதற்காக இன்றுவரை மேற்கொள்ளப்பட்ட ரூபா 140,963,871 செலவும் விளைவற்றிருந்தது. | | இனங்கண்டு குளங்களை புனரமைப்புச் செய்வதற்கும் குளங்களின் புனரமைப்பு நடவடிக்கைகளை பூர்த்திசெய்து மக்களுக்கு நலன்களை அடைந்து கொள்ளக்கூடிய நிலைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | மேற்கூறிய செயற்திட்டங்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 28.64 மில்லியன் (இலாப பகுதி இன்றி) மதிப்பீட்டுப் பெறுமதியுடன் ஒப்பீடு செய்த போது பெரகொல்ல குளத்தின் மற்றும் பைலேகம குளத்தின் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி செயல்முன்னேற்றம் முறையே 90 சதவீதம் மற்றும் 96 சதவீதமாக இருந்ததுடன் குளங்களை நிர்மாணிக்கும் பௌதீக செயல்முன்னேற்றம் முறையே 23 சதவீதம் மற்றும் 81 சதவீதம் ஆகும். | நிர்மாணப் பொருட்கள் மற்றும் வேலைகளின் விலைகள் அதிகரித்ததனை கருத்தில் கொள்ளாது நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் இது உருவாகியிருந்தது மதிப்பீட்டினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. . | மதிப்பீட்டினை அங்கீகரிக்கும் போது ஒவ்வொரு வேலை விடயங்களுக்காக அங்கீகரித்த எல்லையை மிகைத்து செலவு செய்வதற்கு முன்னர் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |
| (iii) | மொரகொல்ல குளத்தை புனரமைப்புச் செய்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட ரூபா 49.9 மில்லியன் மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்ட ரூபா 37.9 மில்லியனான சிவில் வேலைக் கிரயத்தில் ரூபா 30.3 மில்லியன் அல்லது 80 சதவீதம் செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் நிர்மாணங்களின் | நிர்மாணங்களை தொடர்ச்சியாக மேற்கொள்ளும் குறிக்கோளில் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன. | ஆண்டின் இறுதியில் மிகுதியான நிதி ஏற்பாட்டினை செலவு செய்யும் குறிக்கோளில் மூலப் பொருட்களை கொள்வனவு செய்யாதிருத்தல் வேண்டும். நேரடி வேலையாள் அடிப்படையில் நிர்மாண வேலைகளை அமுல்ப்படுத்தும் போது இடம்பெறும் இவ்வாறான முறைமையீனங்களை |

| | | | |
|---|---|---|---|
| | பௌதீக செயல்முன்னேற்றம் 37 சதவீதமாகும். அவ்வாறு போதியளவு பௌதீக செயல்முன்னேற்றம் அறிக்கையிடப்படாதிருந்த போதிலும் 2019, 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் இறுதியில் மிகுதியான நிதி ஏற்பாட்டினை செலவு செய்யும் நோக்கத்தில் முன்னைய ஆண்டுகளின் போது கொள்வனவு செய்த மூலப்பொருட்கள் பயன்படுத்தப்படாது மொத்தமாக மீண்டும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. குளங்களை புனரமைப்புச் செய்வது தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டினுள் குளங்களின் வடிந்தோடிகளை நிர்மாணிப்பதற்கு ரூபா 28.6 மில்லியன் அல்லது மொத்த மதிப்பீட்டில் 75 சதவீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக 2022 ஆம் ஆண்டில் ரூபா 9,872,170 தொகை செலவு செய்து 5,150 கிலோ கிறாம் இரும்பு கம்பிகள் கொள்வனவு செய்யப்பட்டு அதில் 1,884 கிலேகிராம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதற்கிணங்க கொள்வனவு செய்யப்பட்ட கம்பிகளின் அளவில் 63 சதவீதம் மிகுதியாக இருந்தது. | | தவிர்க்கும் வகையில் அதனுடன் சம்பந்தப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடுகளை வலுப்படுத்துவதற்காக சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் வழங்கப்படுதல் வேண்டும். சரியான தொழில்நுட்ப பொருள் விபரக் குறிப்புக்களுக்கு இணங்க திட்டங்களையும் மதிப்பீடுகளையும் தயாரித்து தொடர்ச்சியாக பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | மொரகொல்ல குளத்தை புனரமைப்புச் செய்ததன் பின்னர் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் | தொடக்க கட்டத்தின் கீழ் குளங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. | கட்டம் கட்டமாக அமுல்ப்படுத்தும் போது நிறைவேற்றப்படாத செயற்பாடுகளை செயல்நடவடிக்கைத் |

| | | | |
|---|---|---|---|
| | காணியின் அளவினை 50 ஏக்கர்களிலிருந்து 200 ஏக்கர்கள் வரை அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதற்குத் தேவையான வயல் நிலங்கள் இனங்காணப்பட்டிருக்காததுடன் பயிர்ச் செய்கைக்கு நீரினை கொண்டு வருவதற்குத் தேவையான கால்வாய்களைத் தயாரித்தல் அங்கீகரித்த மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | | திட்டம் மற்றும் முன்னுரிமை ஆவணத்தில் உள்ளடக்கி தொடர்ச்சியான அடிப்படையில் பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (v) | ஊராஉல குளத்தின் அணைக்கட்டினை நிர்மாணித்ததன் பின்னர் குளத்து அணைக்கட்டினை பாதுகாப்பதற்கு அலை தடுப்புக்களை அமைப்பதற்குத் தேவையான 6X9 அளவான 240.26 கியூப் கருங்கற்கள் ரூபா 3,499,500 தொகை செலவு செய்து 2021 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்து குளம் நிர்மாணிக்கும் நிலத்தில் குவித்துவைக்கப்பட்டிருந்ததுடன் அந்த ஆண்டிலேயே கொள்வனவு செய்த ரூபா 2,324,850 பெறுமதியான 12 mm அளவான 1,761 கம்பிகள் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் நிர்மாணிக்கும் நிலத்தில் குவித்துவைக்கப்பட்டிருந்தும் குளத்தின் அணைக்கட்டுகள் 2023 சனவரி வரையும் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி எற்பாட்டினை வழங்கும் சிக்கலின் காரணமாக நிர்மாண வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளன. | நேரடி வேலையாட்கள் அடிப்படையில் நிர்மாண வேலைகளை அமுல்படுத்தும் போது ஏற்படுகின்ற இவ்வாறான முறைமையீனங்களை தவிர்த்துக்கொள்ளும் வகையில் உள்ளகக்கட்டுப்பாட்டினை வலுப்படுத்துவதற்காக ஒவ்வொரு செயற்திட்டத்திற்குமாக பொருட்களை கொள்வனவு செய்தல் மற்றும் பயன்படுத்துதல் தொடர்பான வரையறைகளை உள்ளடக்கி சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் வழங்கப்படுதல் வேண்டும். மேற்கொள்ளப்பட்ட கிரயத்திற்கு உச்ச அளவில் பொருளாதார ரீதியான பிரதிபலன்கள் கிடைக்கும் வகையில் நிர்மாண நடவடிக்கைகளை துரிதமாக நிறைவேற்றுதல் வேண்டும். |

## 3.6 ஏனைய அவதானிப்புக்கள்

(அ) பஸ்னா கொட நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | கம்ஹா, அத்தனகல்ல, மினுவன்கொட ஆகிய இடங்களில் ஒருங்கிணைநத நீர் வழங்கல் செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் தலைவருக்கும் China Machinering Engineering Coparation கம்பனியின் தலைவருக்குமிடையே 2013 மே 15 ஆந் திகதி மேற்கொர்ப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் அமெரிக்க டொலர் 229.5 மில்லியன் பெறுமதியான மேற்கூறிய செயற்திட்டம் 2014-2017 காலப்பகுதியில் அமுல்ப்படுத்தி முடிவுறுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அச்செயற்திட்டத்தின் தொடக்க நீர் மூலமான பஸ்னாகொட நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதற்காக நீர்ப்பாசன திணைக்களத்துடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை 2016 மார்ச் 22 மற்றும் 2019 யூன் 12 ஆகிய திகதிகளின் போது இரண்டு புரிந்துணர்வு உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் அதற்காக அமைச்சரவை | இந்த ஒப்பந்தத்தின் பொறியியலாளராக நீர்ப்பாசனத் திணைக்களம் காட்டப்பட்டுள்ளது. ஒப்பந்த உடன்படிக்கையின் மூலம் ஒப்பந்தத்தின் அமுல்ப்படுத்மும் முகவராக நீர்ப்பாசன திணைக்களம் பெயரிடப்பட்டது. தேவையான நிதி ஏற்பாடு நீர் வழங்கல் சபையின் மூலம் பெற்றுக்கொள்வதற்காக மாத்திரம் புரிந்துணர்வு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த அனைத்து நடவடிக்கைகளும் அமைச்சரவை அங்கீகாரத்திற்கு உட்பட்டு அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. | திணைக்களத்திற்கு வழங்கப்படுகின்ற நிர்மாணங்களுக்காக புரிந்துணர்வு உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்னர் செயற்திட்டத்திற்காக அமைச்சரவை அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

அங்கிகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக் கவில்லை.

(ii) நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் பஸ்னாகொட நீர்த்தேக்கத்தினை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக சர்வதேச போட்டி கேள்வியை கோருவதன் மூலம் அமைசடரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு (CAPC) சிபாரிசின் பிரகாரம் மற்றும் அதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் ரூபா 2,347,406,831 விலைக்கு சீனாவின் சினோஹயிட்ரோ கம்பனி (Sinohydro Corporation Limited) தெரிவு செய்யப்பட்டு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. நீர்த்தேக்கத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்திற்காக நிர்பாசன அமைச்சு செயலாளரினால் மேற்கூறிய கம்பனியுடன் 2019 யூன் 13 ஆந் திகதி ரூபா 2,394,354,968 (ரூபா 46,948,137 தொகையான தேசத்தை கட்டியெழுப்புதல் வரியினை உள்ளடக்கி) பெறுமதியைக் கொண்ட பொறியியலாளர், பெறுகை மற்றும் நிர்மாணங்கள் (EPC) ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அமைச்சு செயலாளரினால் இந்த பெறுகை செயற்பாட்டிற்காக நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு (TEC) ஆகக் குறைந்த விலையை சமர்ப்பித்த ரூபா 2,093 மில்லியன் கேள்வியானது ஒப்பந்தக்காரினால் நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதற்காக நீர்ப்பாசன திணைக்களத்தின் விசேட அறிவினை கவனித்துப் பார்த்து நிர்மாண நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் ஒப்படைக்கப்பட்டது. பெறுகைத் தீர்மானத்தின் பிரகாரம் ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட்டதுடன் மேற்பார்வை நடவடிக்கைகளானது நீர்ப்பாசன திணைக்களத்தின் மூலம் நிறைவேற்றப்படும்.

பெறுகை வழிகாட்டிக் கோவையின் 7.9.2 ஆம் பிரிவின் பிரகாரம் கணிதரீதியான சரியான தன்மையை பரீட்சிக்க வேண்டியதுடன் அதன் போது இடம்பெற்றுள்ள தாமதத் தவறு சரிசெய்யப்பட்டுள்ளது. தொழில்நுட்ப மதிப்பீ:டக் குழுவினால் திருத்திய ஒப்பந்த பெறுமதியை சிபாரிசு செய்வதற்கு முன்னர் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.6.1 (V) ஆம் பிரிவின் பிரகாரம் கேள்விதாரரின் விளக்கமளித்தலினைப் பெற்றுக்கொள்ளுமாறு பெறுகை நிறுவனத்திற்கான அறிவித்தல் தவறவிடப்பட்டுள்ளது.

பெறுகை நடைமுறைகளானது மேலதிக கிரயம் மற்றும் காலம் ஏற்படாத வகையில் மேற்கொள்ளப்படுவதற்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். பொறுப்பின்றி செயற்பட்டுள்ள தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அங்கத்தர்கள் சம்பந்தமாக முறையான ஒழுக்காற்று பரீட்சிப்புக்களை நடாத்துவதற்கு உரிய நியமன அதிகாரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவானது பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளை கருத்தில் கொள்ளாது நடவடிக்கை எடுத்தல் மற்றும் கவனயீனத்தின் மூலம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டம் சம்பந்தமாக 2018 இன் 18 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1) ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் முகவர் நிறுவனத்திற்கு முறைப்பாடு செய்யப்படுதல் வேண்டும்.

சமர்ப்பித்த ரூபா 2,347 மில்லியனாக சரிசெய்யப்படுதல் வேண்டுமென கணித்து பெறுகை வழிகாட்டின் கோவையின் 2.6.1(v) ஆம் பிரிவிற்கு முரணாக ஒப்பந்தக்காரரினால் சமர்ப்பித்த விலையினை விட ரூபா 254,062,080 கூடுதல் பெறுமதிக்கு ஒப்பந்தத்தை ஒப்படைப்பதற்கு சிபாரிசு செய்யப்பட்டிருந்தது. அதன் போது ஒப்பந்தக்காரரினால் தொடக்க வேலைக்காக (Preliminarien) உரிய பணம் சுட்டிக்காட்டப்படவில்லை என காட்டப்பட்டிருந்தும் சமர்ப்பிக்கப்பட்ட விலை மனுக்களானது நிறுவுதல், நிர்மாணித்தல் மற்றும் ஏனைய சேவைகள் (Installation/ Construction and other Services) என்பதன் கீழ் மேற்கூறிய பணம் காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அது தொடர்பாக கருத்தில் கொள்ளாது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு ஒப்பந்தக்காரர் சமர்ப்பித்த பெறுமதிக்கு ரூபா 254,062,080 தொகையை மீண்டும் சேர்த்துக் கொண்டதன் மூலம் பிழையாக கணித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. பின்னர் ரூபா 254,062,080 அதிக பெறுமதிக்கு ஒப்பந்தத்தை வழங்குவதற்கு 2019 பெப்ரவரி 13 ஆந் திகதி சமர்ப்பித்த Ir/63/2019 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (iii) | நீர்ப்பாசன திணைக்களம் தேசிய நிர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையுடன் 2019 யூன் 12 ஆந் திகதி இரண்டாவது புரிந்துணர்வு உடன்படிக்கையை மேற்கொள்கையில் பிரதான ஒப்பந்தத்தின் உடன்படிக்கை காலம் முடிவடைந்திருந்தது. புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு இணங்க ஒப்பந்தமானது 18 மாத காலத்திற்குள் முடிவுறுத்தப்பட வேண்டியதுடன் கணக்காய்வுத் திகதியான 2023 மே 31 ஆந் திகதி வரை முடிவடைந்திருக்கவில்லை. அதன் போது உப ஒப்பந்தக்காரரான திணைக்களத்தின் தாமதத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த மேலதிக கிரயத்தின் காரணமாக பிரதான ஒப்பந்தக்காரரின் செயற்பாடுகளுக்கு இடம்பெறுகின்ற பாதகமான தாக்கம் சம்பந்தமாக திணைக்களம் நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச சபையுடன் 2019 யூன் 12 ஆந் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கை மேற்கொண்ட சந்தர்ப்பத்தில் பிரதான ஒப்பந்த உடன்படிக்கையின் காலம் முடிவடைந்திருந்துது. அதற்கிணங்க திணைக்களம் ஒப்பந்தத்தினை தாமத்தித்தல் பிரதான ஒப்பந்தக்காரருக்கு காலத்தை நீடிப்பதற்கு மற்றும் மேலதிக கிரயத்தினை வேண்டிக் கொள்ளும் தகமை ஏற்படுவதற்கும் அதன் பொறுப்பானது உப ஒப்பந்தக்காரராக முன்வந்துள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு காலநீடிப்பு செய்வதற்கான | புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு முன்னர் இடம்பெற்றுள்ள தாமதத்திற்காக திணைக்களத்திற்கு பலவந்தப்படுத்தும் இயலுமை இலல்லாததுடன் நீர்ப்பாசனத் திணைக்களம் ஒரு உப ஒப்பந்தக்காரர் அல்ல | இந்த ஒப்பந்தத்தை பொறுப்பேற்கும் போது பெறுகை நடைமுறை ஒப்பந்த நிருவாகம், கொடுப்பனவு நடைமுறை ஆகிய செயற்பாடுகளின் போது மேலதிக காலம் மேலதிக நிருவாகச் செலவு மற்றும் ஒழுங்கீனங்கள் இடம்பெற்றுள்ளதா என்பதனை விசாரணை சபையை நியமித்து உறுதிப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இயலுமை காணப்பட்டது. | | |
| (iv) | திணைக்களத்துடனான ஒப்பந்த உடன்படிக்கையின் 14.4 ஆம் உப பிரிவின் பிரகாரம் ஒப்பந்தத்திற்கான முதலாவது உப கொடுப்பனவிற்காக பௌதீக செயலாற்றல் 25 சதவீத்தினை பூர்த்தி செய்ய வேண்டிய போதிலும் அது தொடர்பாக கவனத்தில் கொள்ளாது பௌதீக செயலாற்றல் 1.52 சதவீதம் பூரணப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து உப கொடுப்பனவு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2022 ஒக்தோபர் 31 ஆந் திகதியளவில் செயற்திட்டத்தின் பௌதீக செயலாற்றல் 17.09 சதவீதமாக இருந்ததுடன் 2020 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரையான காலப்குதியில் 11 உப கொடுப்பனவுகளின் மூலம் ரூபா 401,165,861 தொகை ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | ஒப்பந்த நிருவாகம் சம்பந்தமான உள்ளகக் கட்டுப்பாட்டினை வலுப்படுத்த வேண்டியதுடன் ஒப்பந்த உடன்படிக்கையின் மூலம் இணங்கிக்கொண்ட கொடுப்பனவு நடைமுறையினை மீறி கொடுப்பனவு செய்த உத்தியோகத்தர்களுக் கு எதிராக ஒழுக்காற்று நடைமுறை பின்பற்றுதல் வேண்டும். |
| (v) | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்ட முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காக நிரந்தர கட்டிடத்தினை நிர்மாணிப்பதறகு ரூபா 32,641,534 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் முறையான அதிகாரமின்றி அந்த திட்டத்தினை திருத்தம் செய்து உரிய பணத்தை அலுவலக உபயோகங்கள் மற்றும் அலுவலகத்திற்கான வீட்டினை வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. | உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தக்காரருக்கு வேலையை பொறுப்பேற்பதற்கு முடியாமை மற்றும் நிர்மாண காலம் பதினெட்டு மாதங்கள் என்பதனால் கட்டிடத்தை நிர்மாணித:து பயன்படுத்துவதற்கு போதிய காலம் இல்லாததனால் கட்டிடம் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிரு ந்தது. | ஒப்பந்த நிருவாகம் சம்பந்தமான உள்ளகக் கட்டுப்பாட்டினை வலுப்படுத்த வேண்டியதுடன் ஒப்பந்த உடன்படிக்கையின் மூலம் இணங்கி கொண்ட கொடுப்பனவு நடைமுறைகளுக்குப் புறம்பாக கொடுப்பனவு செய்த உத்தியோகத்தர்களுக் கு எதிராக ஒழுக்காற்று நடைமுறைகள் பின்பற்றப்படுதல் வேண்டும். |
| (vi) | ஒப்பந்த உடன்படிக்கையின் மூலம் | முடிவுறுத்தப்பட்ட வேலைகளுக்கு | ஒப்பந்த நிருவாகத்திற்காக |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்ட முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒட்டுமொத்த நிதி எற்பாடு ரூபா 114,823,880 தொகை மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் (MOU) செயற்திட்டத்தின் முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 119,817,787 ஆக ஒட்டுமொத்தமாக ரூபா 234,641,667 தொகை அதாவது செய்த வேலைகளின் பெறுமதியான ரூபா 401,165,861 தொகையில் 58 சதவீதம் செயற்திட்ட முகாமைத்துவத்திற்காக செலவு செய்யப்பட்டிருந்தது. | சரிசமமான விகிதாசார படியாக முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு செலவு செய்யப்பட்டது. | ஒதுக்கீடு செய்யப்பட்ட செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு கிரயம் பொருளாதார ரீதியாக மிகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமானதாகவும் பயன்படுத்தப்படுதல் வேண்டும். |
| (ஆ) | வேலையாளர்கள் பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்கள் பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலக மட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அநத ஊழியர்களுடன் 03 மாத காலத்திற்கு செல்லுபடியாகும் வகையில் உடன்படிக்கை கைசாத்திடப்பட்டிருந்தது. அது தொடர்பாக கொடுப்பனவு செய்யும் போது ஊழியர்களுக்கு வருகை தந்த திகதி, நேரம், கையொப்பம் என்பவைகளை உள்ளடக்கிய வருகைப் பதிவேடு பேணப்படாதிருந்தமை, உரிய திகதிகளில் சேவைக்கு சமூகமளித்தமையினை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் வவுச்சர்களுடன் இணைக்கப்படாமை, பொறியியல் உதவியாளர்களின் அளவீட்டு புத்தகத்தில் காட்டப்படுகின்ற அளவீடுகளின் அடிப்படையில் கொடுப்பனவுகள் அங்கீகரிக்கப்பட்டதன் காரணமாக நாளாந்த சம்பளத்தை செலுத்தும் போது சேவையாற்றிய நாட்களின் எண்ணிக்கை தொடர்பாக உறுதிப்படுத்தலின்றி கொடுப்பனவு செய்யப்பட்டமை, கொடுப்பனவு ஆவணங்களில் கையொப்பமிடப்பட்டிருந்த | தொழிலாளர்களை நிர்ணயிக்கப்பட்ட செயற்பாடுகளுக்காக ஆட்சேர்க்கும் போது நிர்ணயிக்கப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஆட்சேர்க்கப்பட்டுள்ளன. மேலும் உரிய நிர்மாணச் செயற்பாடுகளுக்கு எடுக்கின்ற காலத்திற்கு இணங்க 03 மாதங்களை மிகைக்காதவாறு உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் 03 மாதங்களின் பின்னர் உடன்படிக்கை காலத்தை நீடித்தல் மேற்கொள்ளப்படவில்லை. உரிய தொழிலாளர்களின் சேவையை பெற்றுக்கொள்ளும் போது நிர்ணயிக்கப்பட்ட வேலைத்தளத்திற்கு அவர்கள் சமூகமளித்தலினை உறுதிப்படுத்துவதற்காக அந்த வேலைத் | பிராந்திய அலுவலகங்களின் மூலம் வெளித் தொழில்ாளர்களை சேவையில் ஈடுபடுத்:தும் போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகளானது வருகைப் பதிவேடு உள்ளடங்களாக பேணப்பட வேண்டிய அறிக்கைகள் தொடர்பாக ஒரு பொதுப்படிவத்தினை அறிமுகப்படுத்தி அது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் அதன் போது அடையாளத்தினை உறுதிப்படுத்தியிருக்காமை ஆகிய சிக்கல்கள் உருவாகியுள்ளது. | தளத்திற்குப் பொறுப்பான பொறியியல் உதவியாளர் அல்லது தொழில்நுட்ப உதவியாளரின் பொறுப்பில் திகதி, நேரம் மற்றும் கையொப்பத்துனான வருகைப் பதிவேடு பேணப்பட்டுள்ளது. பொறியியல் உதவியாளரின் அளவீட்டுப் புத்தகத்தில் காட்டப்படுகின்ற அளவீட்டினை அடிப்படையாகக் கொண்டு பிரிவிற்குப் பொறுப்பான உதவியாளர் மற்றும் திட்ட நிபுணர்களின் உரிய பரீட்சிப்புக்களின் பின்னர் கொடுப்பனவு அங்கீகரிக்கப்பட்டது. அதற்காக நாளாந்த வருகைப் பதிவேடுகளிலும் அவர்களின் வருகைகளின் நாட்களின் எண்ணிக்கை பதியப்பட்டுள்ளது. கொடுப்பனவு வவுச்சரில் கோவைகள் தொடர்புபடுத்தப்பட்டதாக அளவீட்டுப் புத்தகத்தின் இலக்கம் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் கொடுப்பனவுகளை சான்றுபடுத்தும் போது அளவீட்டுப் புத்தகத்தின் பதிவுகள் உரிய தொழிலாளர் உடன்படிக்கை மதிப்பீடு என்பவற்றினைப் போல நாளாந்த குறிப்பு பத்திரமும் பரீட்சிக்கப்படுகின்றன. | |
| (இ) | நானாவித செயற்திட்டங்களின் கீழ் குளங்கள்/ நீர்த்தேக்கங்களை நிர்மாணித்தல் மற்றும் புனரமைப்புச் செய்வதற்காக வேலைத் தளத்திற்கு நேரடியாகக் கிடைக்கின்ற பொருட்கள் சரியாக கிடைத்துள்ளது என்பது உறுதிப்படுத்தப்படாது பொருள் பெறுவனவு சிட்டை | எதிர்காலத்தில் வலய நீர்ப்பாசன பணிப்பாளருக்கு தெரியப்படுத்தி அறிவுறுத்தல் கொடுப்பனவினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | வேலைத் தளத்திற்கு நேரடியாக கிடைக்கும் பொருட்கள் சம்பந்தமாக நிதிப் பிரமாணங்களிலுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் பொறுவனவு மற்றும் வழங்கல் கட்டளைகளை வழங்குவதற்கு |

| | | |
|---|---|---|
| வழங்கப்பட்டிருந்தது. | | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.7 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 2/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரசாங்க நிதி திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வழிகாட்டிக் கோவையின் 14 ஆம் இலக்கத்தில் குறிப்பிட்ட படிவத்தின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கையானது தயாரிக்கப்பட வேண்டியிருந்தது. அது நம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் கீழுள்ள 14 வலய நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகங்கள், 52 பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகங்கள், 12 இயந்திர அலுவலகங்களை உள்ளடக்கிய பிராந்திய அலுவலகங்களில் செயற்திட்டங்கள் மற்றும் அமைவிடங்கள் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை. | எதிர்கால அறிக்கைகளுக்காக அத்தகவல்களை உள்ளடக்குவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது என நீர்ப்பாசன பணிப்பாளர் (நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவம்) தெரிவித்துள்ளார் | திணைக்களத்தின் கீழ் உள்ள நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம், பிராந்திய நீர்ப்பாசன பொறியிலாளர் அலுவலகம், இயந்திர பொறியியலாளர் அலுவலகம் என்பன செயற்திட்டம் மற்றும் அமைவிடம் தொடர்பான தகவல்களை ஆண்டறிக்கையில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | எதிர்கால இலக்குகளைக் காட்டும் போது சில விடயங்களின் கீழ் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட கடமைகள் மற்றும் அவற்றினை அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதிகள் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்கால இலக்குகளைக் காட்டும் போது 15000 ஏக்கர் காணிகளுக்காக நீர்ப்பாசன வசதிகளை வழங்குதல் மற்றும் பயிர்களை பல்வகைப்படுத்துவதன் மூலம் பயிர்களின் கூர்மையை 2.0 இற்கு அண்மித்த மட்டத்திற்கு கொண்டுவருதல் ஆகிய கடமைகள் 2030 ஆம் ஆண்டின் போது அடைந்துகொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன் | செயலாற்றல் அறிக்கையில் எதிர்கால இலக்குகளைக் காட்டும் போது நிறைவேற்றவதற்கு எதிர்பார்க்கின்ற கடமைகள் மற்றும் அவற்றினை அடைந்துகொள்வதற்கு எதிர்பார்க்கின்ற கால அட்டவணையை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சில இலக்குகள் நீண்ட காலமானவை என்பதனால் அதற்கான கால அட்டவணை உறுதியாக சமர்பபிக்கப்படவில்லை. | |
| (இ) | 2 ஆவது அத்தியாயத்தில் வெளிநாட்டு கடன் உதவியின் கீழ் நீர்ப்பாசன திணைக்கத்தினால் அமுல்படுத்தப்பட்ட பெரிய அளவிலான மற்றும் மத்திய அளவிலான 19 நீர்ப்பாசன செயற்திட்டங்கள் மற்றும் 07 ஏனைய செயற்திட்டங்களின் தகவல்களைக் காட்டும போது அதில் சில செயற்திட்டங்களின் செயல்முன்னேற்றம் காட்டப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்த்தவாறு பூர்த்திசெய்வதற்கு முடியாமைக்கான காரணம் மற்றும் சவால்கள் தொடர்பாக அவற்றினைப் பூர்த்திசெய்யும் எதிர்கால இலக்குகள் தொடர்பாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | நீர்ப்பாசன திணைக்களத்தினால் அமுல்ப்படுத்தப்பட்ட பெரிய அளவான மற்றும் மத்திய அளவான 19 நீர்ப்பாசன செயற்திட்டங்கள் மற்றும் ஏனைய 07 செயற்திட்டங்களின் தகவல்கள் வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அச்செயற்திட்டங்களின் செயல்முன்னேற்றத்தை எதிர்பார்த்தவாறு பூர்த்திசெய்வதற்கு முடியாமைக்கான காரணம் மற்றும் சவால்கள் தொடர்பான தகவல்களை வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க எதிர்கால அறிக்கைக்காக அதனை உள்ளடக்குவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | திணைக்களத்தினால் அமுல்ப்படுத்தப்பட்ட பெரிய அளவிலான மற்றும் மத்திய அளவிலான நீர்ப்பாசன செயற்திட்டங்களை எதிர்பார்த்தவாறு பூர்த்திசெய்வதற்கு முடியாமைக்கான காரணம் மற்றும் சவால்கள் தொடர்பாகவும் வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | திணைக்களத்திற்கு அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ள அனைத்து செயற்பாடுகளின் கீழ் கட்டுப்படுத்தப்படுகின்ற இயற்கையான மற்றும் பௌதீக வளங்கள் மற்றும் பிரதான கடமைகளை உள்ளடக்கிய தகவல்களானது வெற்றிகொள்ளல், செயல்முன்னேற்றம், சவால்கள் என்பவற்றின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை . | எதிர்கால அறிக்கைகளில் அந்த தகவல்களை உள்ளடக்குவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | உரிய விடயங்களை வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் இரண்டாவது அத்தியாயத்தில் வெற்றியளித்தல், செயல்முன்னேற்றம் , சவால்கள் என்பதன் கீழ் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.8 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| காலநிலையின் பாதகமான தாக்கத்தை குறைக்கும் செயற்திட்டத்தின் (CRIP) நிதி ஏற்பாட்டின் கீழ் 06 சாத்தியவள ஆய்வுகளை மேற்கொள்வதற்காக 2021 ஆம் ஆண்டு வரை ரூபா 430 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் அதன் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தின் எதிர்கால அபிவிருத்தி செயற்திட்டங்களை திட்டமிட்டு அபபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | CRIP ஆனது நீர்ப்பாசன அமைச்சின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்ற பல கட்டங்களைக் கொண்ட ஒரு செயற்திட்டமாகும். இதன் முதலாவத கட்டத்தின் போது தெரிவுசெய்யப்பட்ட 10 ஆற்றுப்பள்ளத்தாக்குகளை ஆய்வு செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் எதிர்காலத்தில் இனங்காணப்பட்ட நீர் முகாமைத்துவத்திற்குரிய சிக்கல்களைத் தீர்த்து வைப்பதற்காக பல்வேறு பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டன. இந்த தெரிவு செய்யப்பட்ட பிரேணைகளுக்கு மத்தியில் ஒரு பகுதியான சாத்தியவள ஆய்வானது அச்செயற்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிர்ப்பாசன அமைச்சு இச்செயற்திட்டத்தின் எதிர்கால வேலைகளுக்குத் தேவையான வளங்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் வழங்குமாயின் அதற்கிணங்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படலாம். | திணைக்களத்தினால் எதிர்காலத்தில் ஆற்றுப் பள்ளத்தாக்குகளை அபிவிருத்தி செய்வதற்காக பிரேரணைகளைச் சமர்ப்பித்தல், திட்டங்களைத் தயாரித்தல் ஆகிய தொடக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது இந்த ஆய்வு அறிக்கையை பயன்படுத்துதல் வேண்டும். அதற்காக உரிய பிரிவுகளுக்கு அனுப்பிவைக்க வேண்டியுள்ளதுடன் திணைக்களத்தின் நீண்டகால மற்றும் குறுங்கால திட்டங்களுக்கும் அப்பிரேரணைகள் உள்ளடக்கப்படுதல் வேண்டும். |

### 3.9 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 2021 ஆம் அண்டின் போது 14 வலய நீர்ப்பாசன அலுவலகங்களின் கீழ் 52 பிராந்திய நிர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகங்களின் மூலம் அமுல்ப்படுத்தப்பட்ட நிர்மாண வேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள் சம்பந்தமாக கணக்காய்விற்கு கோரப்பட்ட தகவல்களுக்காக 10 வலய அலுவலகங்களின் 31 பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகங்கள் மாத்திரம் தகவல்களைச் சமர்ப்பித்திருந்தன. அத்தகவல்களுக்க இணங்க 31 பிராநத்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகங்களின் மூலம் ரூபா 6,304 மில்லியன் பெறுமதியான 1,050 நிர்மாண வேலைகளுக்கு மத்தியில் ரூபா 5,594 மில்லியன் பெறுமதியைக் கொண்ட 776 நிர்மாண வேலைகள் அதாவது 74 சதவீதமானவை பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.7 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் சொந்த ஊழியர்கள் மற்றும் உபகரணங்களை பயன்படுத்தி நிறைவேற்றப்பட்ட பெறுகை நடைமுறை (Force Account) அமுல்ப்படுத்தப்பட்டது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் (NPA Procurement manual) 4.3.1 மற்றும் 4.3.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் பின்வரும் செயற்பாடுகளுக்கு மதிப்பீடு செய்யப்பட்ட பணத்தில் சதவீதங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டன.<br><br>Preliminary design and detail design costs 3.5<br>Supervision costs 1.5<br>Administration costs 1.0<br>......<br>6.0<br>.......<br><br>அதற்கிணங்க 03/2020 ஆம் இலக்க ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் பொறியியல் ரீதியான நிருவாக செலவுகளாக (Engineering Administration) மதிப்பீடு செய்யப்பட்ட பணத்தில் (Civil Cost) 6 சதவீத்தினை ஒதுக்கீடு செய்வதற்கு நிதி எற்பாடு வழங்கப்பட்டது. அந்த 6 | |

| | | | |
|---|---|---|---|
| | | சதவீதமானது மேற்பார்வை மற்றும் நிருவாக செலவுகளுக்கு மாத்திரமல்லாது தொடக்க வடிவமைப்புக்கள் பொருள் விபரக் குறிப்புக்கள், விலைப்பத்திரங்கள் (Preliminary design and detail design costs) முதலியவற்றிற்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. | |
| (i) | இப்பெறுகை முறைமையின் (force Account) கீழ் குளங்கள்/ நிர்த்தேக்கங்களை நிர்மாணித்தல் மற்றும் புனரமைப்பச் செய்வதற்காக தேவையான வேலையாட்களை நீர்பாசன திணைக்களத்திற்கு இணைத்துக்கொள்ளப்பட்ட வேலையாட்கள் மூலம் வழங்க முடியாத சந்தர்ப்பங்களில் மாத்திரம் வெளியிலிருந்து வழங்கப்பட வேண்டிய போதிலும் அனைத்து பயிற்சிபெற்ற மற்றும் பயிற்சி பெறாத வேலையாட்கள் தேவைப்பாடானது வேலையாட்கள் வழங்குனர்களிடமிருந்து அல்லது விவசாய அமைப்புக்களின் மூலம் அல்லது தனிநபர் வேலையாள் உடன்படிக்கையின் கீழ் வழங்கப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | நேரடி வேலையாள் அடிப்படையில் நிர்மாண வேலைகளை அமுல்ப்படுத்தும் போது இடம்பெறுகின்ற முறைமையீனங்களை தவிர்க்கும் வகையில் வேலையாட்களை வழங்கும் போதும் சேவையில் ஈடுபடுத்தும் போதும் கொடுப்பனவு செய்யும் போதும் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் மற்றும் பயன்படுத்தப்பட வேண்டிய ஆவணங்களக்குரிய படிவங்களை அறிமுகப்படுத்தி உள்ளகக் கட்டுப்பாட்டினை வலுப்படுத்துவதற்காக சுற்றறிக்கைகளின் மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்படுதல் வேண்டும். |
| (ii) | இதன் கீழ் குளங்கள்/ நீர்த்தேக்கங்களை நிர்மாணித்தல் மற்றும் புனரமைப்புச் செய்வதற்காக திணைக்களத்தில காணப்படுகின்ற இயந்திரங்களின் மூலம் | திணைக்களத்திற்குச் சொந்தமான இலங்கையின் பல்வேறு இடங்களில் காணப்படும் இயந்திரங்கள் செயற்படும் நிலையில் இருந்தும் 2022 ஆம் ஆண்டில் காணப்பட்ட | திணைக்களத்திடம் இயந்திரங்கள் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களின் போது வெளியிலிருந்து வாடகை அடிப்படையில் இயந்திரங்கள் வழங்கப்படாதிருத்தல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உரிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியாதிருக்கையில் மாத்திரம் தேவையான இயந்திரங்களை வெளியிலிருந்து வழங்க வேண்டிதாக இருந்த போதிலும் திணைக்களத்தில் காணப்பட்ட 350 எண்ணிக்கையான இயந்திரங்களின் தொகுதியில் செயற்படும் நிலையில் காணப்பட்ட இயந்திரங்கள் விளைவற்றுக் காணப்பட்டிருந்தும் வெளி வழங்குனர்களிடமிருந்து வாடகை அடிப்படையில் இயந்திரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந் தன. | எரிபொருள் பிரச்சினையில் எரிபொருளினைப் பெற்றுக்கொள்வது அதிக சிக்கலாகக் காணப்பட்டது. எனவே ஹிம்பிலியாகட நீர்ப் பாசன உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செயற்திட்டத்திற்கான அத்திவசிய நடவடிக்கைகளின் போது வெளி வழங்குனர்களிடமிருந்து இயந்திரங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டி ஏற்பட்டது என பிரதான வதிவிட பொறியியலாளரினால் தெரிவிக்கப்பட்டது. | வேண்டும். அதன் போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகளை நிர்ணயித்து சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்படுதல் வேண்டும். |
| | (iii) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் பெறுகைத் திட்டத்தினுள் பெறுகை முறைமை நிர்ணயிக்கப்பட்டிருக்க வேண்டியதுடன் பெறுகை வழிகாட்டியின் 4.2.3 (இ) பிரிவின் பிரகாரம் பெறுகை கால அட்டவணையானது பெறுகைக் குழுவினால் அங்கீகரிகப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் 31 பிராந்திய நிர்ப்பாசன பொறியலாளர் அலுவலகங்களின் மூலம் 2022 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட ரூபா 6,304 மில்லியன் தொகையான 1,050 நிர்மாணங்கள் மற்றும் பராமரிப்பு வேலைகளின் பெறுகை நடைமுறைகளானது பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளரினால் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளுககுக இணங்க பெறுகை முறைமையை நிர்ணயித்து திட்டத்திற்குள் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.3.2 ஆம் | | பதில் வழங்கப்படவில்லை. | மதிப்பீட்டினை அங்கீகரிப்பதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | பிரிவிற்கு இணங்கிய வகையில் மதிப்பீட்டினைத் தயாரிக்காமையினால் 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 7,820 மில்லியன் பெறுமதியைக் கொண்ட 1,493 நிர்மாணங்கள் மற்றும் பராமரிப்பு வேலைகளின் மேற்பார்வை மற்றும் நிருவாகக் கிரயத்தின் மிகை மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 92.2 மில்லியனாகும். | | முன்னர் பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். |

## 3.10 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | டேமாட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் தரவு முறைமைக்கு இணங்க நீர்ப்பாசன திணைக்களத்தின் பெயரில் அல்லது திணைக்களத்தின் விலாசத்தின் கீழ் 2004 வாகனங்கள் பதிசெய்யப்பட்டிருந்தும் திணைக்கள வாகன பதிவேட்டின் பிரகாரம் திணைக்களத்திற்குச் சொந்தமான மற்றும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற வாகனங்களின் எண்ணிக்கை 1,124 ஆகும். அதற்கிணங்க 880 வாகனங்கள் திணைக்களத்தின் பொறுப்பில் காணப்படவில்லை. | திணைக்களத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள 2004 வாகனங்களில் 1,124 வாகனங்கள் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அந்த வாகனங்கள் தொடர்பான தகவல்கள் பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்திற்குச் சமர்ப்பித்து அந்த அலுவலகங்களின் வருடாந்த களஞ்சிய மீளாய்வு அறிக்கையினைப் பரீட்சித்து உறுதிப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மிகுதியான வாகனங்களில் அதிக அளவானவை திணைக்களத்தில் இல்லாததுடன் அவற்றினை உறுதிப்படுத்துவதற்கும் திணைக்களத்தில் போதியளவு ஆவணங்கள் | மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் தரவு முறைமையின் பிரகாரம் நீர்ப்பாசன திணைக்களம்/ நிர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் பதிவு செய்துள்ள போதிலும் திணைக்களத்தின் பொறுப்பில் காணப்படாத 880 வாகனங்கள் தொடர்பாக ஆராய்ந்து பார்த்து வாகன பதிவேட்டினை சரிசெய்தல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். வாகனங்கள் சம்பந்தமாக ஏதாவது ஒழுங்கீனம் ஏற்பட்டுள்ளதா என்பதனை பரீட்சித்தல் வேண்டும். |

இல்லாததனால் அந்த வாகனங்கள் காணப்படுகின்ற இடங்கள் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

- கைதவிர்பு நடைமுறைகளினூாடாக கேள்வி மூலம் கைதவிர்ப்பிற்கு அனுப்பிவைத்து வெளிநபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள போதிலும் பதிவுசெய்தல் ஒப்படைக்கப்படாத வாகனங்கள்

- கைதவிர்ப்பு நடைமுறையினூடாக கேள்வி மூலம் உடைந்த வாகனங்களாக பதிவினை இரத்துச் செய்வதற்கு அனுப்பி இரும்பாக வழங்கப்பட்டுள்ள வாகனங்கள்

- வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு பல்வேறு செயற்திட்டங்களின் மூலம் வழங்கப்பட்டுள்ள போதிலும் செயற்திட்டத்தின் இறுதியில் அந்த உத்தியோகத்தர்களால் உரிமையை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்காத வாகனங்கள் (உதாரணமாக மோட்டார் சைக்கிள்)

ஏனைய திணைக்களங்களுக்கு பல்வேறு செயற்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்தும் செயற்திட்டத்தின்

| | | | |
|---|---|---|---|
| | | இறுதியின் போது அந்த உரிய திணைக்களங்களால் பொறுப்பேற்கப்படாத வாகனங்கள் | |
| (ஆ) | தெடகமுவ குளத்தின் நிர்மாண வேலைக்காக 2021 மார்ச் 23 ஆந் திகதி கொள்வனவு செய்த ரூபா 30,002,500 சந்தைப் பெறுமதியான 12 மில்லிமீற்றர் அளவான 1100 இரும்புக் கம்பிகள் முறையாக ஆவணப்படுத்தப்படாது கதிர்காமம் மயிலகம பிரிவு அலுவலகத்தில் குவித்துவைக்கப்பட்டிருந்தது. | தெடகமுவ செயற்திட்டத்திற்காக கொண்டு வரப்பட்டுள்ள 12 மில்லிமீற்றர் வலிமைப்படுத்தும் கம்பிகள் வெல்லவாய பிரதான களஞ்சியத்திற்கு கொண்டுவரப்பட்டு மீண்டும் கதிர்காமம் வேலைத்தளத்திற்கு எடுத்துச் செல்லும் போது மேலதிக போக்குவரத்து செலவினை மேற்கொள்ள வேண்டி ஏற்படுவதனால் நேரடியாக கதிர்காமத்தில் அமைந்துள்ள மயிலகம பிரிவு அலுவலகத்திற்கு எடுத்துச் செல்லுதல் இடம் பெற்றுள்ளது. மேலும் இந்த நிர்மாண நடவடிக்கைகளின் போது உத்தேச தயாரிப்புக்களின் சில அளவுகள் பின்னர் மாற்றமடைந்ததனால் கட்டளையிடப்பட்ட இருப்புக்களுக்குரிய வலிமைப்படுத்தும் கம்பிகள் அனைத்தும் தெடகமுவ வேலைத்தளத்திற்கு அத்தியவசியமற்றதனால் பொறியியல் உதவியாளரினால் அவருக்கு தேவையான அளவு மாத்திரம் பொருள் அறிக்கைகளுக்கு கொண்டுவரப்பட்டது. அவ்வாறு மிகுதியாக உள்ள வலுப்படுத்தும் கம்பியை மீண்டும் களஞ்சியத்திற்கு ஒப்படைக்குமாறு பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளரின் 2022 திசெம்பர் 20 ஆந் திகதிய கடிதத்தின் | களஞ்சிய பொருட்களை கொள்வனவு செய்தல், வழங்குதல், பயன்படுத்துதல் மற்றும் ஏடுகளைப் பேணுதல் சம்பந்தமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை வலுப்படுத்துதல் வேண்டும். இருப்பு பதிவேட்டினை முறையாக பேணாமை சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக தாபன விதிக் கோவையின் II ஆம் தொகுதியில் XLVIII ஆம் அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் கீழ் ஒழுக்காற்று நடைமுறைகள் பின்பற்றப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மூலம் பொறியியல் உதவியாளருக்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | கணக்காய்வுத் திகதியான 2022 மார்ச் 08 ஆந் திகதியில் ஹிரியால பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்திற்கு இணைத்துக்கொள்ளப்பட்ட பிரிவு உதவியாளரின் பொருள் பொழிப்பின் பிரகாரம் காணப்பட்ட நிர்மாண வேலை பொருட்களின் இருப்பு மீதிகளையும் எந்தகல நிர்மாண வேலைத்தளத்தில் மற்றும் வேலைதள களஞ்சியத்தில் காணப்பட்ட இருப்பு மீதிகளையும் ஒப்பீடு செய்த போது ரூபா 6,092,193 பற்றாக்குறையாக இருந்தது. | பதிலை பின்னர் சமர்ப்பிப்பேன். | இருப்பு பவற்றாக்குறை சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு நிதிப்பிரமாணம் 101(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக தாபன விதிக் கோவையிலுள்ள ஒழுக்காற்று நடைமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும். பொறியியல் உதவியாளர்களுக்கு பொருட்களை வழங்குதல், பொருட்களைப் பயன்படுத்துதல் மற்றும் ஆவணங்களைப் பேணுதல் சம்பந்தமாக நெருக்கமான கண்காணிப்பிற்கு உட்படுத்தும் வகையில் கட்டுப்பாட்டு முறைமையை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | திணைக்களத்தின் இருப்பு புத்தகங்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 5,146,400 பெறுமதியான 7,662 சீமெந்து மூடைகள் என்தகல அணைக்கட்டு III ஆம் கட்டத்திற்காக ஹிரியால பிரிவு பொறியியல் உதவியாளருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அவற்றில் 2,784 சீமெந்து மூடைகள் பொறியியல் உதவியாளரின் பொறுப்பில் காணப்பட்டது என அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கணக்காய்வினால் இரண்டு சந்தர்ப்பங்களின் போது மேற்கொள்ளப்பட்ட பௌதீக | பதிலை பின்னர் சமர்ப்பிப்பேன். | இருப்பு பற்றாக்குறை சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்ரத்களை இனங்கண்டு நிதிப்பிரமாணம் 101(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக ஒழுக்காற்று நடைமுறைகள் பின்பற்றப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கணக்காய்வு பரீட்சிப்பின் போது ரூபா 2,269,718 கிரயமான 2,796 மூடை சீமெந்து பற்றாக்குறையாகக் காணப்பட்டது. | | |

## 3.11 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2003 ஆம் ஆண்டின் போது திணைக்களத்தின் ஒரு பொறியியலாளரினால் மேற்கொண்ட ஒரு வாகன விபத்து சம்பந்தமான இரண்டு வழக்கு தீர்ப்புக்கள் தொடர்பாக அறவிட வேண்டியிருந்த ரூபா 3,908,000 பணம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திர்த:துவைக்கப்படாது கட்டுநிதி மீதியாக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டிருந்தது. உரிய மீதி அந்த உத்தியோகத்தரின் ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து அறவிடப்பட்டிருக்காததுடன் அவரின் ஓய்வூதியத்திலிருந்து மாதாந்தம் ரூபா 10,000 ஆன பணத்தை அறவீடு செய்வதன் காரணமாக அக்காலத்தில் அறவிடப்பட்ட பணம் 300,000 மாத்திரமாகும். 2021 ஆகஸ்ட் மாதம் உரிய உத்தியோகத்தர் மரணமடைந்ததன காரணமாக மேற்கூறிய தீர்த்துவைக்கப்படாத கட்டுநிதி மீதியை தீர்த்துவைப்பதற்கு முடியாதிருந்தது. | உரிய சம்பவத்திற்கு பொறுப்பக்கூற வேண்டிய தரப்பினரான ஓய்வுபெறற பொறியியலாளரின் ஓய்வூதியத்திலிருந்து அறவிடக்கூடிய எல்லைக்குள் ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்திடம் மேற்கொள்ளப்பட்ட வாய்மொழி மூலம் கருத்துக்களை விசாரித்ததன் அடிப்படையிலான இணக்கப்பாட்டின் பேரில் அவரின் ஓய்வூதியத்திலிருந்து அறவிடக்கூடிய உச்ச அளவு ஓய்வூதியப் பணமான இப்பணம் அறிவிடப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டுள் ளது. அதற்கிணங்க அவர் ஓய்வு பெறும் வரை அறவிடக் கூடியதான மொத்தப் பணம் ரூபா 300,000 ஆகும். | உரிய விபத்து இடம்பெற்று 18 ஆண்டுகள் கடக்கும் வரை நட்டத்தை அறவீடு செய்வதற்குத் தாமதித்த மற்றும் ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து நிலுவைப் பணத்தை அறவிடாத பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.12 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ரூபா41,643,000 மொத்த கிரய மதிப்பீட்டின் அடிப்படையில் 2021 ஆகஸ்ட் 08 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்த ஹுதலியாவ குளத்தை புனரமைப்புச் செய்வதற்காக 2022 திசெம்பர் 28 ஆந் திகதி வரை ரூபா 15,455,953 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் இன்னும் செலுத்த வேண்டிய ரூபா 6,576,474 பொறுப்புக்கள் காணப்பட்டன. குளத்திலிருந்து சேற்று மண்ணை அகற்றும் நடவடிக்கைகளில் ஒரு பகுதி 2021 ஆம் ஆண்டின் ஒக்தோபர் மாதத்திலிருந்து 2022 பெப்ரவரி வரை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக ஒரு தனியார் நிறுவனத்திடமிருந்து மண்ணை வரண்டுதல், தள்ளுதல் மற்றும் ஏற்றுவதற்காக பயன்படுத்தப்படுகின்ற ஒரு பிரித்தெடுப்பினை மாத்திரம் கொண்ட இயந்திரம் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. மேற்கூறிய செயற்பாட்டினை மேற்கொள்ளகூடிய நிர்ப்பாசனத் திணைக்களத்திற்குச் சொந்தமான RS -1373 ஆம் இலக்க JCB இயந்திரத்தினை ஹுதலியாவ வேலைத்தளத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தும் அந்த இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. திணைக்களத்திற்குச் | பொறுப்புக்கள் காணப்படுவது சம்பந்தமாக இணங்கிக் கொள்கிறேன். நிகவெரடிய பிராந்திய நீர்ப்பாசன அலுவலகத்தின் PC 200 Excovator இயந்திரம் எம்போகம குளத்தின் நிர்மாண நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தன. அதனால் வாடகை அடிப்படையில் தனியார் நிறுவனத்திடமிருந்து முறைப்படியாக உடன்படிக்கை செய்து PC 200 Excavator இயந்திரம் வழங்கப்பட்டிருந்தது. இத்திணைக்களத்தின் RS- 823 ஆம் இலக்க JCB இயந்திரம் கணக்காய்வு உத்தியோகத்தர்கள் வருகை தந்த 2022 ஆகஸ்ட் 18 ஆந் திகதிக்கு முன்னர் 2022 ஆகஸ்ட் 05 ஆந் திகதி வேலை ஆரம்பித்ததன் பின்னர் முறையே 2022 ஆகஸ்ட் 06, 07, 08, 09, 10, 13 மற்றும் 14 ஆகிய திகதிகளில வேலை செய்துள்ளதுடன் முன்பக்க ஜெக்கிலிருந்து Hydrulic Oil கசிவதனால் அது இன்னும் திருத்தம் செய்யப்படாது வேலை செய்வதற்கு முடியாதிருந்ததனால் | திணைக்களத்திடம் இயந்திரங்கள் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களின் போது வாடகை அடிப்படையில் வெளி இயந்திரங்களை வழங்குதல் இடம்பெறாதிருத்தல் வேண்டும். அதன் போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகளை நிர்ணயித்து சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் வழங்கப்படுதல் வேண்டும். திணைகளத்தின் இயந்திரங்கள் விளைவற்றுக் காணப்பட்டிருந்தும் வெளியிலிருந்து வாடகை அடிப்படையில் இயந்திரங்களைப் பெற்று சேவையில் ஈடுபடுத்துகின்ற உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக விசாரணைகள் நடாத்தி ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சொந்தமான மண்ணை கிறுதல்/ வெட்டுவதற்காக பயன்படுத்தக்கூடிய வேக்ஸ் மோட்டார் கிரேடர் இயந்திரம் அனுராதபுரம் நீர்ப்பாசன அலுவலகத்திலிருந்து எடுத்து வரப்பட்டிருந்த 02 டோசர் இயந்திரம் மற்றும் நிகவெரடிய நீர்ப்பாசன அலுவலகத்திற்குச் சொந்தமான லோடர் இயந்திரமும் வேலைத்தளத்திற்கு அருகாமையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த போதிலும் அந்த இயந்திரங்களும் குத்தின் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இந்த வகையில் திணைக்களத்திடம் போதியளவு இயந்திரங்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தும் சாரதிகளுக்கு மற்றும் அந்த உதவியாளர்களுக்கு விளைவற்று சம்பளங்களை செலுத்திக்கொண்டு வாடகை அடிப்படையில் மண் வெட்டும் நடவடிக்கைகளுக்காக தனியார் தரப்பினர்களிடமிருந்து வாகனங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. | திருத்தம் செய்யும் வரை PC. 200 Excovator (வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட) இயந்திரம் மாத்திரம் சேற்று மண்ணை அகற்றுதல் மேற்கொண்டிருந்தது. மேலும் 2022 ஆகஸ்ட் 28 ஆந் திகதி திருத்தம் செய்ததன் பின்னர் திணைக்களம் JCB இயந்திரத்தினை ஹுதலியாவ குளத்தில் எதிர்கால வேலைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டது. அவ்வாறே 02 டோசர் இயந்திரங்களும் அச்சந்தர்ப்பம் வரை செயற்படும் நிலையில் இல்லாததுடன் 128 IDCT இயந்திரங்கள் செயறபடாமைக்கு முன்னர் குளத்தின் அடிப்படையிலுள்ள சேற்றுமண்ணை தள்ளி சேர்த்து வைக்கக்கூடிய இடங்களில் குவித:து வைக்கப்பட்டுள்ளது. மேலும் அச்சந்தர்ப்பத்திற்கு பொருந்துகின்ற மற்றும் அதற்கு பொருத்தமான முறையானது PC 200 Excavator இயந்திரத்தின் மூலம் வெட்டி குவித்து ஏற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட குளத்தின் அடியில் 06 அங்குலத்திற்கு மண்ணை அகற்றுவதற்கு மேலதிகமாக குளத்திற்கு மத்தியில் அண்ணளவாக 1000 சதுர மீற்றர் அளவில் இடத்துக்கு இடம் 2அடி - 2 ½ அடி அளவான ஆழத்தில் பாரிய குழிகள் ஏற்படும் வகையில் மண்ணை கழுவி மணல் பெற்றுக்கொள்வதற்கு மண் அகற்றப்பட்டிருந்ததுடன் அது சம்பந்தமான தகவல்கள் எதுவும் செயற்திட்டத்திடம் | ஹுதலியாவ குளத்தில் புனரமைப்புச் செய்யும் நடவடிக்கை 2021 ஆகஸ்ட் 08 ஆந் திதகி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் விவசாய அமைப்புக்களின் விருப்பத்துடன் 2022 செப்தெம்பர் மாதத்தின் போது குளத்தில் இருந்த நீரினை அகற்றுவதற்காக குளத்தின் அணைக்கட்டு வெட்டப்பட்டு குளத்து நீர் அகற்றப்பட்டது. 2022 பெப்ரவரி மாத்தின் | நிர்மாண செயற்திட்டங்களை திட்டமிட்டவாறு உரிய கால எல்லைக்குள் முடிவுறுத்தி அதன் பிரதிபலன்கள் பொதுமக்களுக்கு கிடைப்பதற்கு ஏற்பாடுகள் செய்தல் வேண்டும். செயற்திட்டத்தின் வேலைகளுக்காக அனுமதி வழங்கும் போது விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க |

இருக்கவில்லை. குளத்தில் நீர் தேங்கி இருப்பதற்கு தடை ஏற்படாத வகையில் சேற்றுமண்களை அகற்றுவதற்கு முடியுமாக இருந்தும் அதற்கு பதிலாக குளத்தின் நீரை ஒரு ஆண்டிற்கு அண்மித்த காலம் முழுமையாக நீக்கி மண்ணை அகற்றியதன் காரணமாக கமத்தொழிலில் ஈடுபடுகின்ற விவசாயிகளுக்கு 03 போகங்களின்லும் பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

போது நாட்டில் ஏற்பட்ட எரிபொருள் பிரச்சினையால் அபிவிருத்தி நடவடிக்கைகள் முழுமையாக நிறுத்தப்பட்டன. மீண்டும் வேலையை ஆரம்பிப்பதற்கு 2022 ஆகஸ்ட் மாத்தின் போதே முடியுமாக இருந்ததுடன் அபிவிருத்தி நடவடிக்கைகள் தாமதித்தமைக்கு பிரதான காரணமாவது நாட்டில் காணப்பட்ட பிரச்சினையான நிலைமையாகும். பிராந்திய அலுவலகங்களுக்கு கிடைத்த மட்டுப்படுத்தப்பட்ட எரிபொருள் அளவினை முகாமைத்துவம் செய்து சேற்று மண்ணை அகற்றும் செயற்பாடு மற்றும் குளத்து அணைக்கட்டின் கால்வாய்களின் மிகுதி வேலைகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டது. ஆகஸ்ட் மாதத்தின் இறுதி வரையும் வாடகை அடிப்படையில் வாகனங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அந்த தனிப்பட்ட இயந்தரமான PC 200 Excavator இயந்திரத்திற்காகவும் உரிய தனியார் நிறுவனத்திற்கு எரிபொருள் வழங்குதல் சிக்கலானதாக இருந்ததனால் அந்த இயந்திரங்களின் மூலம் வேலை செய்தல் நிறுத்தப்பட்டது. குளத்தின் மத்தியில் மண்ணை அகற்றுதலானது இயந்திர உபகரண அதிகார சபையின் மூலம் மேற்கொள்ளப்பட்டதுடன் அவர்கள் இத்திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட்டுள்ளது என செயற்திட்டத்தின் இறுதியில் பிராந்திய பொறியியலாளரினால் சான்றிதழ் வழங்கப்படுதல் வேண்டுடும்.

வேலைத்தளத்தில் பரீட்சிப்புக்களை மேற்கொள்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு இணங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது என எழுத்துமூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும். சேற்றுமண்ணை அகற்றும் நடவடிக்கையை மேற்பார்வை செய்யும் பொறுப்பு திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதனால் குளத்தில் மண்ணை கழுவி மணல் பெற்றுக்கொள்வதற்கு இடமளித்தல் சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கொண்ட நடவடிக்கைகளுடன் எந்த தொடர்பும் இல்லை எனவும் அவர்கள் குளத்தின் மத்தியில் வெட்டியிருந்த குழிகள் தொடர்பாக எந்த பொறுப்பினையும் இத்திணைக்களத்திடம் பெற்றுக்கொள்ள முடியாது எனவும் தெரிவிக்கிறேன். | |
| (இ) | 2021 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட குடாவிலச்சிய நீர்த்தேக்கத்தை புனரமைப்புச் செய்யும் செயற்திட்டத்தின் கீழ் சிறிய நீர்த் தேக்கங்களின் 05 வான்கதவுகளை புதிதாக நிர்மாணிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்ததுடன் இராஜாங்கனை நீர்த்தேக்கத்திலிருந்து அகற்றப்பட்ட நல்ல நிலையில் காணப்பட்ட 05 வான் கதவுகளை திருத்தம் செய்து அதற்காக ஈடுபடுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அந்த 05 இரும்புக் கதவுகளையும் திருத்தம் செய்வதற்கு ரூபா 94,073,866 மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் மேற்கூறிய மதிப்பீட்டுப் பணத்தில் ரூபா 10 மில்லியன் நிதி ஏற்பாடு கிடைத்திருந்ததுடன் அதில் ரூபா 9,997,582 செலவு செய்யப்பட்டு ஒரு கதவினை திருத்தம செய்தல் மற்றும் மதிப்பீட்டின் பிரகாரம் Sand Blasting Yard ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. நீர்த்தேக்கத்தின் நிர்மாணங்கள் முடிவடைந்திருக்காமை மற்றும் திருத்தம் செய்யப்பட்ட கதவுகள் நீர்த்தேக்கத்தின் நிர்மாண வேலைகளுக்காக ஈடுபடுத்தாமையின் காரணமாக அதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு கிக்கனமற்ற ஒரு செலவாக மாறியிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | சிக்கனமற்ற செலவுகளை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் திட்டமிட்டவாறு புனரமைப்பு நடவடிக்கைகளை பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஈ)** | **வெலிஓயா நீர்த்தேக்கத்தில் மணல் குவிந்திருத்தல் மற்றும் அகற்றுதல்** | | |
| | (i) 2007 ஆம் ஆண்டின் | பதில் | செயற்திட்டத்தின் |

| | | |
|---|---|---|
| போது நிர்மாணிக்கப்பட்ட வெலிஓயா நீர்த்தேக்கத்தினுள் 2017 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் 500,000 கனமீற்றர் மணல் குவிந்திருந்தது என வெலிஓயா பிராந்திய பொறியியலாளரினால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அணையின் மணல் மதகு 2017 ஆம் ஆண்டின் பின்னர் திறக்கப்பட்டிருக்காமையின் காரணமாக அதன் பின்னர் மூன்று ஆண்டுகள் கால எல்லைக்குள் அதிக அளவிலான மணல் உரிய இடத்தில் குவிந்திருந்தது. உமாஓயா தாழ்நில அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் வெலிஓயா நீர்த்தேக்கத்திலிருந்து 20 கிலோமீற்றர் அளவான துாரத்தில் அமைந்துள்ள குடாஓயா நீர்த்தேக்கத்தினை நிர்மாணிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்கு தேவையான மதிப்பீடு செய்யப்பட்ட மணலின் அளவு 109,524 கியூபிக் மீற்றர்களாகும். நீர்ப்பாசன திணைக்களம் குடா ஓயா நீர்த்தேக்கத்தின் நிர்மாண நடவடிக்கைகளை சொந்த ஊழியர்கள் மற்றும் உபகரணங்களை ஈடுபடுத்தி வேலை செய்யும் பெறுகை முறைமையின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்டிருந்ததனால் வெலிஓயா நீர்த்தேக்கத்தில் குவிந்திருந்த மணல் அச்செயற்திட்டத்தின் இயந்திரங்களைப் பயன்படுத்தி குறைந்த | வழங்கப்படவில்லை. | சாத்தியவள ஆய்வினை மேற்கொள்ளும் போது அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக தேவைப்படும் கனியப் பொருட்களை வழங்குதல் இடம்பெறும் இடங்களை சரியாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். சொந்த ஊழியர்களையும் உபகரணங்களையும் பயன்படுத்தி வேலைசெய்யும் பெறுகை முறைமையின் (Force Account) கீழ் நிர்மாண வேலைகளை அமுல்ப்படுத்துவதற்கு அங்கீகாரத்தினை வழங்கும் போது காணப்படுகின்ற வளங்களை உச்ச அளவில் பயன்படுத்துவது தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும். அதற்கு முரணாக நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கிரயத்தின் கீழ் சேர்த்து வைப்பதற்கும் அவற்றினை குடாஓயா நீர்த்தேக்கத்தின் நிர்மாண வேலைகளுக்காக ஈடுபடுத்துவதற்கும் சந்தர்ப்பம் காணப்பட்டது. எவ்வாறாயினும் குடாஓயா குளத்து அணைக்கட்டின் இந்த மணல் தேவைப்பாட்டினை நிறைவேற்றுவதற்காக ட்ரேஜின் லங்கா தனியார் கம்பனிக்கு வெலிஓயா அணையில் மணலை அகற்றுவதற்காக நீர்ப்பாசன திணைக்களம் அங்கீகாரம் வழங்கியிருந்தது. 2017 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரை அதன் நிர்மாண நடவடிக்கைகளுக்காக ரூபா 192 மில்லியன் செலவு செய்து 6,239 கியூபிக் மீற்றர் மணல் ஒரு தனியார் கம்பனியிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டது. | | |
| (ii) | உரிய கம்பனி 2018 ஆம் ஆண்டிலிருந்து அகற்றிய மணலின் அளவு தொடர்பாக எந்த அறிக்கையும் பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்தினால் பேணப்பட்டிருக்கவில்லை . | புவிச்சரித்திரவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகத்தின் அனுமதிப்பத்திர சிபாரிசின் அடிப்படையில் ட்ரேஜின் லங்கா (தனியார்) நிறுவனத்திற்கு 2018 ஆம் ஆண்டிலிருந்து மணல் அகற்றுவதற்கு தேவையான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே அந்த அனுமதிப்பத்திர நிபந்தனையின் பிரகாரம் அரசிறையை பெற்றுக்கொள்ளுதலானது புவிச்சரித்திரவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகத்தினால் | இந்த அவதானிப்பு தொடர்பாகவும் கவனம் செலுத்தி நீர்த்தேக்கத்திலிருந்து மணலை அகற்றும் நடவடிக்கையை மேற்பார்வை செய்யும் நடைமுறையை நிர்ணயித்து அது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை வலுப்படுத்துவதற்காக நிரந்தரமான சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை வழங்குதல் வேண்டும். பொற்றுப்புக்களை நிறைவேற்றத் தவறும் பிராநத்திய நிர்ப்பாசன பொறியலாளர்களை உள்ளடக்கிய |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கொள்ளப்படுகின்றது. எனவே அகற்றப்பட்ட மணலின் அளவு தொடர்பான அறிக்கை வெலிஓயா பிராந்திய நிர்ப்பாசன பொறியியலாளரினால் வைத்திருக்கவில்லை என தெரிவிக்கிறேன். | உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | திணைக்களத்தின் நிலங்களிலிருந்து கனியப் பொருட்களை அகற்றும் போது கட்டணங்கள் அறவீடு செய்வதற்கு முறையான ஒரு நடைமுறை அறிமுகப்படுத்தப்படாதிருந்ததுடன் ஒரு கியூப் மணலுக்காக ரூபா 150 வீதம் அறவிடுமாறு மொனராகல நீர்ப்பாசன பணிப்பாளருக்கு தெரியப்படுத்தியிருந்த போதிலும் அகற்றிய மணலுக்காக எந்த பணமும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீர்ப்பாசன முறைமையை புனரமைப்பதற்காக சிறிய மற்றும் மத்திய அளவிலான நீர்ப்பாசன முறைமைகளில் புதிய அபிவிருத்தி செயற்பாடுகளுக்கான கூறுகளின் கீழ் முறையே ரூபா 950 மில்லியன் மற்றும் ரூபா 310 மில்லியன் தொகைகள் அமைச்சரவை பத்திரத்தில் காட்டப்பட்டிருந்தது. அதற்கிணங்க மாதாந்த கணக்கு பொழிப்பின் பிரகாரம் செலவுகளை வகைப்படுத்துகையில் நீர்ப்பாசன முறைமையின் புனரமைப்பிற்காக 2022 ஆம் ஆண்டின் இறுதிவரை ரூபா 952,674 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது. | கட்டணம் அறவிடுவதற்கான ஒரு முறைமை இல்லாததனால் காடுகள் கட்டளைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் 2009 மே 06 ஆந் திகதிய 1600/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்டுள்ள கட்டணங்களின் பிரகாரம் காணி பயன்பாட்டுக் கட்டணம் அறவிடப்படுதல் வேண்டும். காணி பயன்பாட்டுக் கட்டணங்களை அறவீடு செய்வதற்கு நிரந்தரமான சுற்றறிக்கை அறிவுறுத்தல் வழங்கப்படுதல் வேண்டும். பொறுப்புக்களை நிறைவேற்றத் தவறிய நீர்ப்பாசன பணிப்பாளர்களை உள்ளடக்கிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

**(உ) மொனராகலை மாவட்டத்தின் துரித நீர்ப்பாசன அபிவிருத்தி வெல்லஸ்ஸ நவோதய செயற்திட்டம்**

2016 சனவரி 20 ஆந் திகதிய 15/2034/729/008 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரத்திற்காக மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் மொனராகலை மாவட்டத்தில் துரித நீர்ப்பாசன அபிவிருத்தி வெல்லஸ்ஸ

| | | | |
|---|---|---|---|
| | நவோதய செயற்திட்டம் 2016 ஆம் ஆண்டிலிருந்து அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது | | |
| (i) | அதன் போது நீர்ப்பாசன முறைமையை புனரமைப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்ட செலவான ரூபா 950 மில்லியனின் கீழ் அனுமதிக்கப்பட்ட ரூபா 1,600 மில்லியன் மதிப்பீட்டிற்கு மேலதிகமாக அமைச்சரவை தீர்மானத்திற்கு முரணாக முறையான அங்கீகாரமின்றி மொனராகலை நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம் ரூபா 1,700.5 மில்லியன் பெறுமதியை கொண்ட 47 செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்காக தொடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | தெபரஆர பாசன் கால்வாயிலிருந்து தெடகமுவ குளம் வரையான போக்குவரத்து தூரம் 59 கிலோ மீற்றர்களானதுடன் ஒரு கியூப் கருங்கல்லுக்கான போக்குவரத்துச் செலவு ரூபா 5,446.93 ஆகும். அவ்வாறே பாசன கால்வாயிலிருந்து உடைத்து அகற்றிய கல்லை நிர்ணயிக்கப்பட்ட அளவிற்கு தயார்படுத்துவதற்கு மேலதிக கிரயத்தினை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டதனால் கெபரஆர பாசன கால்வாயிலிருந்து தெடகமுவ குளம் வரை கல்லைப் பெற்றுக்கொள்ளல் இலாபகரமானதல்ல. எனினும் தெபரஆர பாசன் கால்வாயில் உடைத்து அகற்றப்படுகின்ற கல்லை அருகாமையில் அமைந்துள்ள பலஹருவ, கல்வெவ, வடகலஆர, தெபுஆர ஆகிய குளங்களில் அலை தடுப்பினை நிர்மாணிப்பதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. | கிரயத்தினை குறைப்பதற்குத் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை வலுப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அங்கீகரித்த செலவு எல்லையை மிகைத்து செலவு செய்வதற்கு மதிப்பீடு செய்யாதிருத்தல் வேண்டும். |
| (ii) | 2016 இலிருந்து 2019 வரையான காலத்தில் செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தும் அக்காலத்தில் பூர்த்திசெய்யப்பட்டிருக்க வில்லை. 2020 சனவரியிலிருந்து 2022 செப்தெம்பர் வரையான செயற்திட்ட நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதற்காக | நீர்ப்பாசன முறைமையை புனரமைப்புச் செய்வதற்காக சிறிய மற்றும் மத்திய அளவிலான நீர்ப்பாசன முறைமைகளின் புதிய அபிவிருத்தி செயற்பாடுகளுக்கான கூறின கீழ் முறையே ரூபா 950 மில்லியன் மற்றும் ரூபா 310 மில்லியன் தொகைகள் அமைச்சரவை பத்திரத்தில் | செயற்திட்டத்திற்காக அங்கீகாரத்தினை வழங்கும் போது அமைச்சரவையின் முன் அங்கீகாரமின்றி அங்கீகரித்த எல்லையை மிகைத்து செலவு செய்யப்படாதிருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 403,036,448 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 1,025 மில்லியன் முழுப்பணமும் செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க அங்கிகரித்த செலவு எல்லையை மிகைத்து ரூபா 650 மில்லியன் மதிப்பீட்டினை அங்கீகரிப்பதற்கும் அந்த எல்லையை மிகைத்து ரூபா 75 மில்லியனை செலவு செய்வதற்கும் மொனராகலை நிர்ப்பாசன பணிப்பாளர் நடவடிக்கை எடுத்திருந்தார். | காட்டப்பட்டுள்ளது. அதற்கிணங்க மாதாந்த கணக்கு பொழிப்பின் பிரகாரம் செலவுகளை வகைப்படுத்துகையில் நிர்ப்பாசன முறைமையை புனரமைப்பதற்காக 2022 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 952.674 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது. எனினும் செயற்திடட் அறிக்கையில் பெரிய மற்றும் மத்திய அளவிலான நீர்ப்பாசன முறைமைகளின் விவசாய பாதைகளை உள்ளடக்கிய பிரதான வேலைகள், பிரதான மற்றும் உப கால்வாய்கள் என்பவற்றை புனரமைத்தல் நவீனமயப்படுத்தல் மற்றும் மேம்படுத்துவதற்காக அதேபோல சிறிய நீர்ப்பாசன முறைமைகளின் வீதிகள் மற்றும் நுழைவுப் பாதைகளை உள்ளடக்கிய பிரதான வேலைகள், பிரதான மற்றும் உப கால்வாய் முறைமைகளை புனரமைத்தல், நவீனமயப்படுத்துதல் மற்றும் மேம்படுத்தலுக்காக முறையே ரூபா 1200 மில்லியன் மற்றும் ரூபா 1,085 மில்லியன் செயற்திட்ட அறிக்கையில் ஒதுக்கீடு செய்யப்பட்டது. | |
| (iii) | இச்செயற்திட்டத்தின் கீழ் மொனராகல வலயத்திற்குரிய சில குளங்களின் அலைதடுப்புக்களை தயார்படுத்துவதற்காக ரூபா 9,570,000 செலவு செய்து 2,482 கியூப் கருங்கற்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் | தெபர ஆர ஊட்டக்கால்வாயிலிருந் து தொடகமுவ குளம் வரையான போக்குவரத்து துாரம் 59 கிலோ மீற்றர்கள் ஆனதுடன் ஒரு கியூப் கருங்கல்லுக்கான போக்குவரத்துச் செலவு ரூபா 5,446.93 ஆகும். அவ்வாறே ஊட்டக் | கிரயத்தினை குறைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். முடியுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் காணப்படுகின்ற வளங்களை உச்ச |

| | | | |
|---|---|---|---|
| | இச்செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்ட கால எல்லைக்கு சமாந்தரமாக 2016 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை அமுல்ப்படுத்தப்பட்ட உமாஓயா தாழ்ந்த பள்ளத்தாக்கினை அபிவிருத்தி செய்தல் மற்றும் தெபர ஆர கால்வாய் செயற்திட்டத்தின் கீழ் கால்வாய்கள் மற்றும் சுரங்கப் பாதைகளை நிர்மாணிக்கும் போது அதிக அளவான கருங்கற்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டிருந்தும் அக்கருங்கற்களை பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்வதன் மூலம் கிரயத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கால்வாயிலிருந்து உடைத்து அகற்றிய கல்லை நிரணயிக்கப்பட்ட அளவிற்கு தயார்படுத்துவதற்கு மேலதிக செலவினை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டதனால் தெபர ஆர குளம் வரை கற்களைப் பெற்றுக்கொள்ளுதல் இலாபகமானது அல்ல. எனினும் தெபர ஆர, ஊட்டக் கால்வாயிலிருந்து உடைத்து அகற்றப்படுகின்ற கற்கள் அருகாமையில் அமைந்துள்ள பலஹருவ, கல்வெவ, வடகல ஆர மற்றும் தெபுஆர குளங்களின் அலைதடுப்பினை நிர்மாணிப்பதற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளது. | அளவில் பயன்படுத்துவதற்கு சுற்றறிக்கையின் மூலம் அறிவுறுத்தல் வழங்கப்படுதல் வேண்டும். |
| (ஊ) | ஹிம்பிலியாகட நீர்ப்பாசன உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் செயற்திட்டத்திற்காக 2022 ஆம் ஆண்டின் போது திணைக்களத்தின் 08 இயந்திரங்கள் 2022 ஆம் ஆண்டில் 970.6 மணித்தியாலங்கள் செயற்பட்டு மேலதிகமாக தனியார் துறையிடமிருந்து வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட இயந்திரங்களுக்காக வெளி வழங்குனர்களுக்கு ரூபா 24,523,761 தொகை செலுத்தப்பட்டது. எவ்வாறாயினும் அச்செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்படுகின்ற இடங்களுக்கு 10 கிலோ மீற்றருக்கும் 51 கிலோ மீற்றர்களுக்கும் இடைப்பட்ட தூரத்தில் மினிப்பே பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்தின் 09 இயந்திரங்களும் நிறுத்தப்பட்டிருந்தும் அவற்றினை பயன்படுத்துவதற்கு உள்ள இயலுமையானது | எரிபொருளை பெற்றுக்கொள்ளும் சிக்கலின் அடிப்படையில் திணைக்களத்தின் இயந்திரங்களை வேலைத்தளத்தில் பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | திணைக்களத்தின் இயந்திரங்களை இயக்குபவர்கள் மற்றும் இயந்திரங்களை உச்ச அளவில் செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்தப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. அந்த இயந்திரங்கள் ஆண்டின் போது 987 மணித்தியாலங்கள் மாத்திரம் செயற்படடிருந்தன. | | |

## 3.13 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்கப்படாமை

திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட கீழே விபரங்கள் குறிப்பிட்ட கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2023 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையும் பதில் அனுப்பப்படவில்லை.

| கணக்காய்வு ஐயவினாக்கள் தொடர்பான விபரம் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக வழங்கப்பட்ட 03 கணக்காய்வு ஐய வினாக்கள் | பதில் தயாரிக்கப்பட்டு வருகின்றது. | உரிய ஆவணங்களின் சான்றுபடுத்தப்பட்ட பிரதியுடன் அனைத்து கணக்காய்வு ஐய வினாக்களுக்குமாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் ச்சட்டத்தின் 38(உ) பிரிவின் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் உரிய கணக்காய்வு ஐய வினாவினை விலாசமிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களினால் முறைப்படியாக பதிலினைச் சமர்ப்பித்தல் வேண்டும். |

## 3.14 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) நீர்த்திட்டங்கள், குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களில் அனுமதியற்ற நிர்மாணங்கள் மற்றும் பயிர்ச் செய்கைகள் | | |
| (i) திணைக்களத்திடம் காணப்படுகின்ற 387 நீர்த்திட்டங்கள், குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களில் 116 குளங்கள் மற்றும் நீர்த்தேக்க | அனுமதியற்ற குடியிருப்புக்கள் அல்லது பயிர்ச் செய்கைகள் உள்ள குளங்கள்/ | அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் சம்பந்தமான தகவல் முறைமையை தயாரித்து |

| | | | |
|---|---|---|---|
| | பாதுகாப்பு பிரதேசங்களின் சரணாலயங்களில் அனுமதியற்ற குடியிருத்தல்கள் அல்லது பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.1946 இன் 32 ஆம் இலக்க நிர்ரபாசன கட்டளைச் சட்டத்திலுள்ள 65 ஆம் பிரிவில் மற்றும் நீர்ப்பாசன சரணாலய எல்லை, திணைக்களத்தின் காணிகளை பாதுகாப்பதற்கும் விடுவிப்பதற்குமாக நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தினால் 2014 திசெம்பர் 01 ஆந் திகதி வழங்கிய் 08/2014 ஆம் இலக்க திணைக்கள சுற்றறிக்கையின் ஏற்பாடுகளைப் பின்பற்றி இது சம்பந்தமாக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீர்த்தேக்கங்களின் எண்ணிக்கை தொடர்புபட்டதானது எந்த குளங்கள் சம்பந்தமாக தலையாய வேலைகள் அல்லது கால்வாய் முறைகள் சம்பநதமாக என்பதாயின் நீரோட்டத்திற்கு எதிராகவா (updownstream) நீரோட்டத்திலா (னழறளெவசநயஅ) என்பதுவும் தெளிவற்றதாகும். 8/2014 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 01 மற்றும் 03 ஆம் பந்தியின் பிரகாரம் பாதுகாப்பு பிரதேசங்கள் இனங்காணப்படுதல் வேண்டும். அது தொடர்பாக நாளதுவரையான தகவல் முறைமை காணப்படுதல் வேண்டும். | நாளதுவரையாக பேணுதல் வேண்டும். அனுமதியற்ற செயற்பாடுகள் சம்பந்தமாக நிர்ப்பாசன கட்டளைச் சட்டத்தில் குறிப்பிட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்க சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | சில பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாயளர் அலுவலகங்களின் குளங்கள்/ நீத்தேக்கங்கள் சம்பந்தமாக நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தின் 2014 திசெம்பர் 01 ஆந் திகதிய 08/2014 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 01 மற்றும் 03 ஆம் பந்தியின் பிரகாரம் திணைக்களத்தின் மூலம் நிருவகிக்கின்ற குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களின் பாதுகாப்பு பிரதேச எல்லைகளை இனங்கண்டு அதன் பரப்பளவு தொடர்பான தகவல்கள் பேணப்பட்டிருக்கவில்லை. தொல்பொருள் பெறுமதியுள்ள திஸ்ஸவெவ குளத்தின் பாதுகாப்பு பிரதேசத்தினுள் வேளாண்மை செய்யப்பட்டிருந்தும் மேற்கூறிய அனுமதியற்ற பயிர்ச் செய்கை சம்பந்தமாக மேற்கூறிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காதும் அங்கீகாரமின்றியும் அனுமதியற்ற பயிர்ச் செய்கைகளானது குளத்தின் எல்லைக்கு வெளியே இருக்கும் வகையில் குளத்தினுள் கால்வாய்கள் வெட்டி | நிர்ப்பாசன கட்டளைச் சட்டத்தின் 115 ஆம் பிரிவின் பிரகாரம் நில அளவையாளர்கள் நாயகத்தின் அல்லது நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தின் அதிகாரத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது என கூறுகின்ற ஏதாவது திட்ட வரைபடம் அல்லது நில அளவைகளின் மூலம் ஏதாவது கால்வாய்கள், நீர் வழிகள் அல்லது குளம் அனுமதியின்றி பிடிக்கப்பட்டுள்ளது எனத் தோன்றுமாகவிருந்தால் அதற்கு முரணாக திருப்திகரமான சான்று இல்லாத சந்தர்ப்பத்தில் அந்த திட்ட வரைபடம் அல்லது நில அளவையானது (Plan or Survey) அதில் காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக தீர்மானமிக்க ஒரு சான்றாக கருதப்படும். | 08/2014 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 01 மற்றும் 03 ஆம் பந்தியின் பிரகாரம் பாதுகாப்பு பிரதேசங்கள் இனங்காணப்படுதல் வேண்டும். அது தொடர்பான நாளதுவரையான தகவலள் முறைமை பேணப்படுதல் வேண்டும். சுற்றறிக்கையின் 4.4 ஆம் பந்தியின் பிரகாரம் திஸ்ஸவெவ குளத்தின் சரணாலயம் இனங்காணப்படுதல் வேண்டும். குளத்தின் சரணாலயத்திற்குள் அனுமதியற்ற பயிர்ச் செய்கைகளை மேற்கொண்ட நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அகுளத்தைச் சுற்றி பாதைகள் தயார்படுத்தப்பட்டுக் காணப்பட்டது. | பிராந்திய நிர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம் மற்றும் வலய நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகத்திடம் காணப்படுகின்ற திட்ட வரைபடம் அல்லது நில அளவை தொடர்பாக விசாரணைகள் செய்யப்படுள்ளதுடன் மேற்கூறிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டும் குறிப்பிட்ட சுற்றறிக்கையிலுள்ள அறிவுறுத்தல்களை கருத்தில்கொண்டும் நீர்ப்பாசன முறைமைகளின் பாதுகாப்பு எல்லைகள் தொடர்பான தகவல்களை முறைப்படியாக பேணி வருவேன். இந்த நிர்மாணங்கள் தொடர்புபட்ட சம்பவங்கள் மற்றும் அதன் நிகழ்கால நிலைமைகள் தொடர்பாக பிராந்திய நீர்ப்பாசன பெறியியலாளரிடமிருந்து (திஸ்ஸமஹராம) விடயங்கள் விசாரிக்கப்பட்டுள்ளதுடன் தகவல்கள் கிடைத்ததன் பின்னர் துரிதமாக சமர்ப்பிப்பேன். | |
| (iii) | 1946 இன் 32 ஆம் இலக்க நீர்ப்பாசன கட்டளைச் சட்டத்தின் 285 ஆம் அத்தியாயத்தின் 64 ஆம் பிரிவின் பிரகாரம் நீர்ப்பாசன திணைக்களத்தினால் அதன் கீழ் நிருவகிக்கப்படுகின்ற பிரதான மற்றும் மத்திய அளவிலான நீர்த்திட்டங்கள், பிரதான ஆற்றுப் பள்ளத்தாகு நீர் பாசன மற்றும் சரணாலயங்களின் பாதுகாப்பு, அனுமதியற்ற நிர்மாணங்களையும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்துதல், நீரினை அசுத்தப்படுத்துவதனை தவிர்த்தல், அனுமதியற்ற நீர்ப்பாவனையை | நீர்ப்பாசன கட்டளைச் சட்டத்தின் விடயப்பரப்பிற்குரிய நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற நிர்ப்பாசன வேலைகளைப் பாதுகாத்தல், நீர்பாசன சரணாலயங்களின் அனுமதியற்ற செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தி செயற்பாடுகள் மற்றும் பராமரிப்புக்களை மேற்கொள்ளுதல், நீர்ப்பாசன கட்டளைச் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள | நீர்ப்பாசன கட்டளைச் சட்டத்தின் 285 ஆம் அத்தியாயத்தின் 64 ஆம் பிரிவில் குறிப்பிட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கட்டுப்படுத்துதல் மற்றும் நீர்ப்பாசன திட்டங்களை பராமரிக்க வேண்டிய போதிலும் அது சம்பந்தமாக முறையான ஒழுங்குபடுத்துதலினை மேற்கொள்வதற்கு தேவையான வரையறைகள் வழங்கப்படவில்லை. | ஏற்பாடுகளைப் பின்பற்றி நீர்ப்பாசன கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நிகழ்காலத்தில் மேற்கொள்ளப்பட்டது. | |
| (ஆ) | நீர் வளங்கள் அபிவிருத்தியும் வெள்ளப் பெருக்கும் | | |
| (i) | முன் கணிப்பிற்காக பௌதீக அளவீடுகளைப் பெற்றுக்கொள்கின்ற 42 நீர் அளவீட்டு உபகரணங்களும், 52 முனைய நீர் அளவீட்டு உபகரணங்கள், மற்றும் சுயமாக செயற்படும் 106 மழை மற்றும் நீர் அளவீட்டு உபகரணங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தும் அவற்றினை பயன்படுத்துவதன் மூலம் தரவுகளை சேகரிக்கின்ற மற்றும் பொழிப்பாக்குகின்ற முறைமை, தரவுகள் மற்றும் தயாரிக்கப்பட்ட தகவல்களை களஞ்சியப்படுத்தி வைக்கின்ற முறைமைகள், தரவுகள் மற்றும் தகவல்களை வேண்டுகின்ற தரப்பினர்களுக்கு தகவல்களை வழங்குவதனையும் தகவல்களின் சரியான தன்மையையும் உறுதிப்படுத்துகின்ற முறைமை இடர் முகாமைத்துவத்தின் போது ஏனைய நிறுவனங்களுடன் தொடர்புகொள்கின்ற முறைமை, தகவல்களை பகிரங்கப்படுத்துகின்ற முறைமை முதலியவை சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய திணைக்களத்தின் நீர் விஞ்ஞான மற்றும் இடர் முகாமைத்துவ பிரிவினால் மாதிரி விபரக் குறிப்புக்கள் மற்றும் நடைமுறைகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்டுள்ள அனைத்து விடயங்கள் சம்பந்தமாகவும் நிர்ணயிக்கப்பட்ட தொழில்நுட்ப நடைமுறை பின்பற்றப்படுகின்றது என குறிப்பிடுகிறேன். எனினும் எழுத்துமூலமான கையேடு தயாரிக்கப்பட்டிருக்காதத ால் அவ்வாறான கையேட்டினை எதிர்காலத்தில் தயாரித்து சமர்ப்பிப்பேன். | தரவுகளை சேகரித்தல், தயாரித்தல், களஞ்சியப்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் சம்பந்தமாக செயற்பட வேண்டிய முறைமை தொடர்பாக நிர்ணயிக்கப்பட்ட சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்கள் வழங்கப்படுதல் வேண்டும். |
| (ii) | 106 நீர் அளவீட்டு உபகரணங்களுக்கு மத்தியில் 77 நீர் அளவீட்டு உபகரணங்களும் 61 மழைவீழ்ச்சி அளவீட்டு உபகரணங்களும் செயற்படாடற்று காணப்பட்டன. அவற்றிற்கு மத்தியில் சில 2017 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்த முடியாத நிலைமைக்கு மாறியிருந்த போதிலும் முன்னைய ஆண்டின் போது அவற்றினை திருத்தம் செய்து | சுயமாக செயற்படும் நீர் அளவீட்டு உபகரணம் DSWRP செயற்திட்டத்தின் கீழ் 2014 ஆம் ஆண்டு பொருத்தப்பட்டுள்ளது. அவற்றில் சில உபகரணங்கள் பழுதடைதல் ஏற்படுகையில் அதுவரை செயற்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த | செயற்படாது காணப்பட்ட நீர் அளவீட்டு உபகரணத்தை திருத்தம் செய்து செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். நீர் அளவீட்டு உபகரணத்தின் தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக |

| | | | |
|---|---|---|---|
| | வேலையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் நீர் அளவீட்டு உபகரணத்தின் தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஈடுபடுத்தப்பட்ட ஊழியர்கள் தனியான பிரிவு அலுவலகத்தினை தோற்றுவித்து அதற்கு கொள்ளப்பட்டிருந்தன. | உதிரிப்பாகங்களைப் பயன்படுத்தி திருத்தம் செய்தல் மேற்கொள்ளப்பட்டது. | ஈடுபடுத்தப்பட்ட ஊழிர்கள் நிறுவனத்தில் அமைந்துள்ள பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்தின் மேற்பார்வைக்கு உட்படுத்தப்படுதல் வேண்டும். |
| (இ) | இலங்கையில் 213 சிறிய நிர் மின் நிலையங்களின் (Mini Hydro Power) மூலம் 2022 ஆம் ஆண்டில் 1,375,965,915 கிலோ வெட் (Kwh) மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்த போதிலும் இதற்காக நீர்ப்பாசன திணைக்களத்தின் சுற்றாடல் பிரிவின் மூலம் சிபாரிசினை சமர்ப்பிக்கும் போது நிரந்தரமான ஒரு நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | சிறிய நீர் மின் நிலைய செயற்திட்டத்திற்காக திணைக்களத்தினால் சிபாரிசுகளை வழங்கும் போது நீர் விஞ்ஞானப் பிரிவின் சிபாரிசு, நீர் வளங்கள் அபிவிருத்திப் பிரிவின் சிபாரிசு, நீர்ப்பாசன வலய அலுவலகத்தின் சிபாரிசு, வெளிக்கள பரீட்சிப்பின் அவதானிப்புக்கள் மற்றும் சுற்றாடல் தாக்க ஆய்வு அறிக்கையின் விடயங்களை கவனித்துப் பார்த்து நீர்ப்பாசன திணைக்களத்தின் சிபாரிசுகள் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு வழங்கப்பட்டது. இந்த நடமுறையானது 2022 ஆம் ஆண்டின் போது சிறிய அளவிலான நீர்மின் நிலையத்திற்காக சிபாரிசுகளை வழங்கும் போது அமுல்ப்படுத்தப்பட்டது. | சிறிய நீர் மின் நிலையங்களை நிர்மாணிப்பதற்காக அங்கீகாரத்தினை வழங்கும் போது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய முறைமை தொடர்பாக நிரந்தரமான சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் வழங்கப்படுதல் வேண்டும். சிறிய நீர் மின் நிலையம் சம்பந்தமான தரவு முறைமை பேணப்படுதல் வேண்டும். |
| (ஈ) | 2017 யூலை 18 ஆந் திகதிய அமப/17/1456/729/017 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம கல்கமுவ நீர்ப்பாசன பயிற்சி நிறுவனத்தில் சர்வதேச மட்டத்திலான பயிற்சி கற்கைநெறிகள் மற்றும் செயலமர்வுகளை நடாத்துவதற்காக 2017 ஆம் ஆண்டின் போது அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் கடந்த 06 ஆண்டுகளில் சர்வதேச மட்டத்திலான பயிற்சி கற்கை நெறி எதுவும் நடாத்தப்படவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க சர்வதேச மட்டத்திலான பயிற்சி நெறிகள் மற்றும் செயலமர்வுகளை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

# 4 நல்லாட்சி

## 4.1 பொதுமக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திணைக்களத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட பெரிய அளவிலான மற்றும் மத்திய அளவிலான 19 செயற்திட்டங்களுக்காக ரூபா 158,242 மில்லியன் தொகையும் ஏனைய 07 செயற்திட்டங்களுக்காக ரூபா 43,375 மில்லியன் தொகையும் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் இந்த செயற்திட்டங்களுக்காக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே ரூபா 60,056 மில்லியன் மற்றும் ரூபா 15,787 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. இவற்றிற்கு மத்தியில் 17 செயற்திட்டங்களுக்காக நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து சமர்ப்பித்திருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்ற அனைத்து பெரிய அளவிலான மற்றும் சிறிய அளவிலான செயற்திட்டங்கள் சம்பந்தமாக வருடாந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2018 மே 21 மற்றும் 2019 யூன் 24 ஆந் தகிதிய DMA/PRF/10/2019/01 ஆம் இலக்க கணக்காய்வு வழிகாட்டிக் கடித்தின் பிரகாரம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியளிப்பு மூலம் அமுல்ப்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி | 2022 பெப்ரவரி 07 ஆந் திகதிய 01/2022 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் (01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கைக்கு | சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஸ்தாபிக்கப்பட்டு ஆகக் குறைந்தது ஒரு அண்டிற்கு இரண்டு குழுக் கூட்டங்களை நடாத்தி அச்செயற்திட்டங்களின் செயற்பாட்டு |

| | | |
|---|---|---|
| செயற்திட்ட அலுவலகங்களில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஸ்தாபிக்கப்பட்டு ஆகக் குறைந்தது ஒரு ஆண்டிற்கு நான்கு குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதிகளில் அமுல்ப்படுத்தப்பட்ட 26 செயற்திட்டங்களினால் கணக்காய்வு மற்றும் முகாமைத:துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்படவில்லை. | இணங்க) செயற்திட்ட காலம் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட மற்றும் மொத்த கிரயம் அமெரிக்க டொலர் 05 மில்லியனை மிகைத்த செயற்திட்டங்களுக்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு தோற்றுவிக்கப்பட வேண்டும் எனவும் செயற்திட்டத்தின் உள்ளகக் கணக்காய்வு மீளாய்வு குழுக்கள் 02 கூட்டங்களை நடாத்த வேண்டும் எனவும் அமைச்சு மட்டத்தின் போது அரையாண்டு குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. திணைக்களத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட மேற்கூறிய வரையறைகளுக்கு உட்பட்டு செயற்திட்டங்களுக்காக ஒரு உள்ளகக் கணக்காய்வாளர் நியமிக்கப்படவில்லை. எனவே செயற்திட்டத்தின் உள்ளகக் கணக்காய்வுக் குழு கூடட்டங்களை நடாத்துவதற்கு முடியாதுள்ளது. எனினும் 2022 ஆம் ஆண்டில் திணைக்கத்திற்காக 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் அனைத்து செயற்திட்டங்கள் தொடர்பாக உருவாகிய விடயங்களும் கலந்துரையாடப்பட்டது. | நடவடிக்கைகள் முறையான மேற்பார்வைக்கு உட்படுத்தப்படுதல் வேண்டும். |

## 5 மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் அங்கீகரித்த நிரந்தர ஆளணியினர் 7007 ஆகவும் உள்ளபடியான ஆளணியினர் 5387 அகவும் இருந்ததுடன் அதற்கு மேலதிகமாக நாளாந்த சம்பளம், நிறைவேற்றிய செயற்பாடுகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளின் அடிப்படையிலான சேவை உடன்படிக்கையின் கீழ் பல்வேறு செயற்பாடுகளுக்காக வெளி நபர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அவ்வாறான ஆளணியினர் 334 ஆக இருந்ததுடன் அவர்களில் 04 நபர்கள் அலுவலகங்களுக்கு இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர். | பதில் வழங்கப்படவில்லை. | திறைசேரியின் அங்கீகாரமின்றி சேவை உடன்படிக்கைகள் மற்றும் ஏனைய சேவை உடன்படிக்கைகளின் கீழ் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படாதிருத் தல் வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்தின் பொறியியல் உதவியாளர் சேவையின் சேவைக் குறிப்பின் 7.2.1.2 (ஆ) I ஆம் பிரிவின் பிரகாரம் III ஆம் தரத்தின் நேரடி ஆட்சேர்ப்பிற்கான தொழில்சார் தகமையாக கல்கமுவ நீர்ப்பாசன பயிற்சி நிறுவனத்தில் நீர்ப்பாசன பொறியியலாளர் டிப்ளோமாவினை பின்பற்றி ஒரு சான்றிதழினை பெற்றிருத்தல் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அந்த டிப்ளோமா NVQ-06 மட்டத்திலானதாக இருத்தல் வேண்டும். சேவை பிரமாணக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டு 05 ஆண்டுகள் கடந்திருந்தும் உரிய பொறியியல் டிப்ளோமாவிற்காக NVQ-06 மட்டத்தினை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருககவில்லை. | கல்கமுவ நீர்ப்பாசன பயிற்சி நிறுவனத்தில் நடாத்தப்படுகின்ற நீர்ப்பாசன பொறியலாளர் டிப்ளோமா கற்கை நெறிக்காக NVQ-06 மட்டத்தினை பெற்றுக்கொள்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள் ளதுடன் 2014 ஒக்தோபர் 02 ஆந் திகதியிலிருந்து 2016 ஒக்தோபர் 01 ஆந் திகதி வரை செல்லுபடியாகும் வகையில் தற்காலிக பதிவும் வழங்கப்பட்டுள்ளது. | நீர்ப்பாசன பொறியியல் டிப்போளா NVQ-06 மட்டத்தினை அங்கீகரித்துக்கொள்வத ற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கல்கமுவ நீர்ப்பாசன பயிற்சி நிறுவனம் மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவின் பதிவு செய்தலினைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | திணைக்களத்தின் அமைப்பு வரைபடம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கிணங்க தயாரிக்கப்பட்ட அமைப்பு வரைபடம் சமர்ப்பிக்கப்பட்டது. | திணைக்கள அமைப்பு வரைபடம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |